


# வாழ்விற்கு வழிகாட்டும்
# ஆன்மீகப் போதனைகள்



சிவபாபா



சீரடி சாயி பாபா



சத்திய சாயி பாபா

தொகுப்பு

**திருமதி சிவபாக்கியம் சற்குணநாதன்**


# 3 ஆவது ஆண்டு நினைவு நாள்



அமரர்

# செல்லையா சற்குணநாதன்

# "வாழ்விற்கு வழிகாட்டும் ஆன்மீகப் போதனைகள்"



சிவபாபா



சீரடி சாயிபாபா



சத்திய சாயி பாபா

வெளியீடு

திருமதி சிவபாக்கியம் சற்குணநாதன்

# நூல் தொகுப்பு

| | | |
|---|---|---|
| நூல் : | :- | வாழ்விற்கு வழிகாட்டும் ஆன்மீகப் போதனைகள் |
| நூல் தொகுப்பு | :- | திருமதி.சிவபாக்கியம் சற்குணநாதன் |
| எழுத்துரு | :- | செல்வி வரதராஜா சாமினா,<br>செல்வி நவரத்தினம் கீர்த்திகா |
| வடிவமைப்பு | :- | செல்வி விஸ்வநாதன்.ஜெனனி |
| உதவி | :- | திரு.சி.அ.யோதிலிங்கம் |
| மீள்பார்வை | :- | திருமதி. ஈஸ்வரி யோதிலிங்கம்<br>நவரத்தினம் கீர்த்திகா |
| வெளியீடு | :- | திருமதி.சிவபாககியம் சற்குணநாதன் |
| அச்சுப்பதிப்பு | :- | ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ்<br>யாழ்ப்பாணம். |

# முன்னுரை

"வாழ்விற்கு வழிகாட்டும் ஆன்மீகப் போதனைகள்" என்ற பெயரில் சத்திய சாய்பாபா, சீரடி பாபா, சிவ பாபா ஆகியோரின் போதனைகளை நூல்வடிவில் வெளியிடுகின்றோம். சாதாரண வாழ்க்கையைப் போலவே ஆன்மீக வாழ்க்கையும் மனிதர் களுக்கு முக்கியம். உடல் சுகாதாரத்தையும், உளச்சுகாதாரத் தையும் ஒருங்கே பேணுவதற்கு ஆன்மீக வாழ்க்கை மிகவும் உதவுகின்றது. மனிதன் ஒரு சமூகப் பிராணி தனித்து அவனால் வாழ முடியாது. கூட்டாக வாழ வேண்டும். மற்றவர்களை நேசிப்பது, மற்றவர்களுக்கு உதவுவது, எளிமையாக வாழ்வது, என்பது கூட்டு வாழ்க்கைக்கு மட்டுமல்ல தனி மனித வாழ்க்கைக்கும் அவசியம். ஆன்மீக வாழ்க்கை இதற்கான பயிற்சியைக் கொடுக் கின்றது.

ஆன்மீக வாழ்க்கை என்று வரும் போது உற்சாக மனமும், பற்றற்ற நிலையும் அவசியம். "ஓட்டையும் செம்பொன்னை யும் ஒப்பவே நோக்குதல்" ஆன்மீகவாதிகளின் மிக முக்கிய பண்பு. அவர்கள் வெறுமனவே போதனைகளைச் செய்ய வில்லை. அனுபவ ரீதியாக வாழ்ந்து காட்டியவர்கள். இந்த வாழ்ந்து காட்டுதல் என்பது தான் சாதாரண மக்களைப் பொறுத்த வரை முக்கியமான விடயம்.

உலகம் முழுவதுமுள்ள இம் மூவரினதும் பக்தர்கள் ஆன்மீகம் சம்பந்தமான விடயங்களோடு மட்டும் தங்கள் பணி களை நிறுத்தவில்லை. கல்விப்பணி, மருத்துவப் பணி என பல பணிகளைச் செய்து வருகின்றனர். சத்திய சாய்பாபா அவதரித்த இடமான "புட்டபத்தி" இதற்கு நல்ல உதாரணம். அங்கு

சாய் நிலையம் பாடசாலை, பல்கலைக்கழகம், மருத்துவமனை என பல பொதுநலத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

ஆன்மீகவாதிகள் அறிஞர்களின் நூல்களை நான் விரும்பி வாசிப்பதுண்டு. அவர்களின் உரைகளையும் விரும்பிக் கேட்ப துண்டு. அவர்களின் முக்கிய கருத்துக்களை உடனடியாகவே குறிப்பெடுத்து விடுவேன். இது நீண்டகாலமாக நான் மேற் கொள்ளும் செயற்பாடாகும். இவ்வாறு குறிப்பெடுத்தவற்றை எனது சகோதரி சோதிக்கு காட்டியபோது இவற்றை தொகுத்து நூ லாக முன்வைத்தால் மற்றவர்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்ற ஆலோசனையை முன்வைத்தார். அதன் பின்னர் தான் நூலாக வெளியிடும் எண்ணம் வந்ததும் இவ் எண்ணத்தை நூல்வெளியிட்டு அனுபவம் கொண்ட எனது மைத்துனர் ஓய்வு பெற்ற ஆசிரியர், சட்டத்தரணி ஜோதிலிங்கத்திற்கு தெரிவித்த போது அவர் தானே அதனைப் பொறுப்பெடுத்து அச்சிடும் பணிகளை மேற்கொள்வதாக குறிப்பிட்டார். இந்த நூல் பிறந்த வரலாறு இது தான்.

இந்நூலில் வெளிவருபவை அனைத்தும் நான் வாசித்த நூல்களான சுவாமி, முறறி, தபோவனம், சத்தியம் சிவம் சுந்தரம், சனாதனா சராதி ஆகிய நூல்களிருந்து தொகுக்கப்பட்ட வையாகும். ஆன்மீக வாழ்க்கைக்கு இவை பெரிதும் உதவும் என்ற வகையில் சிரமப்பட்டு தொகுத்திருக்கிறேன். இத்தொகுப்பில் ஏதாவது தவறுகள் இருந்தால் பொறுத்தருள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது கணவர் காலஞ்சென்ற செல்லையா சற்குணநாதன் அறநெறி ஒழுக்கங்களுடன் வாழ்ந்தவர். தான் பிறந்த வீட்டுப் பொறுப்புக்களை எந்த விதக் குறையும் இல்லாமால் சிறப்பாக நிறைவேற்றியவர். திருமணம் செய்த பின்னர் சொந்தக்

குடும்பக் கடமைகளையும் சிறப்பாக மேற்கொண்டார். தமது இரு பிள்ளைகளையும் சிறந்த கல்வியாளர்களாக வளர்த்ததோடு மற்றையவர்கள் போற்றும் வகையில் மனிதர்களை நேசிக்கும் பிள்ளைகளாகவும் வளர்த்தெடுத்தார். அவர் ஆன்மீக வாழ்க்கையிலும் பெருவிருப்புக் கொண்டவர். தன்னால் முடிந்த வரை ஆன்மீக வாழ்க்கையை வாழ முயற்சித்தவர். எதையும் நேரம் தவறாமல் செய்வது அவரது முக்கிய பண்பு. அதிகாலை யிலேயே துயிலெழுந்து தமது வீட்டிற்கு அருகிலுள்ள வரதராஜா விநாயகரை வழிபடச் சென்று விடுவார். சாய் நிலையத்துடனும் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்த வர். அவரது நினைவாக இந்நூலை வெளியிடுவதில் நான் மக-ிழ்ச்சியடைகிறேன்.

இந்நூலை தட்டச்சு செய்த ந.கீர்த்திகா, வ.சாமினா பக்க வடிவமைப்பு செய்த வி.ஜெனனி, ஒப்பு நோக்குதல் மேற்கொண்ட திருமதி. ஈஸ்வரி ஜோதிலிங்கம் ஆகியோருக்கும் அச்சுப்பதிப்பை மேற்கொண்ட “ஜெயசிறீ பிறிண்டேர்ஸ்க்கும்” எமது நன்றிகள்.

நன்றி

**–திருமதி. சிவபாக்கியம் சற்குணநாதன்–**

சத்திய சாயிபாபா ஒரு தெய்வ அவதாரம். மக்கள் அமைதியாக வாழ்வதற்கான பல வழிகாட்டல்களை அவர் கூறியிருக்கின்றார். சத்திய சாயிபாபா "பாலில் வெண்ணெய் கலந்து இருப்பது போல எங்கள் மனதில் தெய்வத்தன்மை கலந்து இருக்கிறது அதை சத் அங்கம், சத் கருமம் என்றும் அதனை மத்தைக் கொண்டு வெண்ணெய் கடைந்து எடுப்பது போல எடுக்க வேண்டும்" என்று சொல்கிறார். சத்திய சாயிபாபா எங்கு இருந்தாலும் வந்து மன அமைதியைத் தருவார் என்று பாபா சொல்கிறார் "பிள்ளைகளுக்கு பக்தி, துணிவு, தன் மரியாதை, உண்மை பேசுதல் முதலிய உயர்ந்த பண்புகளை ஊட்ட வேண்டும். பாபாவின் கையிலுள்ள ஆசீர்வாதத்தினால் ஆயிரக்கணக்கில் மக்களின் துன்பங்களை நீக்கியுள்ளார்.

நாம் தியானத்தில் இருந்தால் (இராஜா யோகம்) சிவபாபா நாங்கள் நினைப்பதை எல்லாம் தருவார். நாம் எதையுமே கேட்கத் தேவையில்லை. எப்பொழுது மற்றவரின் பலவீனம், குறைகளைப் பார்க்கின்றோமோ அப்போது எங்கள் மனம் துன்பப்படுகிறது. எல்லா விடயத்திலும் வெற்றி பெற விரும்பினால் அகங்காரத்தை விட வேண்டும். யார் எந்தக் கூடாத பார்வையில் பார்த்தாலும் சரி நாங்கள் அவர் களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். மரியாதையைக் கொடுத்து மரியாதையைப் பெற்றுக் கொள்ளலாம். மற்ற வர்களின் நல்லதைப் பார்த்தால் மனம் துன்பமடையாது. நாங்கள் சந்தோசத்தை இழந்தால் அது மில்லியன் டொலர் இழந்ததற்கு சமம். நாங்கள் மற்றவர்களுக்கு சந்தோசத்தைக் கொடுத்தால் நாங்களும் சந்தோசமாக வாழலாம். எப்போதும் சிரித்த முகத்துடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும். சிவபாபாவின் நினைவில் இருந்தால் எங்கள் பாவங்கள் நீங்கும். நாங்கள் மகிழ்ச்சியாக இருப்பதே எங்கள் அதிஸ்டம் என்று முறளியில் உள்ளது என சிவபாபா சொல்கிறார். இறைவனை எங்கள் நண்பனாக நினைக்க வேண்டும்.

சிவபாபாவை நினைப்பதால் எங்கள் துக்கத்தை எடுத்து விடுகிறார் (எனது அனுபவம்) என்றும் உடல், மனதின் வியாதியை எடுத்து விடுகிறார் என்றும் முறளியில் உள்ளது. மனதில் நோய் இருக்கும் பொழுது பாபாவை வைத்தியர் என நினைத்தால் நோய்கள் எல்லாம் தீர்ந்து விடும். எந்த இறைவனையும் எந்த ரூபத்தில், எந்த நாமத்தில் பார்த்து இருக்கிறோமோ அவரை மிகவும் பற்றி பிடித்து நான் எல்லாவற்றிலும் இருக்கிறேன் என சாயிபாபா கூறியிருக்கின்றார்.

சத்திய சாயி பாபா நல்ல பக்தர்க்கு பிராமணர் ஆக தோன்றி மறைந்து உள்ளார். சத்திய சாயிபாபா நான் எல்லா தெய்வங்களின் வடிவம் எனக் கூறுகின்றார். எங்கள் மீது யார் கோபம் கொண்டா லும் நாம் சாந்தமாக இருக்க வேண்டும். முரட்டு தன்மையை விட்டு இனிமையாக இருக்க வேண்டும். எந்த காரியத்திற்கும் முதல் பாபாவை நினைத்தால் சந்தோசம் கிடைக்கும். நாம் ஒவ்வொரு நாளும் சிரித்த முகத்துடனும் கலகலப்பாகவும் இருக்க வேண்டும். கவலையாக இருக்கக் கூடாது. நான் எப்பொழுதும் சந்தோசமாக இருப்பேன் என சபதம் எடுக்க வேண்டும். சத்திய சாயி பாபா புத்தகத்தில் அறிவை தெளிவு செய்வதில் காயத்திரி மந்திரமானது மருந்தாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

மனதில் நோய் இருந்தால் சிவபாபாவை வைத்தியர் என நினைத்தால் எல்லாம் தீர்ந்து விடும். சரீர பலம் குறைந்தாலும் பாபாவின் நினைவில் உள்ள சந்தோசம் குறையக் கூடாது. யாரையும் முள் போன்று குத்த கூடாது. சிவபாபாவை நினைத்து நாங்களும் சந்தோசமாக இருந்து மற்றவர்களையும் சந்தோசமாக இருக்க விட வேண்டும். பாபாவின் புத்தகத்தில் நாங்கள் வாழ்க்கையில் ஏதும் பாவம் செய்தால் அதனுடைய தண்டனையை இந்த பிறவியிலேயே அனுபவித்து விட வேண்டும்

எனின் அந்த பாவம் எங்களுடன் தொடர்ந்து வராது எனக் கூறப்பட்டுள்ளது. "சனாதன் சராதி" புத்தகத்தில் வியாழக்கிழமை களில் மௌனமாக இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. தினமும் திருப்தியுடன் இருப்பது மிகவும் பெரிய பொக்கிசம் ஆகும். தியானம் செய்வதால் துக்கம் இல்லாமலும் நீண்ட காலம் சுகமாகவும் வாழ முடியும்.

துக்கமாக உள்ள ஆத்மாக்களுக்கு மகிழ்ச்சி அளித்தால் அவர்கள் எங்களின் புகழை பாடுவார்கள் எங்களின் குணத்தை பெருமையாகவே பேசுவார்கள். ராமாவின் ஒவ்வொரு காட்சியை யும் விளையாட்டாக கருதி வாவ், வாவ் என்று கூறிக் கொண்டு மற்றவர்களையும் வாவ், வாவ் என்று கூறச் செய்து கொண்டே இருங்கள். நாங்கள் அசுர குணங்கள் இல்லாமல் இருக்க வேண்டும். பாபாவின் விதிப் பூர்வமாக முறளி கேட்போர் தினமும் நல்ல சுகம் என்னும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டு இருப்பார்கள். (எனது அனுபவம்) முறளியை வாசிப்பதால் மனதை கட்டுப்படுத்த முடியும். எவரிடமும் வெறுப்பு அடையக் கூடாது. சிவபாபாவை எமது புத்தியில் வைத்து இனிமையாகவும், பணிவுள்ளவராகவும் நாம் வர வேண்டும். துரோகி ஆகக் கூடாது. தன்னுடைய அகங்காரத் தைக் காட்டக் கூடாது.

முறளியின் ஒவ்வொரு மகா வாக்கியமும் 2500 ஆண்டுகளுக்கான வாக்கியங்களுக்கு சமம் ஆகும். முறளி தான் பிராமண வாழ்வின் சுவாசம் ஆகும். அமிர்த வேளை முறளி யைக் கேட்டால் மிக விசேடம் ஆகும். எங்கள் வாயில் இருந்து சுப சிந்தனையே வர வேண்டும். மனம் உடைய வைப்பவர்களாக இருக்க கூடாது. நாங்களும் சந்தோசமாக இருந்து மற்றையவர் களையும் சந்தோசமாக வைத்து இருக்க வேண்டும். பாபா

எங்களுடன் எவ்வளவு உண்மையாக அன்பாக இருக்கிறாரோ அதுபோல நாங்களும் மற்றவர்களுடன் உண்மையான அன்புடன் பழக வேண்டும். பாபாவின் நினைவில் இருப்பது எங்கள் புத்திக்கு ஊட்டச் சத்து ஆகும்.

சிவபாபாவை நினைப்பது குஷியான வாழ்க்கையாகும். சரீர பலம் குறைந்தாலும் குஷியான வாழ்க்கையில் இருந்து குறையக்கூடாது. யார் பாபாவை நினைக்கும் போது மகிழ்ச்சி எனும் மிட்டாய் சாப்பிடுகின்றோமோ அதை மற்றவர்க்கும் கொடுக்க வேண்டும். தினமும் திருப்தியுடன் இருப்பதே எல்லா வற்றிலும் பெரிய பொக்கிஷம் பாபா சொல்கிறார் வாயில் இருந்து கடுஞ் சொற்கள் வரக் கூடாது. ஒருவர் துன்புறுத்திக் கொண்டு இருந்தால் அமைதி காக்க வேண்டும். எந்த ஒரு கவலை, கஷ்டம், துன்பம், நேரும் பொழுது பாபாவை நினைக்க வேண்டும். துன்பங் களைக் கண்டு பயப்படக் கூடாது. பாபாவினுடைய பஜனை பாடும் பொழுது மனதில் இருந்து பக்தி பொங்கி வர வேண்டும் தேவை யில்லாமல் அந்தநேரம் கதைக்கக் கூடாது எனக் கூறப்பட்டுள்ளது.

போற்றும் போது மகிழ்வதும் தூற்றும் போது கலங்கு வதும் ஆன்றோர்க்கு உரிய செயல் அன்று என பாபா கூறுகின்றார். புகழ்ச்சியும், இகழ்ச்சியும், ஆத்மாவை, சத்தியத்தை தொடுவது இல்லை. இவை உடலின் புற அமைப்பைத் தொடுவன ஆகும் என பாபா கூறுகின்றார். சத்திய சாயி பாபா கூறுகிறார் பிறர் செய்த குற்றங்களை மறந்து விட்டவர்கள் பாக்கியசாலிகள் அவர்கள் மேல் இறைவன் எந்த பாவத்தையும் சுமத்த மாட்டார் எனக் கூறு கின்றார். பாபாவை கூப்பிட்டால் அந்த இடத்திற்கு முதல் வேலையாக ஓடி வருவார். பாபாவின் பார்வை கூட எங்கள் வாழ்வில் புதிய அத்தியாயத்தை தோற்றுவிக்கும்.

காயத்திரி மந்திரம் சிறுபிள்ளைகளுக்கு சொல்லி கொடுக்க வேண்டும் என பாபா கூறுகிறார். அவர்கள் நிலை இல்லாதவற்றினால் பந்தப்பட்டு மிருக தன்மைக்கு ஆளாகாமல் இருக்க பொருள் தெரிந்து காப்பாற்றப்படுவார்கள் என சாயி பாபாவின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. காயத்திரி மந்திரம் என்பது ஞானபாபமான இறைவனை நோக்கி உள்ளில் உள்ள ஏளிம் சக்தியை எழுப்புவதற்கும், கூட்டியும் பிரித்தும் உணரக் கூடிய பகுத்தறிவை அருளும் படி நிகழ்த்தும் வழிபாடே எனக் கூறுகின்றார். பிள்ளைகளை அம்மா, அப்பாவை விழுந்து வணங்கச் சொல்லி கூறுகின்றார். ஏனெனில் தாய், தந்தை அவர்களின் தெய்வம் எனக் கூறுகின்றார். பிள்ளைகள் வணங்குவதை ஆசையுடன் அகம் மகிழ வணங்க பெற்றோர் ஆவலுடன் சொல்லிக் கொடுக்க வேண்டும்.(வழிகாட்டியாக)

காயத்திரி மந்திரம் மக்கள் பன்னெடுங் காலமாக சொல்லும் மந்திரம் ஆகும். பணம், பொருள், இன்பத்துக்காக சொல்லும் மந்திரம் இல்லை. இது ஓர் அறிவை கொடுக்கும் பிரார்த்தனை எந்த நாட்டவரும் போற்ற வல்ல வழிபாடு இது என பாபா கூறுகிறார். பிரசாந்தி என்றால்; பேரமைதி; என்று கருத்து ஆகும். காலை, மதியம், இரவு என 3 நேரமும் இறைவனை வணங்கச் சொல்கிறார். என்னுடைய வேலையைப் போல மற்ற வேலை களையும் செய்யச் சொல்கிறார். சத்திய சாயி பாபா தான் சிவ சக்தி என்று செல்கிறார். அதாவது பெண்ணின் குணமும் ஆணின் குணமும் இருக்கு எனக் கூறுகின்றார். சாயிபாபா இப்போது சிவசக்தியாம். சீரடி சாயிபாபாவினது சக்தி வந்து பிறந்தது. பின்னர் இதே மாகாணத்தில் தனது ஆச்சிரமத்தில் இதே கோத்திரத்தில் சிவன் மாத்திரம் பிறப்பார் எனக் கூறுகின்றார். சிவன் சக்தியிடம் பெற்ற வரத்தால் தான் பிறந்தது எனவும் கூறுகின்றார்.

பாபாவின் தரிசனம் இரும்பை தங்கம் ஆக்க வல்லது. அவருடைய அறிவை கேட்பது ஆன்மீக சக்தியை வளர்க்க உதவும். பாபா கூறுகிறார் துக்கம், நோ, பலம் எல்லோர்க்கும் உள்ளது. இவை துக்கம், நோய் சகோதரிகள் என்கிறார். ஒரு பெண் சொல்ல அவர் சொன்ன மறுமொழி இதுவாகும். பகவான் தான் நடமாடும் தெய்வம் என்கிறார். மற்றொருவனை ஊக்குவிப்பது, தொண் டாற்றுபவனை இறைவன் விரும்புகிறார். சட்டம் ஒரு கழுதை சிறிதளவேனும் இரக்கம் காட்டாது என புத்தகத்தில் உள்ளது. ஒரு தாய் எப்பொழுது தன் சொல் கேளாத பிள்ளையின் பிழைகளைச் சுட்டிக்காட்டி திருத்துகின்றாரோ அதே போல பாபா பிழை விட்டு குற்றத்திற்கு ஆக வருந்தும் குற்றவாளியை திருத்துகின்றார். பாபாவின் அறிவுரையாவது துன்பம் வந்தால் அதை ஏற்று மன வலிமையாக இருக்க வேண்டும். செய்த குற்றத்திற்கு தண்டனையை அனுபவிக்க வேண்டும். செய்த பாவத்தை மற்ற பிறவிக்கு கொண்டு போகக் கூடாது. மனம் வருந்தி மனதை புனிதப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தியானம் இருக்கும் பொழுது நேரம், இடம், எல்லாம் ஒன்றாக இருக்க வேண்டும் என பாபா கூறுகின்றார். இறைவனின் நாமத்தையே ஒவ்வொரு வினாடிப் பொழுதிலும் இனிமை யாகக் கூற வேண்டும். எல்லா நாளும் ஒன்றே என்று மனதுக்கு பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. வருடப்பிறப்பு கூட இதே போலவே கூறுகின்றார். 23 வருடமாக பிரார்த்தனை செய்த அம்மை யாருக்கு பாபா அதன் பலனாக தங்கப்பதக்கம், வைரம், நிறப் பூச்சு வைத்து பதக்கம் கொடுத்தார். பாபாவின் முக்கியமான விடயம் மனிதர்களின் இயற்கையான நல்ல குணத்தை உண்டாக்குவதே. இது எல்லாவற்றையும் விட பெரிய விடயம் ஆகும் என்கிறார்.

நாம் மனதில் என்ன நினைக்கிறோமோ அதே போல தான் எல்லாம் தெரியும். பாபா தான் என்னில் கண்ணாடியை அணிந்து உள்ளதால் யாரையும் வெறுக்க முடிவதில்லை எனவும் வெறுப்பும், கோபமும், தன்னை தொடுவது இல்லை எனவும் கூறுகின்றார். 1916 ம் ஆண்டு விஜய தசமி அன்று சீரடி பாபா உடலை நீத்தார். 1926 ம் ஆண்டு புட்ட பத்தியில் சாயி பாபா ஆக தோன்றினார். 14 வயதில் தான் சாயிபாபா என உலகுக்கு காட்டினார். பாபா 96 வயது வரை வாழப் போவதாக கூறினார். ஏனையவர்களை அலட்சியப் படுத்த வேண்டாம் என்று பாபா கூறுகிறார். ஏனெனில் எல்லா உயிர்களிடத்திலும் தான் இருக்கிறேன் என்றார். அதனால் என்னையே அலட்சியப்படுத்தி யதனைப் போல் இருக்கும் என்றார். பாபா எங்கள் இதயத்தை பிரசாந்தி நிலையமாக மாற்ற சொல்கிறார். ஏனெனில் தான் எங்கள் இதயத்தில் வந்து இருப்பேன் என்கிறார். சத்தியம் சிவம் சுத்தரம் பாசம் 2 இல் உள்ளது. “தாயை குறை சொல்லாதே, தந்தையை பழி வாங்காதே தலைவிதியே எல்லாவற்றுக்கும் காரணம் என்று” பாபா கூறுகிறார்.

சந்தேகம் என்பது புற்றுநோய் ஆகும். எங்கள் இதயம் தான் பாபா குடிகொண்டு இருக்கும் கோயில் என்கிறார். காயத்திரி மந்திரம் என்பது உலகம் முழுவதும் உள்ள பொருள் எல்லாம் ஊடுருவிப் பாய்ந்து இருளையும், அறியாமையையும், கொடுமையையும் நீக்கும் மந்திரமே ஆகும். மற்றவர்களின் பிழைகளை திருத்தும் போது சரியாக நாங்கள் நடந்துதான் மற்றையவர்களின் பிழைகளை திருத்த வேண்டும். பாபா பழத்தை யும், பூவையும் எங்களிடம் விரும்ப இல்லை. அவர் எங்கள் சுத்தமான இதயத்தையே விரும்புகின்றார்.

பாபா ஒரே ஒரு அறிவுரையை மனதில் வைத்து செயற்படுங்கள் என்கிறார். அதாவது; பந்தம் துன்பத்தை

தருகிறது மீட்சி இன்பத்தை தருகிறது;. பாபா சொல்கிறார் முதலையானது நீர் ஆழத்தில் இருந்து தன்னை காப்பாற்று கிறது. கரைக்கு வந்தால் அதற்கு ஆபத்து. இதே போல நமது மனம் அமைதியாக இருந்தால் தான் ஆண்டவனுடன் பேசலாம். உள்ளத் தின் ஆழத்தில் தான் எங்கள் புகலிடம் உள்ளது. மனதின் ஆழத்தில் ஆழ்ந்த அமைதியைக் காணலாம். பாபா பயம் தான் நோய்க்கு காரணம் என கூறுகிறார். கடவுளிடம் நம்பிக்கை வைத்தால் பயம் குறையும் என்கிறார். நோய்க்கு மருந்தை விட இறைவனில் நம்பிக்கை வைக்க சொல்கிறார். ஊசி மருந்தை விட ஜபம், பிரார்த்தனை, தியானம் (இவை எமது உடம்புக்கு உயிர்ச் சத்து விற்றமின்கள்) என்பவற்றில் நம்பிக்கை வைக்க சொல்கிறார். இவ் உயிர் சத்தை நாம் உட்கொண்டால் இறை வனின் அருள் நிச்சயம் கிடைக்கும் எனக் கூறுகிறார். "ராம். ராம்" என்ற மந்திரத்தை காட்டினும் சிறந்த மருந்து இவ்வுலகில் இல்லை என்கிறார். யாகம் பார்ப்பது, சூரிய நமஸ்காரம் செய்வது நல்லது எனக் கூறுகிறார். யாகம் என்பது உருவமற்ற பொருளை வணங்குவது ஆகும்.

பாடத்திட்டத்தில் எங்கள் சமய கொள்கைகள் இல்லா விட்டாலும் அதை நாம் கையாள வேண்டும் என பாபா கூறுகிறார். அதாவது மௌனம், தியானம், இனிமை நிரம்பிய மிருதுவான பேச்சு, புலனடக்கம், நாமம் மனனம் செய்தல், ஆன்மீக நூல்களைப் படித்தல், சமூக சேவை ஆகிய சாதனங்களின் முதற் படியையாவது கையாள வேண்டும் எனக் கூறுகிறார். பாபா விரும்புவது பழம், பூ, பால், தண்ணீர், இல்லை. அவர் நம்மிடத்தில் விரும்புவது சத்தியம், தர்மம், சுத்தி, பிரேமை ஆகியன உள்ளவர்களாக நாங்கள் இருப்பதையே விரும்புகிறார்.

அகங்காரம் உள்ளவர்களை (கிஸ்ரிரியா) நோய் உள்ளவர்கள் எனக் கூறுகிறார். அகங்காரம் அவர்களை

ஒருநேரம் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கும். எல்லா மனிதர், உயிர்கள் இடத்தில் சாயி பாபா இருக்கிறார். நாம் எல்லா வற்றிலும் பாபாவைக் காணலாம் என நினைத்து எல்லோரிடமும் அன்பாக பழக வேண்டும். நாங்கள் இறைவனிடம் வைத்திருக் கும் அன்பே ஆனந்தத்தின் ஆணிவேர் எனக் கூறுகிறார். 14 வயதில் சாயிபாபா என்று உலகுக்கு காட்டியதில் இருந்து சிவராத்திரி அன்று இரவு லிங்கங்களை வாயால் எடுத்து 9, 5, 4, 3 எடுத்து பக்தர்க்கு கொடுப்பார்.

சேவை, எளிமை, நற்பண்பு இவைகளுக்கு எடுத்துக் காட்டாக பெற்றோர் பிள்ளைகளுக்கு முன் ஆளாக செய்ய வேண்டும். யாராலும் அறியா வண்ணம் பாபா ஒவ்வொரு குடும்பத்திலும் முதற் குருவாக இருக்கிறார். ஒவ்வொரு வினாடி யும் நற்கருமத்தில் ஈடுபட வேண்டும் என பாபா கூறுகிறார். பாபா ஒவ்வொரு அதிசயங்களை செய்வது கடவுளே மனிதராக வந்து இருப்பதாக உலகுக்கு காட்டுவதற்காகும். பாபா பேட்டியின் போது எல்லோர்க்கும் சொல்வது எப்பவும் பயந்து நட இல்லையேல் ஏதாவது எனக்கு நிகழலாம் என்று சொல்வார். எந்த சிவலிங்கத் திலும் பாபா இருக்கிறார் என்று புத்தகத்தில் உள்ளது. எந்த தெய்வத்திலும் இருக்கிறேன் என்கிறார். பாபா நடமாடும் சிவன்.

நல்லவையை கேட்பதிலும், நல்லவையை காண்பதிலும், நல்ல விடயங்களை பேசுவதிலும், நன்மையான செயல்களை செய்வதிலும் ஒவ்வொரு வினாடி பொழுதையும் செலவிடுங்கள். பாபாவிடம் மனத்தால் ஓர் அடி போனால் அவர் 10 அடி வருவப வராம். அன்போடு ஒரு சொட்டு கண்ணீர் நாங்கள் சிந்தினால் 100 சொட்டு கண்ணீரை அவர் துடைப்பவராம். தியானம், ஜெபம் பயிற்சி அளிப்பது போல நோயாளியையும், துன்புற்றோரை யும் முறையாக பேணும் முறையை பயிற்சி அளிக்க

சொல்கிறார். உடலுக்கு உணவு கொடுப்பது போல ஆத்மாவுக்கு ஜெபம், தியானம், நாமம் போன்ற உணவை கொடுத்து காப்பாற்ற வேண்டும் என்கிறார்.

நான் ஒன்றும் செய்யவில்லை இறைவனே எல்லாம் செய்வதாக நினைனக்க வேண்டும். தியானம், யோகமும் துன்புறும் உலக மக்களுக்கு ஒரு சிகிச்சை முறை என்று பாபா கூறுகிறார். வாழ்க்கையில் வெற்றி தருவது வார்த்தைகள் தான் அதனால் பேசுவதை அளவோடு பேச வேண்டும் எனக் கூறுகிறார். மௌனம் தான் சிறந்ததாம் பாபா சொல்கிறார். தவம் செய்யத் தேவை யில்லை இறைவன் நாமத்தினை சொல்லிக் கொண்டு இருந்தாலே போதும் என்கிறார். பிதுர் கடமை இறந்த மனிதர் களுக்காக செய்யும் திவசம் கட்டாயம் நம்பிக்கையுடனும், நன்றியுணர்வுடனும் செய்தால் பிதுர்க்கு கிடைக்கும் நன்மையை விடஎங்களுக்கே கூடிய நன்மை கிடைக்கும் என பாபா கூறுகிறார். சாயி பாபா பணம், பதவி, ஆரோக்கியம், சௌகரியம் முதலிய தரவில்லை என்று கவலைப் படக் கூடாது. ஏனெனில் எங்கள் மனதை சுத்தம் செய்யவே பாபா விரும்புகிறார். நாங்கள் கோபித்தால் எங்களுடைய ஆனந்தம் போகக் கூடும். அதனால் கோபிக்க கூடாது என்கிறார்.

சோம்பல் என்பது மனிதனுக்கு பரம எதிரி அது குஷி எனும் சந்தோசத்தை குறைத்து விடும். துக்கம், சுகம், மரணம், அவமானம் எதுவந்தாலும் சமமாக இருக்க வேண்டும். உலகம் செய்வது போல செய்யக் முடியாது. தியானம் இருப்பதால் மனம் குளிர்ச்சி அடைகிறது. மனதின் குளிர்ச்சி வீண் எண்ணங்களை விலக்கி விடும். சுகமாக இருக்கலாம். மனதில் நோய் இருந்தால் பாபாவை வைத்தியர் என நினைக்கச் சொல்கிறார். எந்த இறைவனையும் எந்த ரூபத்தில், எந்த நாமத்தில் பிடித்து இருக்கிறோமோ அவரை மிக இறுக்கமாக பிடித்திரு. நான் எல்லா வடிவத்திலும் இருக்கின்

றேன் என பாபா கூறுகிறார். சாயி பாபா நல்ல பக்தர்க்கு பிள்ளையார் ஆகத் தோன்றி மறைந்துள்ளார். பாபா சகல தெய்வங்களும் தான் எனக் கூறுகின்றார். முரட்டு சுபாவத்தை விட்டு இனிமையாக இருக்க வேண்டும் என பாபா கூறுகின்றார்.

எந்த காரியத்தின் முதலிலும் பாபாவை நினைத்தால் சந்தோசம் கிடைக்கும். ஒவ்வொரு நாளும் சோம்பலாக இருக்க கூடாது. கல, கலப்பாக சந்தோசமாக புன் சிரிப்புடன் இருக்க வேண்டும். நான் எப்பொழுதும் சந்தோசத்தில் இருப்பேன் என்று சபதம் எடுக்க வேண்டும். அறிவை தெளிவு செய்வதில் "காயத்திரி மந்திரம்" கைகண்ட மருந்து என சத்திய சாயி பாபா புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. சாயி பாபா புத்தகத்தில் எல்லா தெய்வமும் அவரும் ஒன்று எனக் கூறப்பட்டுள்ளது. சரீர பலம் குறைந்தாலும் பாபாவின் நினைவில் உள்ள சந்தோசம் குறையக் கூடாது. யாரையும் முள் போன்று குத்தக் கூடாது. பாபாவை நினைத்து நாங்களும் சந்தோசமாக இருந்து மற்றவர்களையும் சந்தோசமாக இருக்க விட வேண்டும். தினமும் திருப்தியுடன் இருப்பதே அனைத்திலும் பெரிய பொக்கிஷம்.

தியானம் இருந்தால் துக்கம் இல்லாமல் இருக்கலாம். அதனால் சுகமாக நீண்ட காலம் வாழலாம். இறை சிந்தனை யுடனும், நிறைந்த பக்தியுடனும் ஈடுபட்டால் இன்பம், துன்பத்தி லிருந்து உள்ளே விடுவிக்கும். பெரியவர்களை துன்புறுத்தினால், மனவருத்தப்படுத்தினால் அவர்கள் விடும் துன்பம் நிழல் போல வந்து எங்களை பாதிக்கும். அதனால் பெரியவர்களின் ஆசீர் வாதமே எங்களுக்கு வேண்டும். இறப்பது என்பது கீழே விழும் திரைச் சீலை போன்றது. மூடும் இமை போலவும் ஆத்மா அடுத்த பயணத்தை எடுத்து வைக்கும் அடி என்றும் கூறுகிறார்.

பாபா பக்தர்களுக்கு அறிவுரை கூறினார். மனதை அலை மோத விடாமல் சம நிலையில் இருக்கும் மனமும், விவேகம் மிக்க அறிவும் வேண்டி இறைவனை வழிபட வேண்டும் என்கிறார்.

பாபா சொல்கிறார், தான் (பிள்ளைகள்) என்பது எங்களுடன் அக்கறை செலுத்துகிறேன். கட்டுப்பாடு, பெற்றோரிடம் மரியாதை, அளவான உண்ணும் உணவு, கற்பதற்கு உரிய காலம், பஜனை, தியானம், ஆகியவற்றை அவர்களிடம் வற்புறுத்துகின்றேன். சேவையும் செய்யும் படி கூறுகிறார். எங்கள் ஒவ்வொரு எண்ணமும் இறைவனை அடைவதாக இருக்கட்டும். பெற்றோர்களை இறைவனாக மதிக்க வேண்டும் என பாபா கூறுகின்றார். பிள்ளைகளை பணிவு, சேவை, மரியாதை ஆகியவற்றை பாபா கற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார். பஜனை, உடற்பயிற்சி, சாத்வீக உணவை பெற வேண்டும் என்கிறார். இவ் உலகத்தில் மக்கள் வாடகைக்குத் தானே இருக்கிறோம் எனக் கூறுகிறார். ஏழைகளின் ஏழைகளாக இருப்போர்க்கு செய்யப்படும் சேவையே இறைவனுக்கு செய்யும் பாத பூசை ஆகும் என்கிறார்.

பிரசாந்தி நிலையத்தின் பொன் விழாவின் போது ஒரு தீர்மானம் எடுத்தார்கள். உலகம் முழுக்க பாபாவின் பிறந்த தினத்திற்கு முதல் வார சனி, ஞாயிறு கிழமைகளில் அகண்ட நாம பஜனை உலகம் முழுக்க நடக்க வேண்டும் என்றனர். பரமாத்மா கடல் என்றும் அலை ஆத்மா என்றும் பாபா சொல்கிறார். டிசம்பர் 5 ஆம் திகதி பாபாவின் மருத்துவ சேவை நாளாக உலகம் முழுக்க கொண்டாடப்படுகின்றது. உபவாசம், உணவுக்கட்டுப்பாடு, யோகாசனம் உடற்பயிற்சிகள் முதலியவை மலிவானவை. ஆனால் வீரியம் மிக்கவை இவற்றை நாட வேண்டும் என பாபா கூறுகின்றார்.

உடல் நலத்தை பேணுதல் அவசியம். ஏனெனில் கவலை, துன்பம், மன இறுக்கத்தை வென்றாக வேண்டும் என பாபா கூறுகிறார். மே 06ம் திகதி ஈசுவரம்மா உயிர் நீத்த நினைவு ஆகும். நாங்கள் அசுர குணங்கள் இல்லாமல் இருக்க வேண்டும். சிவபாபாவின் விதிப் பூர்வமாக முறளி கேட்போர் தினமும் நல்ல சுகம் என்னும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருப்பர். (என் அனுபவம் உண்மை) முறளியை வாசிப்பதால் மாயை கட்டுப்படுத்த முடியும். யாரிடமும் வெறுப்பு அடையக் கூடாது. பாபாவை புத்தியில் வைத்து இனிமையாகவும், பணிவுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். துரோகி ஆகக் கூடாது. தன்னுடைய அகங்காரத்தைக் காட்டக் கூடாது. எங்கள் வாயில் இருந்து சுப சிந்தனையே வர வேண்டும். மனம் உடைய வைப்பவர் ஆக இருக்கக் கூடாது. நாங்களும் சந்தோசமாக இருந்து மற்றவர்களையும் சந்தோசமாக வைத்திருக்க வேண்டும்.

பாபா எங்களுடன் எவ்வளவு உண்மையான அன்பாக இருக்கிறாரோ அது போல நாங்களும் மற்றவர்களுடன் உண்மையான அன்புடன் பழக வேண்டும். பாபாவின் நினைவில் இருப்பது எங்கள் புத்திக்கு ஊட்டச்சத்து ஆகும். யார் பாபாவை நினைக்கும் போது மகிழ்ச்சி எனும் மிட்டாய் சாப்பிடுகிறாரோ அதை மற்றவர்க்கும் கொடுக்க வேண்டும். தினமும் திருப்தியுடன் இருப்பதே எல்லாவற்றிலும் பெரிய பொக்கிஷம். வாயில் இருந்து கடுமையான சொற்களைப் பேசக் கூடாது எனக் கூறுகிறார். எந்த ஒரு கவலை, கஷ்டம், துன்பம் ஏற்படும் பொழுது பாபாவை நினைக்க வேண்டும். துன்பங்களைக் கண்டு பயப்படக் கூடாது. வரவேற்பு செய்ய வேண்டும். சோம்பல் மனிதனுக்கு பரம எதிரி அது குஷி எனும் சந்தோசத்தை குறைக்கிறது.

துக்கம், சுகம், மானம் எது வந்தாலும் சமம் ஆக இரு. உலகம் செய்வது போல செய்ய முடியாது. தியானம் இருப்பதால் மனம்

குளிர்ச்சி அடைகிறது. மனதின் குளிர்ச்சி வீண் எண்ணங்களை விலக்கி விடும் சுகமாக இருக்கலாம். ஆத்மீக பண்பின் ஆரம்ப படியே அமைதி தான் சாயி பாபா கூறுகிறார். சாயி பக்தி என்பது மூச்சைப் போல தினமும் இருக்க வேண்டும். காயத்திரி மந்திரம் இளையவர்களுக்கும், குழந்தைகளுக்கும் மிக அவசியம் எனக் கூறுகிறார். பொறாமையும், பெருமையும் இல்லாமல் இருந்தால் வாழ்க்கையில் எப்போது முன்னேறலாம். அறமே இறை வடிவம் எனக் கூறுகிறார்.

பெரியவர்களின் ஆசீர்வாதம் நிறைந்த பார்வை கூட ஒரு பெரிய மந்திரம் என்ற விளையாட்டை செய்து விடும். இந்தியா வில் பல இடங்களில் சிறையில் இருந்த குற்றவாளிகள் மனத் தால் திருத்தி சாயிபாபா சாயி பஜனை வைக்க வைத்து நல்ல வர்களாக மாற்றி சிறையில் உள்ளனர். பின்னர் அவர்களின் ஆயுள் தண்டனையை நீக்கி வெளியே வர விட்டு உள்ளார். சாயிபாபா பிழை விடுபவர்களை தனது அற்புதங்களை காட்டி திருத்தி விடுகிறார். தியானம் இருப்பதால் எங்களுக்கு நாங்களே நன்மை செய்கிறோம். எல்லா இயற்கையான குணங்களை எடுப்பது தான் பிராமண வாழ்க்கை ஆகும். சிவ பாபாவின் பிள்ளைகள் ஆகிய எங்களை தான் பிரமணர் என்பது ஆகும்.

எங்கள் மனப்படி நடந்தால் மனம் சூடாகிறது. மற்றவரது கருத்தும் எங்களை பாதிக்கிறது. எவரது கருத்து எடுத்துக் கொள்ளவோ அல்லது கேட்கவோ கூடாது. என்மீது எவருடைய செல்வாக்கும் படியக் கூடாது. இறைவன் நினைவாக இருக்க வேண்டும். பாபா கூறியது இறைவனை ஒரு போதும் மறக்க வேண்டாம். உலகை ஒரு போதும் மெய் என்று நினைக்க வேண்டாம். மரணம் குறித்து ஒரு போதும் அஞ்ச வேண்டாம். ஆன்மீக வாழ்வு என்றால் தியானம் என்றார் பாபா. எப்போது வாழ்க்கையில் கசக்குதோ அந்த நேரத்தில் பாபாவை அழையுங்

கள். எங்கள் அழைப்பு அவர் செவியில் கேட்குமாம் என்கிறார். இந்த பூமியில் நீங்கள் தனியாக இல்லை. நான் உங்களிடமே இருக்கிறேன் என்கிறார். பாபா. இறைவன் தான் எங்கள் நண்பன். அவர் தான் விழுந்து விட்ட எங்களை தூக்கி விடுவார். தந்தையே எல்லாம் என்று விடு, தந்தை எல்லாவற்றையும் தருவார். பாபா மீது மனதை பதித்துவிடு. எது தேவையோ அது கிடைத்து விடும்.

எப்போதாவது தியானத்தில் தொய்வு ஏற்பட்டால் அது ஆபத்து ஆகும். யார் பாபாவின் மடியில் வந்தாரோ அவரின் சனிதிசை ஓடிவிடும். தேவர்கள் சர்வ குணங்களும் நிறைந்தவர் கள். மனிதர்களோ எந்த ஒரு குணமும் இல்லாதவர்கள். அதனால் தேவர்கள் போல வர வேண்டும். ஒரு போதும் முகத்தில் கவலை தெரியாமல் ஆணவத்தில் இல்லாமல் உயர்ந்த எண்ணத்தில் தன் நேரத்தை பயன்படுத்த வேண்டும். அதனால் எங்கள் குளிர்ந்த முகம் மற்றவைக்கு தீமை செய்யாது. வெளியில் செல்லும் பொழுதும், திரியும் பொழுதும், சுற்றுலா செய்யும் பொழுதும் பாபாவை நினைப்பதால் அந்த நினைவு ஒரு பெரிய பொக்கிஷம் என்று பாபா கருதுகிறார். நானும் அதன்படி நடக்கின்றேன். அதனால் நடக்கும் கஷ்டம் தெரியாமல் நேரம் போய் விடும். எனது அனுபவம். எவ்வளவு தான் தலையை அலக்கழிக்கட்டும் பாபாவை நாங்கள் நினைப்பதை விடக் கூடாது.

என்ன வேலை செய்தாலும் பாபாவை நினைக்க வேண்டும். மனதுக்கு ஓர் ஆறுதல் கிடைக்கும். தந்தை பாபா நினைவில் இருந்தால் சுவாசம் கூட சுகம் உள்ளதாகி விடும். நாங்கள் மற்றையவர்களுக்கு அன்பை கொடுத்தால் சுகமாக வாழலாம். நாங்கள் பாபாவை நினைப்பதால் மனம் சாந்தி அடைகிறது. அன்பு கிடைக்கிறது. அமிர்தவேளை காலை 04 மணிக்கு நித்திரையால் எழுந்தவுடன் தியானம் செய்தால் எங்கள் மனம்

ஒழுங்காக செல்லும். கீழே மேலே போகாது. தந்தையை நினைத்து வணங்கினால் கடைசி நேரம் (மரண நேரத்திலும்) அவர் நினைவாகவே போய் சேருவோம். பாபாவின் முறளியைக் கேட்பதால் எங்கள் துக்கம் போய் விடும் அந்த அளவுக்கு நல்லது.

நாங்கள் பாவம் செய்யக் கூடாது செய்தால் பாபா இடம் மன்னிப்பு கேட்கவும். இரத்த கடல் ஆகி பாதியை மன்னித்து விடுவர். வீட்டில் தூங்கும் அறை பாபாவின் அறையாக மனத்தால் தோன்ற வேண்டும். நான் பாபாவின் அறையில் தூங்க வருகின்றேன் என்று நினைக்க வேண்டும். நான் தினமும் பாபாவின் பார்வையில் இருக்கின்றேன் என்று நினைக்க வேண்டும். பாபா 14 வயதில் பள்ளியையும், வீட்டையும் விட்டு, விபூதி பூங்காவிற்கு சென்றார். பரந்த மனப்பான்மை மட்டுமே மகிழ்ச்சியை அளிக்கும் என்கிறார் பாபா. எங்கள் நோயின் மூல காரணத்தை அறிந்து பாபா அதை நீக்குகிறார். நாங்கள் தன்னை விரும்ப வேண்டும் என பாபா தான் விரும்புவதாக கூறுகின்றார். பாபா கூறுகிறார் எங்கு பிறந்தாயோ, எங்கு வளர்ந்தாயோ, எங்கே நல்ல அறிவைப் பெறுகிறாயோ அந்த சமூகத்தில் சேர்ந்து எங்கள் எண்ணங்கள், செயல்கள் செல்ல வேண்டும் என்று வழிகாட்டுகிறார்

எங்கள் வாழ்வு வளம் பெறுவதும், பாழ்படுவதும் ஏனைய மனிதர்களுடன் நாம் கொள்ளும் உறவால் தான் என்கிறார் பாபா. மற்றையவர் மீது நம்பிக்கையும், கருணையும், நமக்கு இல்லாத வரை நமக்கு நம் வாழ்வில் மனநிறைவு இருக்க முடியாது. பாபா மக்களிடம் காட்டும் செல்வாக்கு மக்களின் வாழ்க்கையையே மாற்றி அமைத்து விடுகிறது. யார் யாருக்கு பாபாவை தேவையோ அவர்களுக்கு பாபா பதிக்கும் அன்பு விதையானது பணிவு, மரியாதை, பெருந்தன்மை, சகோரத்துவம், சுதந்திரம், முதலிய அனுபவங்கள் அவர்களுக்கு பாபா கொடுக்கிறார்.

பாபாவின் அருள் இல்லாமல் சாயி பாபாவை நாங்கள் கனவில் கூட காண மாட்டோம் என்று சத்தியம் சிவம் சுந்தரம் பாகம் 04 இல் உள்ளது. அருள் இல்லாமல் கனவு வராதாம். பாபா தன்னுடைய பக்கம் இழுக்கும் உபாயங்களில் கனவும் ஒன்றாகும். கனவு காண்பவரிடம் தைரியம், தன்னம்பிக்கை, சிந்தனை தெளிவு ஆகியவற்றை வழங்குவதற்காகத்தான் பாபா அவர்களுடன் கனவில் செல்கிறார். நினைவில் (நேரே) நடப்பது போல தான் பாபா கனவில் கூறும் அறிவுரையும் என்று பாபா சொல்கிறார். பாபாவை கனவில் காண்பது வேறு கனவு காண்பதைப் போல அல்ல. எங்கள் மனதில் உள்ள சலனங்களை தீர்ப்பவர் என்று புத்தகத்தில் உள்ளது. (எனக்கும் வாழ்க்கையில் இது நடந்தது உண்மை) பாபாவை கனவில் கண்டால் சும்மா கனவு என்று விடக் கூடாதாம் உண்மையாகவே பாபா வந்து தோன்றுவார். பாபா கனவில் கண்டு ஏதாவது சொன்னால் அத்தனையும் உண்மை யாகும். நேரே நடந்தது போல என்று நினைக்கவும். பாபா தந்த தரிசனம் என்று நினைக்கவும்.

பாபா எங்கும் இருக்கிறார். அழைத்தால் பதில் அளிக்கிறார், காட்சி அளிக்கிறார், ஆசீர்வதிக்கிறார், குறிப்பிட்ட இடம் என்று ஒன்று அவருக்கு இல்லை. பாபாவை மனதில் நாங்கள் நினைத்து வேண்டினால் அது உடனே அவருக்கு தெரி யும். அதற்குரிய மறுமொழியை அவர் எங்களுக்கு செய்வார். கடிதம் எழுதி அவருக்கு போக வேண்டும் என்று இல்லை என்று சொன்னார். பாபா மக்களுக்கு அன்பைக் கொடுத்து ஏதோ ஒரு முறையில் தனது அவதாரத்தின் மகிமையை அறிந்து பிரசாந்தி நிலையை அடைகின்றனர். அதே போல எனக்கு பாபாவின் புத்தகங்களை வாசிக்க தந்து பாபாவின் மகிமைகளை அறிந்து பாபாவிடம் என்னைக் கூப்பிட்டார். யாரை சீர்திருத்த அல்லது முழுமாற்றம் செய்ய விரும்புகிறாரோ ஏதோ ஒரு முறை

யில் அவரை சுவாமி கருணையுடன் புதுமையாக உருவாக்கு கிறார். சாயியின் அருளைப் பெற்றால் அவர் நினைவில் இருந்து வேண்டினால் எங்கள் கவலைகள் எல்லாம் நீங்கி விடும் என பாபா கூறுகின்றார். உறுதியான நம்பிக்கையுடன் பாபாவுடன் இருக்க வேண்டும்.

எங்கள் ஒவ்வொருவரின் விதியை நிர்ணயிப்பவர் பாபா தான் என்று கூறுகிறார். பாபா இந்த அவதாரத்தில் உன்னத மான போதகராக மக்களுக்காக வந்திருக்கின்றார். தாமரை நீரில் இருந்தாலும் நீர் படுவதில்லை. அதே போல நாங்களும் பற்று இல்லாமல் வாழ வேண்டும். பாபாவின் அவதாரம் மானிடமாக இருந்தாலும் அவருடைய விவேகம் அப்பாற்பட்டது. அந்த விவேகம் மானிட சமுதாயத்திற்கு அருளையும், நலனையும் அளிக்கும் என்று சுவாமியே சொல்கிறார். பாபாவின் புத்தகத்தை ஏதோ ஒரு முறையில் எங்களுக்கு தந்து வாசித்து பசியை போக்கி எங்களை தன்னிடம் கூப்பிடும் அழைப்பு என பாபா கூறுகிறார். புத்தகத்தினால் புத்துணர்ச்சியும், புதுமலர்ச்சியும் பெறு கின்றோம் (எனக்கு இது உண்மை). பக்தி மனதை தூய்மைப் படுத்துகிறது. சுயகட்டுப்பாட்டை வலிமை பெறச் செய்கிறது. எண்ணத்தை புனிதமாக்குகிறது. அப்பொழுது இறைவன் இதயத்தில் தெளிவாகிறார்.

விக்கிரகங்கள் தெய்வீகத்துக்கு ஒளியூட்டுகின்றன. காட்சி பொருள் ஆகவும் அமைகின்றன. விக்கிரகங்கள் (கோப்பைகள், கப்) நாங்கள் அந்த கோப்பையில் அமிர்தத்தை எடுத்து பருகு கின்றோம் என்று பாபா கூறுகின்றார். விக்கிரகங்களை பொய் என்று சொல்பவர்களை மௌனம் ஆக்குகிறார் பாபா. அமிர்தத்தை கோப்பை இல்லாமல் எடுத்து குடிக்க முடியாது தானே அதுதான் விக்கிரகங்கள் இருப்பது எனக் கூறுகிறார். நல்ல பக்தி உள்ளவர்கள் எல்லாமே இறைவன் செய்கிறான் என்று நினைத்து

உள்ளவர்களுக்கு துன்பம்,மாற்றம், வராதாம். எல்லாம் இறைவன் பொறுப்பு என்று விட்டு விட வேண்டுமாம். என பாபா புத்தகத்தில் உள்ளது. சந்தேகத்துடன் செல்லும் அடியார் களுக்கு பாபா எல்லையில்லா கருணை பொழிகிறாராம் புத்தகத்தில் இருந்தது. இறைவன் தான் எங்கள் நண்பன் அவர் தான் விழுந்து விட்ட எங்களை தூக்கி விடுகிறார். தந்தையே எல்லாம் என்று விடு. தந்தை எல்லாவற்றையும் தருவார். பாபா விடம் மனதை பதித்து விடு எது தேவையோ அது கிடைத்து விடும். பொறுமையுடன் செய் வெற்றி நிச்சயம் என்று பாபா கூறுகிறார். புண்ணியம் செய்வதில் வேகமாக இரு. களைப்படையக் கூடாது. சாயிபாபா இருக்கிறார் என்ன குறை எங்களுக்கு என்று அவர் செய்ததை நினைத்து சந்தோசத்துடன் இருக்க வேண்டும். எத்தனை பிறவி எடுத்தாலும் எங்களுக்கு வந்து உதவி செய்வார். உள் அன்புடன் சாயிபாபாவை ஆனந்தத்தால் அவர் எங்கள் உள்ளத்தில் ஞான தீபமாக நிலைபெற்று அறியாமை இருளை அகற்றுவார். உண்மையான துணைவராக உதவிக்கு பாபாவை நினைத்துக் கொள் எந்த நேரத்திலும் அவர் பாதுகாப்பு தருவார். சாயிபாபா கூறுகிறார் தியானம் இருக்கும் பொழுது எங்கள் புலன்கள் எல்லாவற்றையும் அடக்கி மூளையையும் ஒன்றும் யோசியாமல் ஒரே இடத்தையே பார்த்துக் கொண்டு விழித்து இருக்க சொல்லி இதுவே பெரிய தியானம் தலையில் சிகரம் வைத்தால் போல இருக்கும் என்று கூறுகிறார்.

நாங்கள் தியானம் இருந்து ஆத்மாவை தூய்மையாக வைத்து இருந்தால் ஆரோக்கியம், செல்வம், மகிழ்ச்சி பெருகும் என முறளி புத்தகத்தில் இருந்தது. தியானம் மட்டும் இருந்தால் காணாது என்கிறார். யோகா நினைவில் என்றால் ஆண்டவன் நினைவில் இயன்ற அளவில் இருக்க வேண்டும் எனக் கூறுகிறார். தியானம் எல்லோராலும் இருக்க இயலாது.

அது பரமாத்மாவின் கிருபை இருந்தால் தான் கிடைக்கும் என சாயிபாபாவின் புத்தகத்தில் இருந்தது. அதே போல சிவபாபாவின் முறளி வகுப்பிலும் கூறுபவர்கள் நாங்கள் நினைத்தபடி தியானம் இருக்க ஏலாது என்று கூறப்பட்டுள்ளது.

கோபமானது பூதம் எனப்படும். அதனால் மற்றையவர்கள் கோபப்படும் பொழுது அமைதியாக சாந்தம் கொடுக்க வேண்டும். நாங்கள் திரும்ப கோபப்படக் கூடாது. (அவ குணத்தை) மற்றைய வர்களின் குறைகளை நாங்கள் பார்த்தால் அசுத்த உணவை உண்பதற்கு சரி என்று முறளி புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது அனுபவத்தை வைத்து மற்றவைக்கு சேவை செய்ய வேண்டும். (பகவான்) பாபா முறளி புத்தகத்தில் கூறு கிறார். சாயிபாபாவின் புத்தகத்தில் இருந்தது மனம் தடுமாறு கிறதா? உடனே தியானம் போல இறைவனை நினை உடனே எல்லாம் சரியாகி விடும். மற்றவர்கள் வேலையை எங்கள் வேலை என்று செய்தால் எங்களுக்கு கூட வெற்றி கிடைக்கும். அதே போல மற்றவைக்கு தியானத்தில் கும்பிட்டதும் எங்களுக்கு பலன் கிடைக்கும் என முறளி புத்தகத்தில் உள்ளது. எங்களை விட மற்றவைக்குத்தான் நன்மையை நினைக்க வேண்டும். அங்கு எங்களுக்கு தன்பாட்டில் நன்மை கிடைக்கும். (மலர் அன்ரி உதாரணம்). எங்களை விட மற்றவைக்கு நல்லதை நினைப்பதும் மற்றவைக்கு நல்லதை செய்வதையுமே பாபா விரும்புகிறார். மற்றவர்களின் ஆசீர்வாதம் எங்களுக்கு நல்லது.

எங்கள் பிள்ளைகளை கவனிக்க வேலைக்காரரை வைப்பது போல எங்கள் மனதை கட்டுப்படுத்த இயலாமல் உள்ளதால் அதை நாங்கள் (பாபாவிடம்) இறைவனிடம் கொடுக்க வேண்டும். சாயி பாபாவிற்கு முன்னுக்கு போய் இருக்கத் தேவையில்லை. எங்கே இருந்தாலும் நாங்கள் அவரை அன்புடன் நினைத்தால் எல்லாம் அவர் செய்வார். அவருக்கு

எல்லாம் தெரியும். பிள்ளைகளை சாயி பக்தர் ஆக்க வேண்டும். அப்பொழுது சாயிபாபா இளம் வயதில் கூடாத முறையில் பிள்ளைகள் போவதை தடுத்து நல்ல மனப்பான்மையை கொடுப்பார் என சுவாமி புத்தகத்தில் உள்ளது.

கடல் அலை போல குப்பைகளை வெளியில் தள்ளிவிட்டு சுத்தமாக இருப்பது போல நாங்களும் மனதில் உள்ளதை வெளி யில் தள்ளிவிட்டு இறைவன் நினைவில் சுத்தமாக இருக்க வேண்டும். முறளியை கேட்பதால் எங்கள் துக்கம் போகிறது. கெட்ட குணம் எங்கள் எல்லோரிடமும் உள்ளது. அதனால் நாங்கள் மற்றவர்களின் கெட்ட புத்தியை மனதில் எடுக்க கூடாது. மாயை மற்றவர்களின் நல்ல குணத்தை புத்தியில் கொண்டு வராது. கெட்ட குணத்தை சீக்கிரமாகவே புத்தியில் கொண்டு வரும். பாபா எங்களை காப்பாற்ற என்ன கஷ்டத்தையும் ஏற்பேன் என்றும் நாங்கள் கேட்கா விட்டாலும் தருவேன் அது தன்னுடைய உரிமை யாகும் என சாயிபாபாவினுடைய சுவாமி புத்தகத்தில் இருக் கின்றது. நாங்கள் விரும்பியதை தராவிடில் எங்கள் மீது அன்பு இல்லை என்கின்றோம். அது தவறு ஆகும். பாபா நமக்கு ஒன்றை தராமல் எங்களை தவிக்க விடுவது இதை விட பெரிய தவிப்பில் இருந்து எங்களை காப்பாற்றுவதற்காகும். பாபா தன்னை திட்டினாலும் பாபா எங்களை கைவிட மாட்டார். பாபா பேசுவது கூட எங்களை திருத்துவதற்காகத்தான் எனக் கூறுகிறார்.

மற்றவையின் சந்தோசம் தான் தன்னுடைய ஆகாரம் என சத்ய சாயி சொல்கிறார். சுவாமி என்ற புத்தகத்தில் எங்கள் மனம் 1000 தாமரை இதழ்களுக்கு சரி அதனால் அந்த இதழ்களை வெளியே விட்டு மனதை விரயப்படுத்த கூடாது. மனதை அலை பாய விடாமல் கட்டுப்பாட்டுடன் வைத்திருந்து பழகினால் வெளி உடம்புக்கு என்ன நடந்தாலும் எங்கள் மனம் பாதிக்கப் படாமல் ஆத்மா இராமனாக இருக்க முடியும். முக்கியமாக நோய் ஏற்படும்

பொழுது மனதை போட்டு கண்டபடி யோசியாமல் அலைய விடாமல் மனதை வைத்திருந்தால் நோய் நல்ல சுகம் ஆகும். எங்கள் சித்தத்தை (மனதை) தவழுகிற பிள்ளைகளை போல நடத்துங்கள் என்று பாபா கூறுகிறார். விழிப்புணர்வை குழந்தையிடம் ஏற்படுத்துங்கள். எங்கள் பிள்ளைகளை அன்புடன் கண்டித்துப் பயத்தைப் போக்குங்கள்.

பாபா கூறுகிறார் (நாவை) நாக்கு அதை அமைதிக்காக பிரார்த்திக்கின்றோம். (கையை) சேவைக்காக ஈடுபடுத்து கின்றோம். இதயம் அன்பில் வாழட்டும். எங்கள் இதயங்கள் வெறுப்பு, பேராசை, பொறாமை, நிரம்பிய பாம்பு புற்றுகளாக இப்போது இருக்கின்றன. அதை மாற்ற வேண்டும். உன்னதமான ஆனந்தத்தை தருபவர் இறைவன் அதனால் இறைவனை நினைத்து தியானம் இருக்க வேண்டும். வாழ்வழிக்கும் தானியத் துக்கு சமன் ஆகவும், மனதின் அடித்தளத்தில் இருக்கும் குழப்பமான எண்ணங்களுக்கு விடுதலை கொடுக்க தியானம் சிறந்ததாகும் என்கிறார் பாபா. எந்த விருப்பமான இறைவனின் (நாமரூபம்) பெயர்களை சொல்லிக் கொண்டு தியானம் இருக்க லாம். நாமம் மனதை விட்டு போகும் பொழுது இறைவனின் உருவத்தை நினைக்கலாம். தியானத்தில் மாறி, மாறி இறை வனின் உருவத்தை நினைக்கலாம். தியானத்தின் விடா முயற்சி மூலம் உச்ச நிலையை அடையலாம் என்கிறார்.

இடைவிடாது பயிற்சி இல்லாமல் எதையும் சாதிக்க முடியாது. அது போல ஒவ்வொரு நிமிடமும் இறைவன் நினைவாக இருந்து நாங்கள் இன்பம் காண வேண்டும். அப்பொழுது சத்தியம், அமைதியைக் காணலாம். வேறு நினைவு இல்லாமல் அமை தியைக் காணலாம். சத்திய சாயி பாபாவே சட்டையை கழற்று எனக் கூறி சேட்டில் மஞ்சள் பூண்நூலைக் கட்டினார். பின்னர் காயத்திரி மந்திரம் சொன்னார். உன் அறிவை தூண்டும் என்று

காயத்திரி ஜபம் செய்ய சொன்னார். சாயிபாபாவின் புத்த கத்தில் இருந்தது தனது பெரிய, பெரிய அற்புதங்களை எல்லோர்க்கும் காட்டுவது இல்லை எனவும் தகுந்த மனப் பக்குவம் அடைந்தவர்களுக்கே அந்த அற்புதங்களை காட்டுவேன் என்றும் உள்ளது. கடவுளை எப்படி மனிதர்களுக்கு காட்ட முடியும். இதனாலே தான் சாயி பாபா மனிதராக வந்து காட்டுகிறார். தண்ணீரில் விழுந்தவனை மற்றவன் தண்ணீரில் விழுந்து தான் அவனை தூக்கி காப்பாற்ற வேண்டும். அதே போல மனிதர்க்கு மனிதராக வந்தால் தான் தெரியும் என்று அவர் மனிதராக வந்து உள்ளார் என அவரின் புத்தகத்தில் உள்ளது. எந்த பிரச்சினை வந்தாலும் அதில் நன்மை உள்ளது என்று பாபாவின் முறளி புத்தகத்தில் உள்ளது. திருப்தியே சிறந்த மருந்து ஆகும். கவலை, பேராசை, ஆத்திரம், சஞ்சலம் ஆகியன மனோ விகாரங்கள் உடல் நோய்க்கு அடிப்படை காரணம் ஆகும். இறைவன் திருநாமத்தை திரும்ப, திரும்ப சொல்லி மனம், சுற்றுப் புறத்தை தூய்மையாக்குங்கள். கோபம் கொண்டு கொடிய வார்த்தைகளை பேசி இந்த இன்பமான சூழ்நிலையைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். சாயி புத்தகத்தில் உள்ளது. நன்மைகளை கடைப்பிடி, சந்தோஷமாயிரு, தைரியமாக இரு, உண்மையுள்ள வனாகவும், பொறுமையுள்ளவனாகவும், இரு இவை நல்ல ஆரோக்கிய விதிகள் ஆகும். சாயிபாபா சொல்கிறார் எங்கள் மனம் காற்றை போல என்று கூறுகிறார்.

"ராம, ராம" என்று தினமும் சொன்னால் எல்லோருக்கும் திருப்தியும், மகிழ்ச்சியும் அளிக்கும் என்று பாபா கூறுகிறார். நாங்கள் மனதுக்கு சாந்தியை பெறுவதில் தியானம் இருக்க வேண்டும். நாங்கள் பாவம் என்று சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால் அதை விட பெரிய பாவம் வேறு ஒன்றும் இல்லை (பாவி) என்று கூறலாம் எனக் கூறுகின்றார். பாபா கேட்பது எங்கள்

மனதை தன் மீது ஒருமுகப்படுத்துங்கள். எங்கள் மனதை தனக்கு அர்ப்பணித்து விடுங்கள் என்று மட்டும் தான் பாபா கேட்கிறார். வேறு ஒன்றும் எங்களிடம் கேட்கவில்லை. இதைத்தான் எங்களை செய்யச் சொல்கிறார்.

பாகவத வாகினி என்ற புத்தகத்தை வாசித்தால் மரண பயத்தில் இருந்து விடுபடலாம். என்று பாபா கூறுகிறார். இறை வனின் மகிமைகளைப் பற்றி வியாச முனிவர் எழுதிய புத்தகம் "பாகவதம்" ஆகும். அதை மாற்றி பாபா "பாகவத வாகினி" என்று எழுதி தந்து உள்ளார். பாகவத வாகினியானது வலி நிவாரணியாக, ஆன்மப் பயணமாக, அருட்பாலாக, கலங்கரை விளக்காக இருக்கிறது. எங்கள் மனம் காட்டு மிராண்டி தனத்தில் இருந்து விடுபடவும், அற்ப விஷயங்களில் இருந்து விடுபடவும் இந் நூலை பாபா உருவாக்கினார். பாபாவின் 60வது பிறந்த நாள் கொண்டாடி யவர்களுக்கு கூறுகிறார். இன்ப, துன்பங்களை தள்ளிவிட்டு ஆன்மீக சாதனையில் முன்னேற வேண்டும். நீண்ட ஆயுள், நல்ல உடல் நலம், மன அமைதி, கடவுள் பக்தி, நிலையற்ற உலகப் பொருள் மீது பற்றின்மை எங்களுக்கு கிட்டும் படி ஆசீர் வதிப்ப தாக பாபாவின் பக்கம் எங்கள் காற்றை வீசச் செய்யவும். அவர் அன்பு என்னும் அமிர்தத்தை தருவதாக கூறுகிறார். இதை விட உலகில் இனிமையான அமிர்தம் இல்லை எனக் கூறலாம்.

90 வயது பக்தர்க்கு பாபா தனது நாமத்தையே எந்த நேரமும் சொல்லும் படியும், உம்முடனே எதிரில் தான் இருப்பதாக வும் கடிதம் எழுதினதால் கடைசி உயிர் போகும் நேரம் பாபாவே விபூதியை அவர் வாயில் போட்டு விட்டார். சொன்னபடி கடைசி நேரத்தில் ஆசீர்வதித்து விட்டார். பாபா சொல்கிறார் அன்னைக்கு செய்யும் சேவை தனக்கு செய்யும் சேவை எனக் கூறுகிறார். பாபா கூறுகிறார் எந்த நேரமும் பக்தர் சாயிக்குள் இருப்பதுதான் மகிழ்ச்சியான காலம். அந்த மகிழ்ச்சி தான் தனது உணவு என்று

கூறுகிறார். இதயம் என்றும் ஊஞ்சலில் இறைவன் நாமத்தை தியானிக்கும் படி பாபா கூறுகிறார். இது தான் உண்மையான ஆனந்தம் எனக் கூறுகிறார். பாபா கூறுகிறார் அர்த்தமற்ற சொற்களையும், அற்பமான சொற்களையும் அசட்டை செய்யுங்கள் எனக் கூறுகிறார். ஓர் சோதனை, தன்னை அறிதலை வளர்த்து செல்கின்றது எனக் கூறுகிறார். அக ஒழுக்கங்களை வளர்த்து அகக் கண் திறக்க முயலுங்கள் என்கிறார் பாபா. முற்பிறவியில் செய்த புண்ணிய பலனால் கிடைத்த வாய்ப்பை மிக, மிகச் சிறப்பாக பயன்படுத்துங்கள்.

நாங்கள் பக்தியுடனும், பணிவுடனும், கட்டுப்பாட்டுடன் வாழ்வை நடாத்தியாக வேண்டும். எங்கள் கடமைகளை சரி வரச் செய்தால் சாயி எங்களுடனே இருப்பார். எங்கள் வாழ்க்கை தேரை ஓட்டும் சாரதியும் பாபாவே ஆவார். என்ன வேலை செய்தாலும் அது சுவாமியின் வேலை என்று செய்தால் அது நல்ல படி ஆறுதல், சந்தோசத்தையும் தரும். பிறப்பு இருக்குமானால் இறப்பும் இருந்து தான் தீரும். அன்னையை இறைவனாக மதி, தந்தையை தெய்வமாக மதி என்று பாபா கூறுகிறார். பெற்றோரை மதியாமல் துன்புறுத்துபவர்கள் (பாபா) தன்னையும் அவர்கள் மதிக்காமல் துன்புறுத்துவதற்கு சமம் எனக் கூறுகிறார்.

ஆத்மா தரும் ஆனந்தத்தின் மீது மனதை செலுத்தினால் மகிழ்ச்சியை, ஆனந்தத்தை அடைவோம் என பாபா கூறுகிறார். அதன் பின் மலையே தலை மீது வந்து விழுந்தாலும் இந்த உலக நிகழ்ச்சிகளில் பாதிக்கப்பட மாட்டோம் எனக் கூறுகிறார். பாபா சொல்கிறார் கற்பது முக்கியமல்ல, கற்றல் வழி நிற்றல் தான் மிக, மிக முக்கியம் எனக் கூறுகிறார். பாபா சில பேரை திருத்தவே கஷ்டங்களை கொடுக்கிறார். பாபா எல்லோரிடமும் இருக்கிறார். அதனால் மற்றவையை அவதூறு செய்தால் அது என்னையே வந்து சேரும் என்று பாபா கூறுகிறார்.

பணம் மமதையால் ஆணவத்தில் மிதப்பவர்கள் பின் அனுபவிப்பார்கள் என பாபா கூறுகிறார். பாபாவின் புத்தகங் களை வாசித்தவர்க்கு தீராத கண் நோயில் இருந்தும், மன நோயில் இருந்தும் விடுபட்டு இருக்கிறார்கள். மேடையில் நாடகம் நடித்து விட்டு மறைகின்றது போல தான் மரணம் என்று கூறுகிறார். எரித்த பின் வரும் சாம்பல் தான் என எங்களுக்கு விபூதி எடுத்து நினைவுபடுத்திக் கூறுகிறார். பாபா இறப்பதை கூட்டவோ, குறைக்கவோ மாட்டார். ஏனெனில் நாம் பிறப்பது எல்லாம் இறக்க தான் வேண்டும். எனது என்ற உணர்வு இருக்க வேண்டும் என்கிறார். எங்களுக்கு ஒரு நோய் ஏற்பட்டால் அது எங்களு டைய கர்ம கணக்குகள் ஆகும். அதை அனுபவிக்க வேண்டும் என்கிறார். நாங்கள் இறந்த பின் பிறக்காமல் இருக்க வேண்டும். அது தான் மகா ஆத்மா ஆகும். இறைவனுடன் எங்கள் ஆத்மா போய் சேரும் என்று பாபா கூறுகிறார்.

பாபாவை நம்பியவர்கள் மரணம் நடந்தால் கூட கலங்க மாட்டார்கள். பாபாவே பிறகும் மரணித்த பின்பும் அவ் ஆத் மாவை கவனிப்பார் என்றும் தேவையான எல்லாம் பாபா செய்வர் எனவும் கலங்க மாட்டார்கள். பாபா எங்களுக்கு உடன் நன்மை செய்யா விட்டாலும் அவர் எங்கள் நன்மைக்கு தான் என்ன செய்தாலும் செய்வார். எந்த இறைவன் நாமத்தையும், சொன்னா லும் விக்கிரகத்தை வழிபட்டாலும் தான் வேறுபாடு காட்டாமல் வந்து எங்களுக்கு தேவையான நேரம் விரைந்து வந்து உதவி செய்ய வருவார். பாபா கூறுகிறார் தற்பொழுது உடலில் உள்ள நோய்க்கு மருந்து உடற்பயிற்சி ஆகும். பாபா 96 வயது மட்டும் வாழ வேண்டுமாம். பால், தயிர், வெண்நெய், பழச்சாறு, சாப்பிடு வது இல்லையாம். பாபா நித்திரை கொள்வது இல்லை. அவர் கையை, விரலை அசைப்பது புன்னகை புரிவது என்ன காரணம் என்று கேட்ட போது பதில் சொன்னார். தான் தூர இருக்கும்

மக்களுடன் தொடர்பு கொள்வதால் தான் அப்படி அசைப்பது என்றார்.

ஒவ்வொரு நிமிடமும் ஆயிரக் கணக்கானோருக்கு உதவி செய்வது அது மற்றவைக்கு தெரிய தேவை இல்லை. அதனால் தான் அசைப்பது, சிரிப்பது, காற்றில் எழுதுவது போல செய்வது என்று கூறினார். பாபா கூறுகிறார் எங்களுக்குள் தான் இருப்ப தாகவும் அவரில் நாங்கள் இருப்பதாகவும் எல்லாம் ஒன்று என்று அதாவது நாம் இருவரும் ஒருவரே எனக் கூறுகிறார். பாபா கொடுப்பதிலும் மன்னிப்பதிலும் எப்பொழுதும் விருப்பம் உடையவராக இருப்பார். பாபாவின் புனிதமான நோக்கம் நாங்கள் ஆன்மீக சிந்தனையை அடைய வேண்டும் என்பதே ஆகும். அன்றாடம் எங்கள் வாழ்க்கைக்கு உண்மையான வாழ்விற்கு காரணமான இறைவனை உயிர் மூச்சாக கொண்ட தாக மாற்றியமைக்கவேண்டும். பாபா கூறுகிறார் விஷேசமான நாட்களிலும், விசேடமான அடுப்பில் வைத்து பாலை பொங்க காய்ச்சி வழிய விட்டால் செல்வ செழிப்பையும், மகிழ்ச்சியையும் அளிக்கும் எனக் கூறுகிறார். (உ+ம்:- தைப்பொங்கல், குடிபூரல், அன்று காய்ச்சுதல்)

முறளியில் உள்ளது சிவபாபாவை ஒரு தோற்றத்திலும், பிரம்ம பாபாவை மற்ற தோற்றத்திலும் வைத்து இருப்பதாக நினைக்க வேண்டும். எனது இதயத்தில் ஒருபக்கத்தில் சிவ பாபாவை வைத்திருந்து கொண்டு அதே போல சிவபாபாவின் இதயத்தில் நான் இருப்பதாக நினைக்க வேண்டும். எந்த நேரமும் எனது பாபா, எனது பாபா என நினைத்துக் கொள்ள வேண்டும். பாபாவை தவிர வேறு ஒருவரையும் நினைக்க மாட்டேன் என்று நான் நினைக்க வேண்டும். ஆவணி சதுர்த்தி அன்று தான் பிள்ளை யார் பிறந்தநாள் அன்று அவரின் சக்தி கூடவாகும். இறந்தவர் களின் ஆத்மாக்களை எண்ணி வணங்காவிட்டால் குடும்பத்தில்

பிரச்சினை கஷ்டம் ஏற்படும் என்கிறார். இறந்த ஆத்மாக்களை நினைக்க, நினைக்க பிரச்சினை, கஷ்டம் நீங்கும் என்கிறார். ஆண்டவனிடம் போறதை விட மற்றவையை சந்தோஷப் படுத்துவதே முக்கியம். அதை தான் ஆண்டவன் விரும்புகிறார்.

என்ன புத்தகமோ, பத்திரிகையையோ 10 நிமிடமாவது ஒவ்வொரு நாளும் வாசிக்க வேண்டும். அது தான் எங்கள் உற்ற தோழன் ஆகும். சாயி பாபா கூறுகிறார் நல்ல சுய முயற்சியும், தெய்வீகத்தின் அருளும் இருந்தால் தான் நாம் எதிலும் வெற்றி பெற முடியும். மற்றவர்களுக்கு கெடுதல் செய்தால் எங்களுக்கு கெடுதல் செய்தது போல் இருக்கும் எனக் கூறுகிறார். சாயி பாபா சொல்கிறார் எது நடந்தாலும் எங்களுக்கு அது கடவுளின் சங்கல்பம் என்று நினைக்கச் சொல்கிறார். பாபாவிற்கு சுயநலமற்ற ஆசைகளை கூறினால் அவர் கட்டாயம் நிறைவேற்றி வைப்பார். பாபா கூறுகிறார் ஒருவன் மற்றையவர்களுக்கு உதவி செய்தால் மேன்மை அடைகிறான் துன்புறுத்தினால் பாவம் செய்தவன் ஆகிறான். எப்போதும் மற்றையவர்களுக்கு உதவ முயற்சி செய்ய வேண்டும் என்று பாபா கூறுகிறார்.

கடவுள் தான் எல்லாம். கடவுளை முழுமையாக நம்பினால் வெற்றி எங்கள் பக்கம் தான் என்று சாயி பாபா சொல்கிறார். சாயி பாபா கூறுகிறார் என்ன தேவையானாலும் இறைவனிடம் பிரார்த்தனை செய்ய சொல்கிறார். பாபாவிடம் மட்டும் தான் நாங்கள் புகலிடம் தேடலாம். சிவபாபாவை விட பிரம்ம பாபா தான் சக்தி வாய்ந்தவராம். அதனால் நாங்கள் சிவபாபா போல பிரம்ம பாபாவையும் நினைக்க வேண்டும். நாங்கள் மற்றவர்களை ஆசனத்தில் அமர்த்தினால் அவர்கள் எங்களையும் ஆசனத்தில் அமர்த்துவார்கள். எங்கள் விதி என்று நினைத்துக் கொண்டு இருக்கக் கூடாது. இறைவனின் நம்பிக்கையுடன் முயற்சி செய்தால்

எல்லாம் வெற்றியாக முடியும். எங்கள் கஸ்டம், துன்பம் எல்லா வற்றையும் பாபாவிடம் ஒப்படைத்து விட்டு நிம்மதியாக இருக்க சொல்கிறார் பாபா. நாங்கள் நல்லவர்களிடம் சேர்ந்தால் தான் நல்லவர்களாக மாற முடியும்.

எப்பொழுதும் சிரித்த முகத்துடனும் புன்முறுவலுடனும் இருக்க வேண்டும். எண்ணெய் முகத்துடன் இருக்க வேண்டாம் என பாபா கூறுகிறார். நாங்கள் சிரித்த முகத்துடன் இருந்தால் தான் மற்றையவர்களின் முகம் சந்தோஷப்படும். நேரம் மிகவும் முக்கியமானது. வீண் ஆக்கக் கூடாது. நேரத்தை வீண் ஆக்கினால் வாழ்க்கையை வீண் ஆக்குவதற்கு சமம் ஆகும். பாபாவின் புத்தகத் தில் உள்ளது தெட்சணாமூர்த்தியை முதல் வணங்கிவிட்டு எந்த காரியத்தையும் செய்ய சொல்கிறார். (வியாழ பகவான்) எங்களை யாரும் எதிர்த்தாலும் நாங்கள் அவர்களுக்கு வாழ்த்து தெரி விக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் உண்மையான மனித ராக இருக்க முடியும். எங்கள் மனதில் நிறைவு இருந்தால் தான் அமைதி ஏற்படும். இறைவன் மேல் ஆசை இருந்தால் தான் அனைத்தையும் பெறலாம். வாழ்க்கையில் அன்பும், அமைதியும் இருந்தால் நாம் எல்லாவற்றையும் பெற முடியும். உலகத்தில் எதையும் மறக்கலாம். ஆனால் இறைவனை மறக்க கூடாது. பாபா கூறுகிறார் மற்றவர்களுக்கு உதவி செய்யாவிடினும் அன்பாக வும், மரியாதையாகவும் அவர்களுடன் பழகலாம். பாபா கூறுகிறார் மனம் ஒரு பைத்தியம் பிடித்த குரங்கு, உடல் ஒரு நீர் குமிழி போல அதனால் இவைகளை மறந்து ஆத்மீகவழியில் செல்ல சொல்லி கூறுகிறார்.

ராமர் எல்லாவற்றிலும் வெற்றி பெற்றதன் காரணம் அன்னையின் காலில் விழுந்து ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டு சென்றதனால் தான் என பாபா கூறுகிறார். எங்கு இருந்தாலும் எங்களுக்கு வரும் கஷ்டம், துன்பம், வந்து தான்

தீரும் என்கிறார். ஆனால் இறைவனின் இடமே எங்களது அடைக்கலம் என பாபா கூறுகிறார். நான் இறைவனின் ஒரு அங்கமே என்று நினைக்க வேண்டும். நல்ல நண்பர்களுடன் பழகினால் நாமும் நல்லவர்களாக வரமுடியும் என பாபா கூறுகிறார். உலகத்தில் ஈடுபடும் பொழுது தீய எண்ணங்கள் துன்புறச் செய்யும். அதற்கு இடம் கொடாமல் இருக்க வேண்டும். தாய், தந்தை, குரு, விருந்தினரை கடவுளாக மதித்து நடக்க சொல்கிறார். பெற்றோரின் சொல் கேட்டு நடந்தால் அறிவாளி ஆகுவீர்கள். பெற்றோரின் சொல் கேட்காவிட்டால் அலைந்து திரிவார்கள். உணவை வீண் ஆக்காதீர்கள் உணவே இறைவன் என்று பாபா கூறுகிறார். எங்களுக்கு கடவுள் தந்த கண்கள் கைலாசத்தில் உள்ள இறைவனைக் காண்பதற்கும், மனதை தந்தது இறைவனது நாமத்தையும், உருவத்தையும் நினைத்து பேரானந்தப் படுவதற்கே ஆகும்.

தெய்வீகத்தை அறிவதற்கு பெற்றோர்கள் முன்மாதிரியாக இருந்து பிள்ளைகளுக்கு வழி காட்ட வேண்டும். நாம் சுத்த மாகவும், நற்பண்புகளுடனும் வாழ்ந்து விட்டால் பாபா எங்களுக்கு தேவையான அனைத்தும் தருவார். பாபா நடக்க முடியாததையும் நடத்தி வைப்பார். எங்கள் எண்ணம், செயல், சொல் மூன்றும் நன்றாக இருக்க வேண்டும் என பாபா கூறுகிறார். தாயின் வயிற்றில் இருந்து பிறக்கும் பொழுது ஒரு மாலை கழுத்தை சுற்றி இருப்பது எங்கள் கர்ம கணக்கை பிரம்மா பூமாலை போல சுற்றி போட்டு விடுவது அனுபவித்து விட்டு வரச் சொல்லி கூறுகிறார். என்னை சுற்றி உள்ளவர்களிடம் இசைவாக நடந்து கொள்ள என்னிடம் மகிழ்ச்சி தேடி வரும் என பாபா கூறுகிறார். "ஓம் நமோ நாராயணா" என்று தினமும் நாங்கள் பக்தியுடன் சொன்னால் எங்களுக்கு சகலதும் கிடைத்து சந்தோசமாக இருக்க முடியும் செய்த பாவங்கள் எல்லாம் தீரும் என பாபா கூறுகிறார்.

வைகுண்டம் என்பது விஷ்னுவின் உயர்ந்த வாசஸ்தலம். அகம் பாகம் போக வேண்டும் என்றால் இறைவனை துதித்து பஜனை செய்ய வேண்டும். பாபா கூறுகிறார் உண்மையான விவேகம் உள்ளவர்கள் வாதாட போக மாட்டார்கள் அமைதியாக (மௌன மாக) இருந்து கொள்வார்கள். என்னதான் துன்பம் வந்தாலும் தூசியாக அதை எடுத்து விட்டு எங்கள் முக்கியமான (சித்தம்) மூளையை இறைவனை நினைத்து காப்பாற்ற வேண்டும் என பாபா கூறுகிறார். எங்களில் குறை இருந்தால் தான் மற்றைய வர்களின் குறையை பார்ப்போம். ஆண்டவன் குறை இல்லாதவர் என்பதால் மற்றையவர்களின் குறையை பார்க்க மாட்டார். நல் எண்ணம் இருந்தால் மற்றையவர்களின் குறை தெரியாதாம். இறைவனே ஏழைகளின் பிரபு. பாபா கூறுகிறார் சுயநலம் இல்லாமல் கடமையை செய்ய வேண்டும். அதையே பாபா விரும்புகிறார். சேவை மூலமே இறைவனை அடைய முடியும். எங்கள் உதவி யாருக்கு அவசியம் தேவையோ அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

சொந்த முயற்சியும், தெய்வீக அருளும் இருந்தால் தான் வாழ்க்கையின் நோக்கத்தை அடைய முடியும். பாபா கூறுகிறார் கடவுள் நம்பிக்கை மனித குலத்துக்கு சேவை. நாமஸ்மரணை இவைகளை கடைப்பிடித்தால் பாபாவின் அன்புக்கு தகுதியான வர்கள் ஆவார்கள். எல்லாவற்றையும் செய்பவரும், செய்விப்ப வரும், எங்கள் சிந்தையை தூண்டி செய்விப்பவரும் பாபாவே ஆவார். இறைவன் அனைவர் உள்ளத்திலும் இருப்பதால் தேகம் இறைவனின் திருக்கோயில் எனக் கூறுகிறார். நோய் வருமுன் தடுப்பது வந்தபின் சுகமாக்குவதை விட மேலானது. இளைய வர்கள் ஆரோக்கியமாக இருந்தும் ஆன்மீக சிந்தனையை நாடுவதும் நல்லது என பாபா கூறுகிறார். எல்லோருக்கும் கடவுள் கண்ணுக்கு தெரிவதில்லை அதனாலேயே பாபா மனிதராக கடவுள்

வடிவத்தில் வந்து காட்டுகிறார். பாபாவை நம்பினவர்களுக்கு முன்வைத்த காலை பின்வைக்க மாட்டார் பாபா. பாபாவை நம்பினவர்களுக்கு பாபா அனுக்கிரகம் கொடுப்பார். ஆன்மீக மனப்பாங்கு இருந்தால் தான் மனதில் பொறுமை இருக்கும் எனக் கூறுகிறார்.

சுகம் அனுபவிக்கும் நேரத்தில் நாங்கள் இறைவனை நினைத்தால் கஷ்டம் எமக்கு ஏற்படாது. உணவு எப்படியோ அப்படியே தான் எங்கள் தலையில் இருக்கும் குணங்களும் இருக்கும். அதனால் நல்ல பச்சை உணவை உண்ணச் (சாத்வீக) சொல்கிறார். மரக்கறி இலைகளை சாப்பிடச் சொல்கிறார். மனித வாழ்க்கையில் விலைமதிப்பற்ற பொருள் எங்கள் காலம் (நேரம்) அதனால் அதை வீண் அடிக்கக் கூடாது. தீய எண்ணங்களை புக விடாமல் நல்ல எண்ணங்களை இதயத்தில் உட்புகுத்தச் சொல்கிறார் பாபா. படகு நீரில் மிதந்தாலும் படகில் நீர்வராமல் இருப்பது போல எங்களுக்கு வாழ்க்கையில் சிக்கல்கள் வந்தாலும் அதில் மாட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

கடைசி மூச்சு இருக்கும் வரை “ராம” நாமத்தை சொல்லிக் கொண்டே இருக்கச் சொல்கிறார். பாபா இறைவனை புரிந்து கொள் அதுதான் சாதனை எனக் கூறுகிறார். தூய்மையான இதயம் இருந்தால் தான் இறைவன் எங்களுக்கு காட்சி அளிப்பார் என்கிறார். தியானம் இருக்க கஷ்டமானவர்கள் இறைவனின் பெயரை சொல்லி மனதை ஒரு நிலைப்படுத்தலாம் சுகமான முறை இது என்கிறார். வாழ்க்கையில் வரும் கஷ்டம், துன்பம், கவலை, போற்றுதல் இப்படி எல்லாவற்றிலும் இருந்து விடுபட்டு ஆண்டவனின் நாமஸ் மரணையில் ஈடுபட வேண்டும்.

தாயின் இதயத்தின் புனிதமும், அவரின் ஆசிகளும் (பலமும்) ஈடு இணை இல்லாதது. தாயின் அன்பை பெற

பிள்ளைகளுக்கு தகுதி இருக்க வேண்டும். தகுதி இல்லாதவர்கள் தான் தாயின் அன்பை பெற இயலாதவர்கள் ஆவார். தாயின் சங்கல்ப உறுதியால் மட்டுமே பிள்ளைகள் வாழ்க்கையில் நல்ல நிலைமைக்கு வர முடியும் என பாபா கூறுகிறார். மற்ற தெய் வத்தை வணங்குகிறோமோ இல்லையோ தாயை முதலாவ தாக வணங்க வேண்டும். தாயை மதித்து, அவரது அன்பை பெறுபவர் தான் உண்மையான மனிதர் என்று பாபா கூறு கிறார். தாயை தவிர வேறு தெய்வம் கண் எதிரில் இல்லை. மக்கள் தெரியாமல் கடவுளை தேடி திரிகிறார்கள். தாயின் அன்பை பெறாதவர்களுக்கு இறைவனின் அன்பு கிடைக்க மாட்டாது. எந்த உயரத்தில் இருந்தவர்களின் சரித்திரத்தை எடுத்து பார்த்தால் அவர்கள் தாயின் அன்பினால் தான் வர முடிந்தது என அறியலாம். தாயின் நல்ல எண்ணங்களை கேட்டு நடந்தால் அவன் வாழ்க்கையில் கஷ்டங்களில் இருந்து விடுபடு கிறான். யாரை மதிக்காவிட்டாலும் தாயை மதிக்க வேண்டும். தாயின் அன்பு சுயநலம் அற்றது. தாயின் மனம் தளிர் (குருத்து) போன்றது. இளகிய மனம் உள்ளது அதனால் தாயின் உணர்வுகளை துன்புறுத்தக் கூடாது. தாயின் ஆசிகளால் எத்தனை பேர் வளத் துடன் வளர்ந்து வந்து உள்ளார்கள். ஆதனால் தாயின் மனதை நோக விடக் கூடாது. தாயின் அன்பை பெற்றால் எல்லாவற்றையும் பெற முடியும். தாயின் மேல் வைக்கும் அன்பை விட இந்த உலகத் தில் சிறந்தது வேறு எதுவும் இல்லை என்கிறார். தாய் எதை செய்தாலும் எங்கள் நன்மைக்கே செய்வார். தாயின் அன்பு உன்னுடன் இருந்து உன்னை வழிநடத்தி பாதுகாத்து விடும். தாய்க்கு உணவு அழித்தால் மட்டும் போதாது. உயர் நிலையில் வைத்து சேவை செய்ய வேண்டும். மகிழ்ச்சியாகவும், திருப்தி யாகவும் வைத்து இருக்க வேண்டும். "பெற்றோர்கள் வாழும் தெய்வங்கள்" ஆகும்.

நமக்கு நல்ல ஆரோக்கியமும், மகிழ்ச்சியும் கிடைப்ப தற்கு இறைவன் சிந்தனையில் இருக்க வேண்டும். எங்கள் நேரத்தை புனிதமாக வைத்து இருக்க வேண்டும். பெற்றோர்கள் நல்லவர்களாக இருந்தால் தான் பிள்ளைகள் நல்லவர்களாக வர முடியும். படுக்கைக்கு போகும் பொழுதும், காலையில் எழும்பும் பொழுதும் ராமா, கிருஷ்ணா, கோவிந்தா என்று புனிதப் பெயர்களை உச்சரிக்க வேண்டும். உணவு எப்படியோ அப்படியே மனம், மனம் எப்படியோ அப்படியே மனிதன் வாழ்கின்றான். மனதைப் பூத்து குலுங்க செய்யும் பௌதீக விளையாட்டுக்களிலும் மனிதன் ஈடுபட வேண்டும். நாங்கள் யாருடன் சேருகின்றமோ அதே போலவே நாங்கள் வருவோம். அதனால் நல்லவர்களுடன் சேர வேண்டும். பாபா கூறுகிறார் ஒருவர் எப்பொழுதும் மற்ற வையை சார்ந்து இருக்கக் கூடாது எனக் கூறுகிறார்.

நாங்கள் பிரம்ம பாபா போல வருவதற்கு பரம சிந்தனை, பெரு மனத்துடையோராய் இருந்து மற்ற ஆத்மாக்களின் குறை யையும் பொறுத்து கொள்ள வேண்டும். எங்களது எண்ணமும் பிறருக்காக இருக்க வேண்டும். தடுமாறும் சஞ்சலமாக இருப்ப வர்க்கு உயிர்பிச்சை, மனசாந்தி அளியுங்கள். அவர்களுக்கு மன ஆறுதல் கொடுக்க வேண்டும் என நினைக்க வேண்டும். நாங்கள் நல்லது செய்தால் நல்லதையே அனுபவிப்போம். தீயது செய்தால் தீயதே அனுபவிப்போம். இராமன் கூட சீதையை பிரிந்து துக்கம் அனுபவித்தார். அதனால் நல்லதையே செய்ய வேண்டும். நாங்கள் நினைப்பதெல்லாம் எங்களிடமே திரும்ப வரும். அதனால் நல்லதையே நினைக்க வேண்டும். எங்கள் மனதை கட்டுப்படுத் தினால் தான் எங்கள் பிரார்த்தனையும், வழிபாடும் பலன் அளிக் கும்.

நாங்கள் ஏதாவது தவறு விட்டால் அதை நினைத்து கவலைப் பட வேண்டாம். நான் செய்தது பிழை என நினைப்பது மன்னிப்பு

கோருவதற்கு சமம் ஆகும். அப்படிக் கவலைப்படாமல் விட்டால் நாம் செய்யும் பூசை, யாகம், விரதம், ஒன்றும் பலன் இல்லை எனக் கூறுகிறார். நல்லவனாக இரு, நல்லதைப் பார், நல்லதை செய், இது தான் ஆண்டவனை அடையும் வழி. கடவுளிடம் மனதை பதி. அவர் தேவையான அனைத்தும் தருவார். எந்த பெயரையும் மறக்கலாம். "ராம நாமத்தை" ஒவ்வொரு நாளும் மறக்காமல் சொல்ல வேண்டும். எங்கள் நாவை புனிதமாக வைத்து பயன்படுத்துவதே பெரிய ஒரு அகிம்சை. ராமருடைய நாமத்தை சொல்லாமல் காலத்தை கழிப்பவர்கள் அதிர்ஷ்டம் இல்லாதவர்கள் ஆவர். பாபா கூறுகிறார் இந்த உடம்பை இறைவன் எங்களுக்கு கொடுத்தது சுக போகம் அனுபவிக்க இல்லை. பிறர்க்கு சேவை செய்யவே இந்த உடம்பை கொடுத்தார் என்கிறார்.

நல்ல உணவை உண்பதால் நல்ல மனமும் வரும். தியானம் என்பது எல்லா சந்தர்ப்பத்திலும் இறைவனை நினைத்து இருப்பதே ஆகும். சும்மா இருப்பது மாயையால் குழப்பமடைந்து இருப்பது அல்ல. நேரத்தை வீண் அடித்து கொண்டு இருப்பது என்று பாபா கூறுகிறார். இறைவனை மனதில் அமர்த்தி என்ன செயலையும் செய்ய வேண்டும். இறந்த பின் எங்களுடன் கூட வருவது நாங்கள் செய்த நன்மை, தீமை தான் வேறு ஒன்றும் எங்களுடன் வராது. சாந்தி நிரம்பிய மனம் எக்காரணம் கொண்டும் சஞ்சலப்படக் கூடாது. அப்படிப்பட்ட சாந்தி தான் பிரசாந்தி என்று அழைக்கப்படுகிறது. மேடு பள்ளம் இல்லாததுவே பிரசாந்தி ஆகும். சாந்தி, ஆனந்தம் என்பது ஒரு கரை அற்ற சமுத்திரம். இது விலை மதிப்புள்ள புதையல் என்கிறார் பாபா. ஒருவன் கஷ்டப்படும் பொழுது கைவிட்டால் சுயநலம் உள்ளவன் ஆகும். பாபாவிடம் அன்பு உள்ளவன் வாழ்க்கையில் ஏற்படும் தடங்கல்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள தயார் ஆக வேண்டும். நாங்கள் ஒன்றை அடைவதற்கு மூலதனமாக

இருப்பது வழிபாடு ஒன்றே ஆகும். இறைவனிடம் முழு நம்பிக்கை வைத்தால் இறைவன் எங்களை காப்பாற்றுவார்.

எல்லா வழிபாட்டிலும் சிறந்தது இறைநாமமே என பாபா கூறுகிறார். இரண்டாவது மாயையிலிருந்து விடுபட்டு ஆத்மா என்ற உணர்வுடன் இருப்பது. ஒருவர் மற்றையவர்களுக்கு கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். பிரதி பலனை எதிர் பார்க்கக் கூடாது. பாபா கூறுகிறார் ஒரே ஒரு தெய்வத்தை மட்டும் தான் மனதில் வைத்து வணங்கச் சொல்கிறார். ஞான மார்க்கத் துக்கு லட்சத்தில் ஒருவர் தான் செல்ல முடியும். புலங்களை அடக்கியிருப்பது கஷ்டம் என்கிறார். பக்தி மார்க்கம் ஒன்று தான் இறைவனை அடைய சரியான வழி எனக் கூறுகிறார். மென்மையான ஆனந்தம் வெற்றி அளிக்கக்கூடிய வழி என்கிறார். உலகை பாதுகாத்து பேண நாம் மானிட வடிவம் தாங்கி தான் வேண்டும். என பாபா மானிட வடிவத்தில் வந்தார்.

மக்கள் புரிந்து சொன்ன அந்த வடிவம் தான் சரி என்று மானிட வடிவத்தில் வந்தார். மனதை சலனம் அற்றதாக ஆக்க வேண்டும். அப்பொழுதுதான் மனதில் சாந்தி ஏற்படும். எங்கள் வாழ்வில் ஒவ்வொரு நிமிடமும் நன்மை பயக்கும் வகையில் நடக்க வேண்டும். முடிந்தால் மற்றவர்களுக்கு சேவை நலம் செய்ய வேண்டும். இறைநாமம் சொல்லும் பொழுது வேறு நினைவு இல்லாமல் இறை சிந்தனையுடன் சொல்ல வேண்டும். எங்களுக்கு (சோதனைகள்) கஸ்டங்கள் வரும் பொழுது கடந்த பிறவி செயல் என நினைக்க சொல்கிறார். அதை நினைத்து கவலைப்படாமல் மற்றவைக்கு சேவை செய்ய வேண்டும் என பாபா கூறுகிறார். அறிவாளிகள் என பாண்டவர்களுக்கு உரிய அடையாளம் இறை நாமத்தை பக்தியுடன் சொல்வதாகும். எங்கள் இதயத்தில் அன்பு இருந்தால் கடவுள் எங்களிடமே இருப்பார். எங்களை பாது காப்பார். கடவுளை பிரார்த்திக்கும் பொழுது என்னோடு இரு என்று பிரார்த்திக்க வேண்டும். வாழ்க்கையில் தோல்வி வந்தால்

அது முட்டுக் கட்டை அல்ல வெற்றிக்கு உரிய படிக்கட்டுக்கள் என்று பாபா கூறுகிறார்.

ஒருவரின் வெறுப்பை வெறுப்பால் சரிப்படுத்த முடியாது. அன்பினால் தான் சரிப்படுத்த முடியும். நல்ல மனம் உள்ள வனே மனிதன் ஆவான். மனம் என்பது தூய்மையாக சலன மற்று குளிர்ந்த தடாகம் போல இருக்க வேண்டும். மனதை பைத்திய தனமாக அலைய விடக் கூடாது. சின்ன வயதில் இருந்து பிள்ளைகளுக்கு ஆன்மீக கொள்கை ஞான வளர்ச்சியை பழக்கிக் கொள்ள வேண்டும். நாங்கள் மற்றவர்களை புண் படுத்தாமலும் மற்றவர்கள் எங்களை புண்படுத்தாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். பாபா எங்கள் மனம் தான் கடவுள் எனக் கூறுகிறார். பாபா கூறுகிறார் தான் எங்களிடம் பேசினாலும் சரி பேசாவிட்டாலும் சரி அன்பாகவும், கருணையாகவும் இருப்ப தாகவும் கூறுகிறார். ஆத்மா இறைவனின் வடிவம். நாங்கள் வெற்றி அடைய தேவையான விடயத்தில் சுழற்சி அடையக் கூடாது. நாங்கள் அன்பு வைப்பது எங்கள் குடும்பத்தவரிடம் மட்டுமல்ல எல்லோரிடமும் அன்பை பகிர்ந்து கொள்ள வேண்டும். என்று பாபா கூறுகிறார். பச்சைநிறம் என்பது வற்றாத வளத்தைக் கொடுக்கும். வளம் மேலும் பெருகும். அதனால் பாபா பச்சைக் கல் மோதிரம் மாணவனுக்குக் கொடுத்தார்.

இறைவன் உதவ நினைப்பது சுயமுயற்சி உள்ளவர் களுக்கு மட்டும் தான் மற்றவர்களுக்கு அல்ல. பாபா சொல்கிறார் வேலை செய்யாமல் இருப்பதை விட வேலை செய்வதில் அதிக மகிழ்ச்சி இருக்கு என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். எங்கள் உடம்பை பாதுகாத்து சுகமாக இருக்க எத்தனை வாகனம் இருந்தும் நடப்பதைப் போல, எங்கள் மனதை நல்வழிப்படுத்த நல் வாழ்வில் அனுபவப்பட்டவர்களிடம் நெருக்கம் வைத்து

பழகிக் கொண்டு மனதுக்கு சாந்தியைப் பெற வேண்டும். பிரார்த் தனை, பஜனை, செய்வதால் மட்டும் இறைவனை அடைய முடியாது. நல்ல மனதை உருவாக்கி இறைவனுக்கு சமப்படுத்த வேண்டும். என்ன வேலை செய்தாலும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்வதாக நினைத்து செய்ய வேண்டும். படிப்புக் கூட அப்படி நினைத்து அர்ப்பணத்தால் முதல் வகுப்பில் வர முடியும். தாய் தந்தையை மகிழ்ச்சிக்கு உள்ளாக்க வேண்டும். குருவையும், கடவுளையும் போற்றி புகழ்ந்து மகிழ வேண்டும். ஒருபக்தர்க்கு கனவில் போய் பாட்டு ராகத்துடன் சொல்லி கொடுத்து விட்டு மறைந்தார். பின்பு ஒரு மாதம் கழித்து பக்தன் பாபாவிடம் போக அந்த பாட்டையே பாடக் கேட்டார்.

கடவுள் எங்களுக்குள் இருக்கிறார் என்பதை உணர வேண்டும். பாபாவிடம் அன்பாகவும் (மானசீகமாக) ஆன்மீக மாகவும் இருந்தால் அவர் பக்கத்தில் தானாக வருவார். அகங் காரம், மமதை, கோபம், பொறாமை எல்லாம் விட்டபின்தான் நாங்கள் ஆண்டவன் அருகில் இருக்கலாம். நாம் பாபாவிடம் தரிசிக்கும் பொழுது ஒன்றும் கேட்காமல், அகங்காரம் இல்லாமல், சுயநலம் இல்லாமல், தூர இருந்தாலும் அமைதியாக இறை சிந்தனையில் இருந்தால் பகவானை நெருங்கிட சந்தர்ப்பம் உண்டு.

பூ மாதிரி நாங்கள் இருக்க வேண்டும். எங்கள் மனம் மற்றவையுடன் ஒப்பிடக் கூடாது. மற்றவையுடன் ஒப்பிட்டால் ஒரு நாளும் திருப்தியாக இருக்க முடியாது. சந்தோசமாக இருக்க முடியாது. பூ மற்ற பூவுடன் ஒப்பிடாமல் இருப்பதால் பூக்கள் அழகாக இருக்கிறது. அதே போல நாங்களும் அழகாக இருக்க முடியும். அளவுக்கு மிஞ்சி காசு பொருளை சேர்ப்பவன் சந்தோசமாக இருக்க முடியாது. அதை அனுபவிப்பவனே சந்தோச மாக இருப்பான். மங்கலம் மிக்க பொருளாக இருப்பதும்

புனிதத்திலும் புனிதமான பொருள் என்றால் இறைவன் நாமமே. அசுர குணம் உள்ளவர்களை அறுத்து விடுங்கள். நல்ல புத்தி உள்ளவர்களை நாடுங்கள் என பாபா கூறுகிறார். இறைவனிடம் தஞ்சம் அடைந்தவர்கள் மட்டுமே நிரந்தரமான சந்தோஷத் தையும், விவேகத்தையும் அடைய முடியும். இறைவன் நாமத்தை எந்த நேரத்திலும் எந்த சந்தர்ப்பத்திலும் நாங்கள் நல்ல பக்தியுடன் சொன்னால் மலையாக குவிந்து கிடக்கும் பாவங்கள் இடி மின்னல் போல எங்களை விட்டு போய் விடும் என பாபா கூறுகிறார். தீவிரமான உலக பற்றில் இருந்து விலகி இருக்க இறைநாமம் நிச்சயமாக காப்பாற்றும்.

ஒரு நிமிடம் கூட இறை நாமத்தை சொல்லாமல் இருக்க கூடாது. பிரகலாதன் கூட இறைநாமத்தை சொல்லி அசுர்களின் இதயத்தைக் கூட ஆட்கொண்டான். தீயவர் தொடர்பை துண்டிக்க வேண்டும். நல்லவர் தொடர்பை மேம்படுத்த வேண்டும். கர்மம், ஞானம், யோகத்தை விட பக்தி மார்க்கமே சிறந்தது என பாபா கூறுகிறார். இறைவனிடம் வாணிப (வியாபார) மனப்பான்மை யில் பேரம் பேசி ஒன்றும் கேட்க கூடாது. கேட்டால் உண்மையான பக்தன் இல்லை என பாபா கூறுகிறார். எங்கள் சந்தோசம், துக்கம், இவைகளுக்கு காரணம் நாங்கள் முற்பிறவியில் செய்த பாவ புண்ணியம் ஆகும். வாலிபர்கள் இளமையுடனும் உற்சாகத்துடனும் இருக்க வேண்டும் என பாபா கூறுகிறார். ஒருவர் தீயவர்களின் நட்பை விலக்க வேண்டும். அதே போல் நல்லவர்களின் நட்பும் அளவுக்கு அதிகமாக இருக்க கூடாது. தாய் தந்தையரை கடவுளாக எண்ணி மதிக்க சொல்லி பாபா கூறுகிறார். பெற்றோர்களின் கட்டளைக்கு கீழ்ப் படிந்து நடக்கச் சொல்கிறார்.

வாழ்க்கையில் சோதனை இன்றி யாரும் வெற்றி அடைய முடியாது. எங்கே சென்றாலும் அன்பினை வளர்த்துக் கொள்ளுங் கள் அன்பாக நடந்து கொண்டால் எதிரியைக் கூட சரி செய்து

விட முடியும். உலகத்தில் மக்களுக்கு எல்லாமே மாறும் ஆனால் இறைவன் மட்டுமே மாற மாட்டார். அதனால் எங்கள் இதயத்தை இறைவனிடம் அர்ப்பணம் செய்ய வேண்டும். இதன் மூலம் ஆனந்தம் அனுபவிக்க முடியும். எங்கள் மனம் பித்துப் பிடித்த குரங்கு போலவே என்கிறார். மக்கள் வெளி உலகத்து உறவால் துன்பப் படுகிறார்கள். மக்கள் அந்த உறவை கொஞசம் குறைத்தால் தான் ஆரோக்கியமாக வாழ முடியும். இறைவன் தான் தாயும், தந்தையும், மற்ற அனைத்தும் ஆவார். அவர் மட்டுமே போதிப்பவரும், எனது புகலிடமும் என்று திட நம்பிக்கை இருக்க வேண்டும். கடவுளை மறந்து பிற எண்ணங்களில் மனதை செலுத்தினால் வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்து விடுவார்கள் என பாபா கூறுகிறார். குறுகிய நோக்கம் இருந்தால் வாழ்க்கை முழுக்க குறுகி விடும். அளவுக்கு அதிகமான ஆசைகள் அபாயத்துக்கு கொண்டு சென்று விடும். தேவை இல்லாத ஆசைகளை நினைத்து ஏங்காதே அது நிறைவேறா விட்டால் மனத்தளர்ச்சி அடையக் கூடாது. இறை வனுடன் இணைவதே மகிழ்ச்சி ஆகும். எந்த கஸ்டம் ,கவலை, நேரமும் நாங்கள் உசாராவாகவும், சந்தோசமாகவும் இருக்க வேண்டும். மெக்சிக்கோ நகரில் உள்ள சேச்சில் உள்ள படங்களில் அன்னை திரேசாவின் படத்தில் பூதகண்ணாடியால் அவரின் படத்தில் உள்ள கண்ணை பார்த்தால் அந்த நாட்டுக்கு வந்த முதன் முதல் (பக்தர்) பூசாரி தெரிவார்.

மெக்சிக்கோ நகரத்திற்குத் தான் சாயி சென்றார். முதன் முதலாக சாயி School அமைக்கப்பட்டது அதிகமாக சாயி பக்தர்களும், அங்கே இருக்கின்றனர். சாயி பிரேம பந்தம் இரத்த சம்பந்தத்தை விட உயர்ந்தது ஆகும். பிரேசிலிலும் சாயி பக்தர் அதிகமாக உள்ளனர். அங்கே சாயி பக்தர் இந்தியாவில் இருந்து போனவரை விமான நிலையத்தில் 30 பேர் சேர்ந்து சாயிபஜனை பாடி வழி அனுப்பி வைத்தனர். அமெரிக்காவில் சாயி பக்தர் கூடிய

இடம் ஆர்யன்டீனா அங்கே 30, 40 வருஷம் முதல் பாபாவின் தரிசனம் பெற்றவர்களாம் எனக் கூறப்படுகிறது. இங்கே 100 இற்க்கு மேல் சாயி நிலையங்கள் உள்ளன. சில இடங்களில் நாராயணா சேவையும் நடக்கிறது. இங்கே ஒரு இந்தியர் கூட இல்லை. அப்படி இருந்தும் பஜனை, நடனம், நாடகம் எல்லாம் நன்றாக நடக்கிறது. பக்தர் பாபாவிடம் வரவில்லை. பாபா அங்கே போகவில்லை. அப்படி இருந்தும் பக்தர்களை இவ்வாறாக உண்டாக்கியது சாயி சங்கல் பமே. கற்பாறையை கூட செதுக்கி சிலை ஆக்க முடியும். முடிச்சு விழுந்து கோணலாக இருக்கும் மரத்தைக் கூட நேர் ஆக்கலாம். ஆனால் அலை மோதும் மனதை அமைதிப்படுத்த முடியாது.

கடவுள் மேல் நம்பிக்கை வைத்திருக்கும் மனிதரை இறைவன் காப்பாற்றுவார். சாயி பாபா கூறுகிறார் வியாழக் கிழமையில் தான் அருள் பொங்கி ஆசி வழங்குகிறது எனக் கூறியுள்ளார். வாழ்க்கையின் போராட்ங்களை தவிர்ப்பதற்கு ஒன்றும் நிரந்தரம் இல்லை என்று நினைத்தால் மனதுக்கு ஆறுதல். மனதைக் கட்டுப் படுத்த பழக வேண்டும். சுகமாக இருப்பதற் காகும். பாபாவின் சரித்திரத்தை எழுதும் கஸ்தூரி என்பவரை முதல் சந்திப்பிலே பாபா ஆட்கொண்டு விட்டார். தனது சரித்திரத்தை எழுத சொல்லி பாபாவே கூறினார். பாபா கூறுகிறார் எந்த வயதினரும் ஏதோ ஒரு பணியில் ஈடுபட வேண்டும். அல்லது பைத்தியம் பிடித்து விடும் சும்மா இருக்கக் கூடாது. சோம் பேறித்தனமான வாழ்க்கை துருப்பிடித்த இரும்பை போன்றது என பாபா கூறுகிறார். நான் ஒரு கருவி இறைவனே எல்லாம் செய்பவர் என நினைக்க வேண்டும்.

என்ன நடந்தாலும் இது மனிதர்க்கு தேவையான உணர்வு அப்படி நினைக்க வேண்டும். அது இறைவனின் சங்கல்பத் தால் நடந்தது. நன்மையோ, தீமையோ அவை நமது நன்மைக்கே

என நினைக்க வேண்டும். துயரத்தை தாங்குவது கஷ்டம். அதை தாங்க இறைவனிடம் தைரியத்தை கேட்க வேண்டும். நெடு நாள் துன்பம் இருக்காது. துன்பம் போய் இன்பத்தை ஆண்டவன் அருளுவார். துன்பம் இருந்தால் தான் இன்பம் வர செய்யும் எனவே எவரும் கஸ்டம் அனுபவிக்காமல் இன்பத்தை அனுப விக்க முடியாது. எப்பொழுதும் தைரியத்துடனும், மனத் தெம்புடனும் இருக்க வேண்டும். நடப்பவை எல்லாம் நன்மைக்கு என்று நினைக்க வேண்டும். துன்பம் என்பது மாயையில் உருவானது ஆகும். கடவுளிடம் மட்டுமே வசப்பட வேண்டும். வேறு யாரிடமும் வசப்படக் கூடாது. எங்கள் மனம் கட்டுப் பாட்டுடனும், நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். அப்போது தான் வாழ்க்கையில் மோட்சத்தை அடைய முடியும். நாங்கள் பந்த பாசங்களையும், மனித தன்மையையும் விட்டு தெய்வீக நிலைக்கு மாற வேண்டும்.

வாழ்க்கை என்பது 4 பேர் பலவிதமாக கதைப்பார்கள். அதை எல்லாம் மனதில் எடுத்து பிரச்சினைப் படாமல் வாழ்வதே வாழ்க்கை. கடவுள் மேல் நாங்கள் வைக்கும் அன்பினால் எங்கள் இதயமே நல்ல மாற்றம் அடையும். எங்கள் தீய எண்ணங்களை விரட்டி விடலாம். பாண்டவர்களும், திரௌபதியும், இமய மலைக்கு நடந்து போகும் பொழுது இறைவன் நாமத்தை சொன்ன படியே ஒவ்வொருவராக இறந்தனர். கடவுளிடம் அடைக்கலம் புக வேண்டும். நாம் எங்கு இருந்தாலும் அதாவது மலையில் இருந்தாலும் சரி, வனத்தில் இருந்தாலும் சரி எங்களைக் கைவிட மாட்டார். பாண்டவர்களின் இலட்சியங்களை பின்பற்றினால் மகிழ்ச்சி, மற்றும் வளம், மன அமைதி சேரும்.

எப்பொழுதும் தெய்வீகப் பெயர் எங்கள் உதடுகளில் இருந்து வெளிவர வேண்டும். ஒரு மாணவன் பாபாவிடம் கேட்டான்

நான் நிறைய படித்தாலும் மனதில் நிக்குது இல்லையே என்று கூறினான். பாபா சொன்னார் அதுதான் கல்வி என்னும் இப் போதுள்ள பாடத்திட்டம். அப்படி இல்லை நீ கவலைப்படாதே என்று தட்டிக் கொடுத்து சொன்னார். ஓவ்வொரு சகாப்தத்திலும் கடவுள் மனிதராக உள்ளார். (உ+ம்:- யேசு, புத்தர், கிருஷ்ணர், சாயிபாபா) சஞ்சல சுபாவம் கொண்ட மனம் கூட பரம் ஆத்மாவை தரிசிப்பதற்கு தடையாக உள்ளது. கூர்மையான பற்கள் சுற்றி வர நடுவில் நாக்கு இருப்பது போல கடிபடாமல் நாமும் சமூகத்தில் பலவித மனிதர்களை மற்றையவர்களை புண் படுத்தாமல் நாமும் புண்படாமலும் காப்பாற்ற பட வேண்டும். மனம் எப்படியோ அவ்வாறே தேகமும் ஆகும்.

தேகம் கஸ்டப்பட்டு வேலை செய்ய கஸ்டப்படும். ஆனால் மனமே வெளி உலகத்தில் ஓடுவது சகயமாகி விட்டது. சும்மா இருக்கும் மனம் ராட்சஸ குணங்களின் இருப்பிடம் ஆகும். சோம்பேறி பிடித்த மனம் பைத்தியம் பிடித்த குரங்கு போல இருக்கும். அதனால் சேவை மார்க்கத்தில் கொண்டு போனால் மனதை கட்டுப்படுத்த முடியும். வெற்றி, தோல்வி, இறைவனின் சங்கல்பமே என்று நினைத்து நன்றி உணர்வுடன் இருக்க வேண்டும். தோல்வி வெற்றிக்கான படியாகும். அது இறைவன் நமக்கு அளிக்கும் உபதேசம் ஆகும். மனித உடல் நீர்க்குமிழி போன்றது. மனித மனம் எண்ணங்களின் மூட்டை போன்றது. மானிட பிறவி எங்களுக்கு அளித்தது எல்லோர்க்கும் உதவி செய்யவே. எல்லோர்க்கும் உதவி செய் தீங்கு செய்யாதே. பாபாவின் School P.H.D வரை மருத்துவ சேவை எல்லாமே இலவசம் தான். பாபாவின் சேவையில் பணம் என்றதே இல்லை. எதையும் மறக்கலாம் ஆண்டவன் நாமத்தை மறக்க கூடாது.

நாங்கள் மானிட வாழ்க்கை எடுத்ததின் நோக்கம் நாங்கள் என்ன செயலை செய்தாலும் இறைவனை மகிழ்விக்கும்

செயலாக இருக்க வேண்டும். மற்றவையின் நலன் காப்பதில் ஈடுபட வேண்டும். அப்பொழுது எங்களை மோட்சத்திற்கு அழைத்துச் செல்லுவார் இறைவன். மற்றவர்களுக்கு எப்போதும் உதவுங்கள். காயப்படுத்தாதீர்கள் அன்பாக மற்றையவர்களுடன் பேச வேண்டும். எங்கள் எண்ணம் நல்லதாக இருந்தால் எல்லாமே நல்லதாக நடக்கும். எப்பொழுதும் பணிவாக கதைக்க வேண்டும். பகைவர்களைக் கண்டால் கூட வணக்கம் தெரிவிக்க வேண்டும். எப்பொழுதும் பணிவுடன் பேசினால் நல்லதையே பெறுவோம்.

ஆண்டவனின் வார்த்தைகள் தேனைப் போன்றது. இனிப் பானது. எங்கள் அழியும் உடலை விட்டாலும் ஆண்டவனின் நினைவை விடக் கூடாது. சமுதாயத்திற்கு சேவை செய்வது மிக முக்கிய கடமை. அது மனிதர்க்கு தெய்வீக சக்தியை தரும். சமுதாயத்திற்கு செய்யும் சேவை இறைவனுக்கு செய்யும் சேவை ஆகும். எல்லா ஜீவராசிகளும் இறைவனின் அங்கங்களாகும். அதனால் எல்லோரிடமும் அன்பாக இருக்க வேண்டும். எங்கள் துன்பங்களுக்கு காரணம் நாங்கள் தான் கடவுள் இல்லை. எந்தக் காரியம் நாங்கள் செய்தாலும் இறைவனுக்கு மகிழ்ச்சி அளிக்க கூடியதாக இருக்க வேண்டும். என்ன செயல் செய்யும் முன்னும் இறைவனுக்கு பிரார்த்தனை செய்யுங்கள் நிச்சயமாக ஆனந்தம் அடைவோம்.

பணம் வந்து போகும். அன்பு மட்டும் தான் நிரந்தர மானது. எந்த பெரிய பணக்காரனோ, அரசனோ போகும் போது ஒன்றையும் கொண்டு போவது இல்லை. செல்வம் படைத்தவர்கள் ஏழைகளையும், நோயில் துன்பப்படுபவர்களையும் கவனிக்க வேண்டும். சமுதாய சேவை செய்ய முன்வருபவர்கள் எல்லோரும் மேன்மையானவர்கள். ஆன்மீகத்தினால் தான் மனித பண்புகள் வளரும். காலையில் 04 மணிக்கு எழும்பி ஓங்காரத்தை சொன்னால் ஆனந்தத்துக்கும், ஆரோக்கியத்துக்கும் பலன்

அளிக்கும். சுவாமி பாத நமஸ்காரம் வேண்டாம் ஆனால் அகங்காரத்தை எல்லோரையும் விடச் சொன்னார். சுவாமியின் இதயத்தில் நாங்கள் இருந்தால் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் சரி, பக்கத்தில் இருந்தாலும் சரி சுவாமியின் அருள் எங்களுக்கு கிடைக்கும்.

நாம் அனைவரையும் நேசித்தல் வேண்டும். நாம் அனைவரையும் நமது அரவணைப்புக்குள் ஏற்றுக் கொள்ள வேண்டும். என்று பாபா கூறுகிறார். ஆபிரிக்க நாட்டு ஜனாதிபதி இடியமின் கூட கண்ணீர் சிந்தி. பாபாவிடம் பக்தி கொண்டார். பாபா அனைவருக்கும் கூறுவது அனைவரையும் நேசி, அனைவருக்கும் சேவை செய் என்பதாகும். மனிதர் இனிமையாகவும், மென்மையாகவும் பேச வேண்டும். பிறகு தான் அமைதியைக் காண முடியும் என கூறுகிறார். எந்த பெரிய பணக்காரனுக்கும் மனம் அமைதி இல்லையானால் அந்த பணத்தால் என்ன பலன் என்று பாபா கூறுகிறார். சினம், பொறாமை, அகந்தை போன்ற கெட்ட குணங்கள் இருந்தால் வாழ்க்கையில் மனக்கொதிப்பு, அமைதியற்று, வேதனை, துன்பம், நிறைந்ததாக அமைந்து விடும். உலகத்தில் பலசாலி என்றால் மனதை அலைய விடாமல் கட்டுப் படுத்துபவர் தான்.

எங்கள் இன்ப, துன்பங்களுக்கு காரணம், எங்கள் கர்ம பலன் தான். “நல்லதையே பார், நல்லதையே செய், நல்லவனாக இரு” இதுவே இறைவனை நோக்கி செல்லும் வழி. மக்கள் வாழ்க்கையில் சஞ்சலங்களால் பாதிக்கப்பட்டு மனத் திருப்தி இல்லாமல் உடலளவிலும், மனதளவிலும் பாதிக்கப்படு கிறார்கள். பாபா கூறுகிறார் ஆனந்தமே தனது உணவு என்கிறார். இடைவிடாது இறைவனை தியானம் செய்தால் வேறு எந்த எண்ணமும் இடையூறு செய்யாது எப்போதும் சந்தோசமாக இருக் கலாம். வாழ்க்கையில் வரும் கஸ்டம், கவலையை இது எனக்கு

சொந்தமில்லை என்று நினைத்து வேறு யாருக்கோ அது சொந்தம் என்று நினைத்து புறக்கணித்து நடக்க வேண்டும் ஓடும் மேகங்கள் போல என்று நினைக்க வேண்டும். சுவாமி எங்களுடனே இருக்கிறார் என்று நினைக்க வேண்டும். எங்கள் மனதை தூய் மையாகவும், களங்கமில்லாமலும் வைத்திருக்க தைரியம், பொறுமை, சகிப்பு தன்மை இவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பெற்றோர்க்கு துன்பம், வலி, கொடுத்தால் சுவாமி தனக்கு தந்தது போல என்று சொல்கிறார். கடவுளுக்கும், பெற்றோருக் கும் இடையில் எவ்வித வேறுபாடும் இல்லை என்கிறார். உலகத் தில் கண்ணால் காண்பது எதுவும் நிரந்தரம் இல்லை. இறைவன் ஒருவர் தான் நிரந்தரம். நல்லவர்களுக்கு கெட்டவர்கள் எப்போதும் பிரச்சினையை உருவாக்குவார்கள். பாபா சொல் கிறார் பசிக்கு சாப்பிடு. ருசிக்கு சாப்பிட்டு உடம்பை வளர்த்துக் கொள்ளாதே என்கிறார். அன்னதானத்தை விட உயர்ந்த தானம் இல்லை. பெற்றோரை விட உயர்ந்த தெய்வம் இல்லை. நல்ல வனுடன் சேர்ந்தால் நல்லவனாக மாறலாம். கெட்டவனுடன் சேர்ந்தால் கெட்டவனாக மாறலாம். மற்றவர்கள் படும் துன்பங் களை பார்த்து உதவி செய்யாமல் இருப்பது பெரிய பாவம் ஆகும். நாங்கள் மற்றையவர்களுடன் அன்பாக இருந்தால் தான் இறைவன் எங்களுடன் அன்பாக இருப்பார். உலகத்தில் உள்ள பொருட்கள் எல்லாம் எனக்கு சொந்தம் என்று நினைக்கக் கூடாது. அனுப விக்க வேண்டும். அனுபவித்து முடிய அது எனக்கு சொந்தம் என்று நினைக்க கூடாது. அப்படி நினைப்பது எங்கள் மனதுக்கு கூடாது. இரு மனம் கொண்டவன் அரை குருடன் ஆகின்றான். பெண் தெய்வம் தான் "தாய்" போல இரங்கி முதலாவதாக மக்களுக்கு உதவி செய்வார். தாயை விட உயர்ந்த தெய்வம் இல்லை. நாங்கள் மற்றயவர்களுக்கு உதவி செய்வது ஒருவருக்கும்

தெரியக் கூடாது. அப்படி இருந்தால் தான் இறைவன் எங்களுக்கு உதவி செய்வார் என பாபா கூறுகிறார். எங்களை துன்புறுத்திய வர்களையும் நேசிக்க வேண்டும். அவர்களுக்கு பிரார்த்தனையும் செய்ய வேண்டும். நான் அமைதியை இழக்க மாட்டேன் மற்றை யவரையும் அமைதியை இழக்க வைக்க மாட்டேன் மற்றவர் களுக்கு உதவியைக் கொடுப்பேன். நாங்கள் கொடுக்கிறதில் சந்தோசம் இருக்கெனவும், வாங்குவதில் சந்தோசம் இல்லை எனவும் பாபா கூறுகிறார். நாங்கள் படும் சந்தோசம் மற்றவை பட வேண்டும்.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் நினைக்கும் ஒவ்வொரு நினைவும் எங்கள் அடுத்த பிறவிக்கு எடுக்கும் கர்ம கணக்குக்கு பதிவாகிறது என பாபா கூறுகிறார். எங்கள் கர்ம கணக்கை அனுபவிக்க தான் வேண்டும். ஆனால் இறைவனை வேண்டி னால் அதற்கு "விடுதலை ஆக" நிவாரணம் பெற வேறு வழியை தருகிறார் இறைவன் பாபா. நான் இருக்க பயம் வேண்டாம் என்று வேறு வழியில் உதவி செய்வார். கர்மாவால் நாங்கள் வறுத்து எடுக்கப்படுவமாம் இறைவன் பாபா நினைவில் அதை தீர்க்கலாம். இறைவனை தேட ஆரம்பியுங்கள் மற்றையவை தானாக வரும். இறைவனுக்கு தான் முதலிடம் கொடுத்து இறைவனை நினைக்க வேண்டும். ஏனெனில் பிரச்சினை ஒன்று போக ஒன்று வரும். முடிவே வராது. பாபா சொல்கிறார் எங்களது கர்ம வினைகளை குறைக்க ஏலாது. ஆனால் நாங்கள் எங்கள் கர்மாவை நினைத்து வருந்தி இறைவனை நினைத்து பிரார்த்தனை செய்தால் தாங்கி கொள்ளும் சக்தி கிடைக்கும் என கூறுகிறார்.

பாபாவின் புத்தகத்தில் நாங்கள் படும் துன்பத்துக்கு காரணம் நாங்கள் தான் என்றும், எங்கள் கர்மா என்றும் உள்ளது. பாபாவின் பார்வை மட்டும் பட்டாலே எங்கள் பாவங்கள் தீரும் என கூறப்பட்டுள்ளது. பிராமண வாழ்க்கையின் மூச்சே உட்சுகம்

உள்ளது. பிராமண வாழ்க்கை என்பது சோர்வடையாது. சிவபாபா சொல்கிறார் மற்றவைக்கு ஆசீர் வாதங்களைக் கொடுத்து ஆசீர் வாதத்தை பெற வேண்டும் என்கிறார். எங்கள் இதயம் பாபாவின் சிம்மாசனம் ஆகும். தந்தை நினைவுடன் எங்களுடன் அவரை நினைத்துக் கொண்டு எதை செய்தாலும் மலை போல விஷயமும் பஞ்சு போல ஆகிவிடும். தனக்கு வரும் இகழ்ச்சியையும் புகழ்ச்சியாக நினைத்து நடப்பவரையே புண்ணிய ஆத்மா என கருதலாம். எங்களுக்கு துன்பம் தரும் ஆத்மாக்களுக்கு நாங்கள் மலர்களை வழங்க வேண்டும். கருணை பார்வையும் பார்க்க வேண்டும். அப்பொழுது தான் நாங்கள் புண்ணிய ஆத்மா என அழைக்க முடியும். மனதை அலைய விட்டால் ஆபத்தில் மாட்டிக் கொள்வோம். இறைவனை நாடினால் சாவின் பிடியில் இருந்தும், வாழ்வின் பிடியில் இருந்தும் விடுவிக்க வல்லவர் இறைவன். ஒருசிறுபிள்ளைக்கு தாய் எப்படி முக்கியமோ அவ்வாறு பெரியவர்களுக்கு இறைவன் முக்கியம் ஆகும். யார் ஒருவன் உணவை தனிய உண்கிறானோ அவன் திருடன் ஆகின்றான் என்று பகவத் கீதையில் உள்ளது. பாபாவின் புத்தகத்தில் உள்ளது எப்படி பொருட் செல்வம் தேவையோ அப்படி ஆன்மீக செல்வம் தேவை என கூறப்படுகிறது.

காலம் வீண் ஆக்கப்பட்டால் வாழ்க்கை வீண் ஆகிறது என பாபா கூறுகிறார். எல்லா உணர்வையும் பிரிக்கலாம். இறைவன் உணர்வை மட்டும் பிரிக்க முடியாது. அது தான் எங்களுடன் கடைசி மட்டும் வருவது ஆகும். எங்கள் மனதை அடக்க சிறந்த வழி தியானம் என்கிறார் பாபா. காயத்திரி மந்திரத்தை சொல்லி உன் மனதை தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். உணவு கடவுளுக்கு சரி என்று பாபா கூறுகிறார். அதனால் உணவை வீசக் கூடாது. நாங்கள் சுகமாக இருக்கவும் சொர்க்கம் போகவும் செய்ய வேண்டியது மற்றவர்களிடம் எங்களை விட படிப்பு, பணம், என்ன சரி நன்றாக இருந்தால் (பொறாமை, எரிச்சல்) படக் கூடாது.

அது அவைக்கு ஆண்டவன் கொடுத்த கொடை என்று நினைக்க வேண்டும். குழந்தைகளை நன்றாக வளர்க்க கட்டுப்பாடும், முயற்சியும் தேவை. அதற்கு மேலாக பெற்றோரும், மற்றோரும் முதல் உதாரணமாக இருக்க வேண்டும். என்று சத்திய சாயி பாபா கூறுகிறார். பாபா எங்கள் இதயத்தில் இருக்கிறார். அதனால் அவர் தான் எங்களுக்கு அறிவு, மறதி, நினைவு எல்லாமே தருகிறார்.

பாபா தியானம் இருக்க 11 செக்கன் போதும் என்று கூறுகிறார். கூடநேரம் இருந்து உடலை வருத்த வேண்டாம் என்று கூறுகிறார். அவசரம், கவலை, மச்சம் (மாமிசம்) மூன்றும் சேர்ந்து இதய நோயினை உண்டாக்கி விடும். சிரித்த முகத்துடனும், மகிழ்ச்சியுடனும் இருந்தால் எங்களுடன் அன்பு வளரும். இறைவனுக்கு துன்பமும் கவலையும் வராது என்கிறார் பாபா. எந்த தெய்வத்தின் நாமங்களை என்றாலும் நாங்கள் சொன்னால் எந்த துன்பத்தில் இருந்தும் நாங்கள் விடுதலை அடைய முடியும். (பாலம்) போல துன்பங்களை கடந்து செல்ல முடியும் என்கிறார் பாபா. இறைவனிடம் நல்ல நம்பிக்கை வைத்து இருந்தால் எந்த துன்பமும் எங்களுக்கு வராது. எதையும் இழக்கலாம் ஆனால் இறைவன் மீது உள்ள மன நம்பிக்கையை இழக்க கூடாது என்று பாபா கூறுகிறார். வாழ்க்கையில் இறைவன் தரும் சோதனைகளை எதிர் கொண்டு இறைவன் மீது நம்பிக்கை வைத்து எங்கள் கடமையை செய்து வந்தால் வெற்றி நிச்சயம் என பாபா கூறுகிறார்.

பாபாவை உண்மையான இதய பூர்வமாக அன்புடன் வேண்டினால் அவர் 7 கடல் கடந்து வந்து தன்னும் தேவையான உதவியை செய்வார். இறைவன் ஒருவரே எங்கள் குறையை கேட்டு நிறைவு செய்யும் வல்லமை உள்ளவர். நோய் வந்து

காப்பதை விட வருமுன் காப்பதே சிறந்ததாகும். மனதில் சுயநலம் அற்று இருப்பவரிடம் சுவாமி (பாபா) அவர்களிடமே இருப்பார். காற்றை விட அதி வேகமாக செல்வது எங்கள் மனம் ஆகும்.

பாபா சொல்கிறார் நாங்கள் ஒழுக்கத்தை கடைப்பிடித் தால் வாழ்க்கையில் நல்ல வளர்ச்சியினை காணலாம். தன்னம் பிக்கையை வளர்த்துக் கொண்டால் மற்ற அனைத்தும் எங்களுக்கு கிடைத்து விடும். அன்பும், சத்தியம்(நேர்மை) இருந்தால் இவ் உலகில் அனைத்தையும் சாதிக்கலாம். அன்பு மட்டும் இருந்தாலே எதையும் சாதிக்க முடியும். சகிப்பு தன்மையை விட்டு விடக் கூடாது. நாங்கள் எதை செய்தாலும் இறைவனுக்கு செய்யும் பணி எனச் செய்யவும். ஏனெனில் இறைவன் எல்லா இடத்திலும் இருக்கிறார். எங்களுக்கு நடப்பவை எல்லாம் இறைவன் தீர்மானமே ஒழிய எங்கள் தீர்மானம் இல்லை. எங்கள் முயற்சியும் இல்லை என பாபா கூறுகிறார். ஒற்றுமையும், தூய்மையும் இருந்தால் தான் இறைவனை அடைய முடியும்.

இறைவனை மறந்தால் நாம் செய்யும் எக்காரியமும் வீணாகி விடும் என பாபா கூறுகிறார். எங்கள் இதயத்தை கடல் போல வைத்துக் கொள்ள வேண்டும். (ஒரே மாதிரி) ஆசையை கூட்டி கஸ்டப்படாமல் பக்தி குறையாமல் கடல் போல இருக்க வேண்டும். எப்பொழுதும் மாறாமல் பெரிய அலை வந்தாலும் கடல் மாறாமல் இருக்கும். என பாபா கூறுகிறார். ராம், ராம், ராம் என்று அழுத்தமாக நாங்கள் இறைவனை வேண்டினால் இறை வனின் அருளை பெற்றிடலாம் என பாபா கூறுகிறார். சகிப்பு தன்மை மிக அவசியமானது. எங்களிடம் அன்பு இருந்தால் எதனையும் சாதித்து விடலாம். பாபா மற்றவைக்கு கொடுத்துக் கொண்டே இருந்தால் எல்லாம் எங்களுக்கு கிடைத்து கொண்டே இருக்கும் என்கிறார். (உதாரணம்:- நீர் ஓடிக்கொண்டிருப்பதில் அழுக்கு படியாது. நின்று கொண்டு இருக்கும் நீர் தான் அசுத்

தப்படும்.)

மனதை எப்படி கட்டுப் படுத்துவது என பாபாவிடம் கேட்க இறைவனுக்கு அனைத்தையும் அர்ப்பணிப்பதில் இருந்து நாங்கள் மனதை கட்டுப்படுத்த முடியும் என்று பாபா சொல்கிறார். எல்லாமே ஆண்டவன் பொறுப்பு என்று விட்டால் எங்கள் மனம் கட்டுப்படும். முக்கியமாக இளைஞர்களுக்கு பணிவும், கட்டுப் பாடும் முக்கியம் என்கிறார் பாபா. அதோடு நன்றியுணர்வும் முக்கியம் என்று பாபா சொல்கிறார். பெரியவர்களின் வார்த்தை களை மதிக்காதவர்கள் சாயி நிறுவனங்களில் அங்கத்தவராக இருக்க முடியாது என்று பாபா சொல்கிறார். சுவாமி சொல்கிறார் வயதாகி விட்டது என்று சொல்லக் கூடாதாம். எங்கள் புத்திக் கூர்மை, உற்சாகம், இந்திரியக் கட்டுப்பாடு, மனக் கட்டுப்பாடு இருக்கிறதா, இல்லையா என்று தான் இவை இருந்தால் 18–40 வயதிற்குள் இருந்தாலும் இளைஞர்கள் இல்லை என்று பாபா கூறுகிறார். எங்கள் மனதை சுத்தம் செய்து கொண்டு போனால் எங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு தடையே இல்லை என்கிறார் சிவபாபா.

சிவபாபா கெட்டதைப் பார்க்காதே, கெட்டதை கேட்காதே, கெட்டதைப் பேசாதே கெட்டதை நினையாதே ஞானத்தையே கேள் என்று கூறுகிறார். எங்களுக்கு உண்மையான துணையாக பாபாவை வைத்து கொள்ள வேண்டும். நல்ல முயற்சியை செய் வதற்காகவாகும். ஒருவருக்கு ஒன்றை நாங்கள் கொடுத்தால் எங்களுக்கு அது வளர்ந்து கொண்டே போகும். அதனால் நாங்கள் பிச்சைக்காரராவது இல்லை. என்ன பிரச்சினை என்றாலும் அன்பைக் கொடு பிரச்சினை தன்பால் தீர்ந்து விடும். அகங்காரம் இருந்தால் பிரச்சினை தீராது. எங்கு அன்பு இருக்கிறதோ அங்கு பிரச்சினை இல்லை. ஒருவரிடம் மட்டும் அன்பை செலுத்தினால் முள் ஆகி விடும். பாபா சொல்கிறார் ஒரு

வரையும் பற்றி தான் நினைப்பதில்லை எனவும் அதனால் கவலை இல்லை என்றும் கூறுகிறார். பாபாவின் உள்ளம் கடல் போல அதே போல எங்கள் மனதையும் வைத்திருக்க வேண்டும். மற்றவர்களுடைய உள்ளத்தில் வரும் ஆசீர்வாதங்களே எங்களுக்கு வருமானம் ஆகும்.

மற்றவருக்கு அதிஸ்டம் வரக்கூடிய முறையில் நம் செயல் இருக்கட்டும். மனம் அமைதி இல்லாமல், கோபப்படும் பொழுது 3 நிமிடம் தியானம் இருக்க பாபா மனதுக்கு ஆறுதல் தருவார். கோபம் என்பது பூதம் மற்றவர்கள் கோபப்படும் பொழுது நாங்கள் அமைதி, சாந்தி கொடுக்க வேண்டும். ஒருவருடைய துக்கத்தை எடுக்கவும் கூடாது அதே நேரம் கொடுக்கவும் கூடாது என்கிறார் சிவபாபா. மற்றவை ஏதும் குறை சொன்னால் அதைப்பற்றி நான் கவலைப்பட்டால் அது என் பலவீனம் என்கிறார். எல்லோரையும் சமம் ஆக பாவிப்பதே பிரம்ம குமாரிகளின் இயல்பு ஆகும். நான் எந்த நேரத்திலும் சந்தோசமாக இருப்பேன் என்று சபதம் எடுக்க வேண்டும். பாபாவின் ஆசீர்வாதம் கிடைப்பவர் எப்போதும் சந்தோசமாக இருப்பார்.

வீண் எண்ணமும், கெட்ட எண்ணமும் இருக்க கூடாது. ஞான அமிர்தத்தை மரணம் வரை கேட்டு வர வேண்டும். சின்ன, சின்ன விடயங்களுக்கு எல்லாம் கோபம் வருவது என்றால் பிரம்ம குராரிகளின் பெயருக்கு கெடுதி செய்வதாகும். யாரும் ஏதும் சொன்னால் பொறுத்து (அமைதி) இருந்தால் கோபம் போய் விடும். ராயயோகம், எளிமை, ஒற்றுமை, அன்பு, தூய்மையை கற்று தருகின்றது. யார் எல்லா விடயத்திலும் திருப்தியாக இருக்கிறாரோ அவர் அமைதியாக இருக்கிறார். மனதில் எந்த ஆசையும் வரவிடாமல் கவனமாக இருக்கவும். மற்றையவரைப் பற்றி சிறு தவறான எண்ணம் வந்தாலும் அது ஆத்மாவிற்கு கேடு தரும். சிவ பாபாவை நினைவு செய்வ

தால் ஜென்ம, ஜென்மமாக செய்த பாவங்கள் நீக்கப்படும் என்று பாபா சொல்கிறார். ஆத்மீக அன்பால் எதிரியைக் கூட பார்த்தால் எங்கள் நண்பனாகி விடுவான்.

நாங்கள் சாப்பிடுவது, உடுப்பது, எண்ணுவது இல்லை. அதே போல மற்றையவைக்கு செய்வதையும் எண்ணாமல் பெரிய மனம் படைத்தவர்கள் ஆக இருக்க வேண்டும். விஜயதச மியன்று தான் சீரடி பாபா உயிர் நீத்த நாள். நாங்கள் நேர்மை யாக எதை செய்தாலும் தர்மமாக மாறி விடும். எங்களுக்கு சத்தியமும் (உண்மை), தருமமும் தான் எப்பொழுதும் நிலைத் திருப்பது ஆகும். நாங்கள் கடவுளை கும்பிட்டபடி இருக்கும் பொழுது எங்கள் மனம் எங்காவது சென்றால் அதில் பலன் இல்லை என்கிறார் பாபா. உண்மைக்கும், அன்புக்கும் எங்கள் மனதில் இடம் பெற செய்ய வேண்டும். சத்தமாக சிரிக்க கூடாது. இலேசான சிரிப்புடன் எல்லோரிடமும் பழக வேண்டும். சத்தமாக சிரிப்பது மற்றவர்களை இழிவுபடுத்துவதற்கு சரியாகும். பாபா எங்களுக்கு தரும் வெற்றியானது ஆழமான நீர்வீழ்ச்சியில் இருந்து ஊற்றெடுத்து வருகிறது எனக் கூறுகிறார்.

பாபாவுக்கு நல்ல மனதுடன் சேவை செய்தால் பாபா வாழ்க்கைக்குத் தேவையானதையும், தந்து வாழ்க்கைக்கு பிறகு தேவையானதையும் தந்தருளுவார். பாபா தன்னையே நிரந் தரமாக நினைவு செய்யும் படி, அடிக்கடி நினைவுக்கு தக்க சுகத்தை அனுபவிப்போம் என்றும் கூறுகிறார். அப்படி பாபாவை நினைப்ப தால் உடல் சம்பந்தப்பட்ட குழப்பங்கள் முடிவுக்கு வரும் என்றும் கூறுகிறார். சின்னப்பிள்ளைகளை பாபா மலர்கள் என்று சொல்கிறார் அவர்கள் விகாரம் இல்லாதபடியாலேயே ஆகும். மாயாவை யார் தோழனாக வைத்து கொண்டாரோ அவர் பிரமணர் அல்ல இல்லறவாசி ஆகும். பணிவாக உள்ளவர் மற்றையவர்களின் மனதை வெற்றி கொள்வார். பணிவு என்பது

மற்றையவையை வணங்குவது இல்லை. மற்றவரை வணங்க வைக்கும் செயல் ஆகும். ஏதாவது பிரச்சினை வந்தால் எங்கள் மனதுக்கு நாங்கள் ஆறுதல் கொடுத்து சாந்தப் படுத்த வேண்டும். மற்றவருக்கு நல்லதை செய்து விட்டு மறந்து விடுவது பெரிய சேவை ஆகும்.

தந்தையை நினைக்க, நினைக்கத்தான் எங்கள் ஆத்மா சுத்தமடையும் என்று பாபா கூறுகிறார். தந்தை குணம் போலவே எங்கள் குணம் இருக்க வேண்டும். பிராமண வாழ்க்கையை கடைப் பிடித்து வருகின்றோமோ என்று நினைத்து பார்க்க வேண்டும். பெயர், புகழை விரும்புகிறவர்களை பாபா விரும்பு வதில்லை. பாபா நாங்கள் இலேசானவர்களாக இருக்கவே விரும்புகிறார். நாங்கள் சுறு சுறுப்பாக இருந்தால் மாயை எங்களுக்கு வராது. பாபாவின் தண்டனையில் 100 மடங்கு கிடைக்கும். அதில் இருந்து நாங்கள் நீங்குவற்கு பாபாவிடம் மன்னிப்பு கேட்டு யோகாவும் செய்ய வேண்டும். இரவு படுக்கும் பொழுது ஆஞ்சநேயரை கும்பிட்டபடி படுப்பது நல்லது. பாபா அறையில் படுப்பதுஎன்று நினைத்து படுக்க வேண்டும். துக்கம், சுகம், மானம், அவமானம், எது வந்தாலும் சமமாக இருக்க வேண்டும் என பாபா கூறுகிறார்.

வெற்றி என்பது ஆழமான உறுதியில் இருந்து ஊற்று எடுக்கிறது என பாபா சொல்கிறார் எங்கள் வாழ்க்கையை நல்வழிப்படுத்துவதற்கு தான் நாங்கள் பாபாவின் Center க்கு வந்து சேருவது என்கிறார். பாபாவுக்கு உண்மையான மனத் துடன் சேவை செய்தால் அன்னம் மட்டும் இல்லை. அமிர்தத்தைக் கூட தந்து விடுவார். சாய் மாணவர்களுக்கு நல்ல சக்தி ஆற்றல் வரும் என கூறப்படுகிறது. சாதனைக்கு வைராக்கியமே முக்கிய மானது. பாபா சொல்கிறார் நான் விடும் பிழையை டயரியில் எழுதி வைத்திருந்து இடை, இடையே அதை எடுத்து பார்த்து

திருந்தி நடக்க வேண்டும். இராமநாமத்தை காகம், மயில், பசு முந்திய பிறவியில் சொன்னதால் மனிதப்பிறவியில் இளவரசனாக பிறந்தது. அதனால் இராமநாமம் சக்தி வாய்ந்தது. என்று பாபா கூறுகிறார். நான் செய்தேன் என்று எதையும் நினைக்கக் கூடாது. அது ஆண்டவன் பாபா செய்தார் என்று தான் நினைக்க வேண்டும்.

காலையும், மாலையும் ராம, ராம, ராம என்று முழு மன துடன் செய்தால் போதும் தெய்வ நாமத்தை ஒருமுறை சொன்னாலே போதும். இறந்தவர் கூட உயிர்த்தெழுந்திட முடியும் என்று பாபா கூறுகிறார். இதயத்தில் தூய்மையாக இருப்பவர்கள் என்றும் வெற்றி பெறுவார்கள். எல்லாமே மாறும், ஒன்றும் வாழ்க்கையில் நிரந்தரம் இல்லை. ஒரு பணியினை செய்யும் பொழுது தூய்மையான மனதுடன் செய்து கொண்டு இறைவனை பிரார்த்தித்தால் நாங்கள் விரும்பும் பலனை பெறலாம். எங்கள் துயரங்கள், இன்னல்கள் எல்லாம் கடலின் அலைகள் போல இருக்கும். வந்து போகும். இறைவன் இடத்தில் வைக்கும் அன்பினாலும், நம்பிக்கையினாலும் எதையுமே சாதித்து விடலாம். வலி, துயரம், இழப்பு, இன்னல்கள் இவைகளால் கவலைப் படக் கூடாது. அவை வந்து செல்லும். எங்கள் கடமைகளை இன்முகத் துடனும், மகிழ்ச்சியுடனும் செய்தல் வேண்டும். முகமலச்சியே தேவையான ஒன்று ஆகும்.

நாமஸ்மரணையை சொன்னால் எங்கள் வாழ்வு புனித மடையும், பாவத்தில் இருந்து விடுபடலாம். பாபா சொல்கிறார் கவலைப்படக் கூடாது. எது நடக்குமோ அது நடந்துதான் தீரும் கவலைப்பட்டால் தினமும் கவலைப் பட்டுக் கொண்டே போகலாம் என்கிறார். அதனால் எது வந்தாலும் கவலைப்படக் கூடாது. சூரியனை வணங்குவது போல சந்திரனையும் வணங்க வேண்டும். சந்திரனை பார்த்து வணங்கினால் புத்தி கூர்மை அடையும்.

புத்தியை நல்ல இடத்தில் வைத்து இருப்பார் சந்திரன். பெற்றோர் களை சந்தோசமாக வைத்திருந்தால் பாபா தன்னை சந்தோசமாக வைத்து இருந்ததிற்கு சரி என்கிறார். ஒரு பக்தன் பாத நாமஸ் காரம் பாபாவிடம் செய்ய அவனது தீராத நோய் நீங்கியது. பாபாவை வணங்க தொடங்கியதன் பின் ஒரு பக்தனுக்கு நல்ல புத்தி வந்தது என்கிறார். எந்த பிரச்சினை வந்தாலும் அதில் நன்மை இருக்கு என்று சிவபாபா சொல்கிறார். சிவபாபா ஒருதர் தான் கெட்ட குணங்களை மனதில் வைப்பதில்லை. மற்றவரது பல வீனம் நம்மில் நுழைவது நல்லதல்ல. நம்பிக்கை தான் குரு. எதை நன்றாக நினைக்கிறோமோ அது நல்லதாகவே நடக்கும். மற்ற வரைப்பற்றி நினைப்பதால் எங்கள் கர்மா(பாவம்) கூடுகிறது. என்று சிவபாபா கூறுகிறார்.

குறை கூறும் குணம் இருந்தால் ஒருவனால் முன்னேற முடியாது. பெரியவர்களின் ஆசீர்வாதம் கலந்த பார்வை கூட பெரிய மந்திரம் ஆகும். பெரியவர்களிடம் ஒத்துழைப்பை பெறு வதும் ஒரு பெரிய கலை தான். அனைவரது துக்கத்தையும் தூர விலக செய்பவர் சிவபாபா ஒருவரே ஆவார். சிவபாபா சொல் கிறார் என்னை ஆத்மா என்று நினைத்து தன்னை நினைவு செய்யும் படி வேறு எந்த வித விரதமும் தேவை இல்லை என்று கூறுகிறார். இந்த ஆத்மாதான் நல்ல கர்மாவையும் தீய கர்மாவையும் செய்கிறது. அதற்கு ஏற்ற பலனையும் அடைகிறது. அதனால் நல்ல கர்மாக்களை அடைய வேண்டும். எங்கள் நேரத்தை பயன்படுத்த பாபாவை மட்டும் தான் நினைவு செய்யவும். பாபா எங்களுக்கு அன்பை தருவது போல நாங்களும் மற்றவருக்கு அன்பை கொடுக்க வேண்டும். பாபாவின் நினைவில் உள்ளவர்களுக்கு நோய் வராது. சந்தோசத்தில் இருப்பார்கள். சிவபாபாவை வணங்குபவர்களின் முக்ம் ஈஸ்வர்ய குணம் உடையவர்களாக வும், அந்த முகத்தின் மூலம் பாபாவின் கடமை ரூப பாவனைகள் வெளிப்பட வேண்டும். பாபா எப்படி குணம் உள்ளாரோ அதே போல எங்கள் குணமும் இருக்க வேண்டும்.

திருப்தியுடன் வாழ்வது யோகியின் அடையாளம் ஆகும். உணர்ச்சி வசப்படுவபர், கோபப்படுபவரை பாபா பேபி புத்தி உடையவர் என்கிறார். நாங்கள் இலேசாக இருப்பதையே சிவ பாபா விரும்புகிறார். பாபாவுடன் சாப்பிடுவேன், நினைப்பேன், பேசுவேன், என்று வாக்குறுதி கொடுத்தபடி நடக்க வேண்டும். ஆர்வம் பலமாக இருந்தால் என்ன செய்கினும் தடைகள் வராது. (உதாரணம்:- தியானம்) பயம், கோபம் மிகுந்த கஷ்டத்தை ஏற்படுத்தும். முறளியை கேட்டால் அமிர்தம் அருந்துவதற்கு சரி என்கிறார் பாபா எனது அனுபவமும் அப்படியே. இந்த முறளி யில் நமது துக்கத்தை விரட்டவும். மற்றவரின் துக்கத்தை விரட்டவும் சக்தி உள்ளது. துக்கத்தை நீக்கி சுகத்தை தரும் முறளி ஆத்மாக் களுக்கு உள்ளே எல்லா துக்கத்தையும் நீக்கி விடும். கடந்த விடயங்ளை நினைக்கக் கூடாது. கவலையற்று இரு என்ற பாபா கூறுகிறார். மற்றையவர்களுக்காக நன்மையை நினை எல்லா பிரச்சினையும் தீர்ந்து விடும்.

முறளியை தினமும் படிக்க வேண்டும். அல்லது கேட்க வேண்டும். அல்லது மற்றவைக்கு கூற வேண்டும். இதனால் ஆனந்தம் உள்ளது. நாங்கள் வேலை செய்து கொண்டுள்ளபோது, வெளியில் போகும் பொழுது சிவபாபாவை நினைப்பது பெரிய பலன் என்று சிவபாபா கூறுகிறார். தந்தையின் நினைவில் இருந் தால் எங்கள் சுவாசம் கூட நல்லதாக இருக்கும். முரட்டு சுபாவத்தை விட்டு இனிமையாக குழந்தையாக வர வேண்டும். இனிமையான சுபாவம் உள்ளவர்கட்கு தான் ஆன்மீகமும் கலந்து இருக்கும். பாபா சொல்கிறார் நாமஸ்மரணையை சொல்வது இடைவிடாது துன்பப்படுபவர்களுக்கு உதவி செய்வது இதில் இருந்து முந்திய பிறவியில் செய்த பாவங்கள் தீர்க்கப்படும் இது பாபா தரும் உத்தரவாதம் ஆகும். எங்கள் இதயத்தில் பாபா இருக்கிறார். எந்தநேரமும் எங்கள் மூச்சு அவரே ஆவார். நல்ல நம்பிக்கையுடன்

இருந்தால் பாபா எந்நேரமும் எங்களுடனே இருப்பார்.

**தபோவனம் புத்தகத்தில் இருந்து எழுதப்பட்டது.**

(ஓம்) சொல்லும் பொழுது தனிப்பட்ட ஆத்மாவை பரமாத் மாவுடன் இணைப்பதை குறிப்பதாகும். மிக சக்தி வாய்ந்த மந்திரம் ஆகும். ஓம் காரத்தை சொல்லி வந்தால் மனம் அடங்கி உயர்ந்த ஆனந்தம் கிடைக்கிறது. ஓம் காரத்தை சொன்னால் எங்கள் பாவங்கள் கூட குறையும். பிரசாந்தி நிலையத்தில் இப்பொழுது 21 முறை ஓம்காரம் சொல்லப்படுகிறது. இந்த வசனம் தபோவனத்தில் உள்ளது. பாபா நாங்கள் கேட்டதை எல்லாம் தருவார். மற்றவைக்கு நாங்கள் உதவி செய்வதை பாபா கூட விரும்புவார். பாபாவிடம் இரவில் தேவர்கள், தேவதைகள் கூட வந்து போகிறார்களாம். ஒரு முனிவர் சிவபெருமான், உமாதேவியாரின் நல்ல பக்தன். அவரிடம் வந்து யாகம் செய்யும் பொழுது சிவன், உமாதேவியார் கூறினார் களாம். தாங்கள் மனித வடிவில் உங்கள் கோத்திரத்தில் அவதரிப் போம் என்றார்கள். அவர் தான் சாயிபாபா.

1. சிவனாக
2. சிவன் + சக்தியாக
3. சக்தியாக வருவதாக கூறினாராம்.

சீரடிபாபா பிறந்தது செப்டெம்பர் 28 ஆம் திகதி 1835 ஆம் ஆண்டு ஆகும். 1916 இல் சீரடிபாபா இறந்தார். தசரா அன்று அக்டோபர் மாதம் இறந்தார். சீரடிபாபாவுக்கு சாந்தமும், இனிமையும் இருக்கும். வாழ்க்கையில் எந்தவிதமான துன்பங் களையும் எதிர் கொள்ளலாம். ஆனால் எந்தக் காரணம் கொண்டும் சுவாமியை விட்டு விடக் கூடாது. பாபாவின் அருள் இருந்தாலே புட்டபத்திக்கு பாபாவை எங்களால் காண முடியும். பாபா எல்லா இடத்திலும் இருக்கிறார். சத்தியபாமா கோயிலை ரத்னாகரம்

என்ற பெரியார் கனவில் கண்டு கட்டிய கோயில் ஆகும். பசுவின் பாலை முலையில் புட்டபத்தியில் பாம்பு ஒன்று குடித்ததை கண்ட இடையன் பாம்பை அடித்ததால் அது இறந்தது. அந்த இடத்தில் கோபாலசாமி கோயில் கட்டினார். அற்புதமான பாம்பு என்று நினைத்து கட்டினார்கள். ஈசுவரம்மா என்றால் கருத்து சிவபெருமானின் தாய் ஆகும். பாபா பிறந்தது 1926 நவம்பர் 23 ஆம் திகதி திங்கள் கிழமை திருவாதிரை நட்சத்திரத்தில் ஆகும்.

பாபா பிறந்ததும் பனை ஓலையால் படுக்க வைக்க அதன் கீழ் நாக பாம்பு இருந்தது. எல்லோரும் பயந்து பார்க்க உடனே பாம்பை காணவில்லை. இது முதல் அதிசயமாக நடந்தது. பாபாவை எங்கள் இதயத்தில் அமர்த்தி இருந்தால் மனம் அமைதி அடையும். உண்மையான அன்புடன் பாபாவை நினைத்தால் அவர் எங்களுடனே வந்து இருப்பார். உனது மகிழ்ச்சியே எனது உணவு என்று பாபா அடிக்கடி சொல்வார். பாபா புத்தர், யேசு, அவர்களின் குணங்களை உருவெடுத்து வந்தவர் ஆவார். வாயால் சொல்பவை எல்லாம் அப்படியே செய்கிறமா? ஆனால் வாயால் சொன்னபடி நடக்க செய்கிறார் பாபா. பாபா சின்ன வயதில் பெரிய ஒரு நாடகத்தை ஆடி அதிசயக்க வைத்தார். அவருக்கு பாடல் நாடகம் என்றால் நல்ல விருப்பம் ஆகும். தான் தான் சாயி பாபா என்று 1940 ஆம் வருடம் மே மாதம் 23 ஆம் திகதி சொன்னார்.

தந்தை இவரின் மாயவித்தைக்கு அடிக்க போனார். 1940 ஆம் வருடம் பாபா வீட்டை விட்டு விலகி விட்டார். முதல் பாடிய பாட்டு “மானசு பயரே குரு சரணம்” என்ற பாடல் ஆகும். பாபாவின் முகம் சிலநேரம் செம்பு முகமாக நிறம் இருக்கும். சில நேரம் தங்க நிறமாக இருக்கும். சிலநேரம் பிறவுண் நிறமாக இருக்கும்.

பாபாவின் பாதம் பெண்களின் பாதம் போல மென்மையாக இருக்கும். பாபாவை நாங்கள் நேரில் பார்த்தால் உயர்ந்த ஆனந்தம் அடைய முடியும் அதாவது வாயால் சொல்ல முடியாத சந்தோஷம் தேக உணர்ச்சியே மாறி விடும். (அதுவும் கிட்ட நான் பார்க்க அப்படி இருந்தது அனுபவம்.) பாபாவின் அவதாரத்தின் முக்கிய நோக்கம் அதில் ஒன்று பழைய கோயில்களை புனர்ஸ் தாபனம் செய்வது ஆகும். அதில் ஒன்று இமயமலையில் உள்ள நாராயணனை பார்க்க தாயுடன் குடும்பமாக சென்றார். அங்கே நேத்திரலிங்கம் என்ற சிவனை பிரதிஸ்டை செய்து வைத்தார். காசிக்கும் சென்று அங்கே சிவலிங்கத்துக்கு விபூதி குறி வைத்து, பொட்டு வைத்து வைரத்தால் நகை போட்டார். இறைவன் நல்ல அழகாக இருந்தாராம்.

யாகம் என்றால் தியாகம். தியாகம் என்றால் சுயநலம் அற்றது. என்று பொருள். யாகம் நடந்து அதனுடைய பிரசாதம் சாப்பிட்டால் திருப்தியுடனும், சந்தோஷத்துடனும் வாழலாம். என்று பாபா சொல்கிறார். இறந்தபின் இறைவனிடம் ஐக்கிய மாகிடுவோம். இதில் சந்தேகம் இல்லை என்கிறார் பாபா. யாகம் நடந்தால் அதை பார்ப்பது நல்லது. பாபா சொல்கிறார் காமம் அதிகமாக இருந்தால் இறைவனை நோக்கி இருந்தால் இறைவன் சிந்தனையுடன் போய் விடும் என்கிறார். கோபம் வரும்பொழுது இறைவனை நோக்கி செல்லுங்கள் நற்குணங்களாக மாறிவிடும். அமிர்தானந்தா என்ற யோகிக்கு பாபா அவர் 7 வயதில் மந்திரம் சொல்லி யாகம் நிறைய செய்தார். அவருக்கு தன்னை தங்கநிற பிள்ளையாராக மாற்றிக் காட்டினார்.

கனவில் ஒரு பக்தனுக்கு பாம்பு ஆக வந்து பின் முருகன் ஆக வந்து அவனது புற்று நோயை நீக்கினார். எங்கள் துணை வருக்கு காட் ஆப்பிரேசன் முதல் நாள் இரவு ஆஸ்வத்திரியில் (பாம்பாக வந்து 3 இடத்தில் நெஞ்சில் இரத்தம் குடித்து

கடந்து போக கனவு கண்டார். பாபா வந்து செய்து விட்டு போய் இருக்கிறார்). துணைவர் சுகமாக ஆப்பிரேசன் முடித்து வந்தார். எனக்கும் முதல் நாளே பாபாவை நிலையத்தில் படத்தில் கண்டதும் அன்று இரவு கனவு கண்டோன். பயப்படாமல் தன்னை வைத்து கும்பிட சொல்லி அடுத்த நாளில் இருந்து கும்பிடுகிறேன். பாபா சிவராத்திரி அன்று சீரடி பாபாவின் சிலைக்கு பிரசாந்தி நிலையத்தில் விபூதியை எடுத்து அபிஷே கம் செய்வார். சிவராத்திரி அன்று 1974 ஆம் வருடம் பெப்ரவரி மாதம் லிங்கத்தை முதன்முதலாக வாயால் எடுத்தார்.

பாபாவின் தாய் ஈஸ்வரம்மா நல்ல காய்ச்சலாக இருக்கும் போது பாபா ராமனாக போய் காட்சி கொடுத்து விபூதி பிரசாதம் கொடுத்தார். அதனால் அவர் சுகம் ஆனார். பின் 2 நாட்கள் கழித்து திடீரென சுவாமி, சுவாமி என்று கூப்பிட்டபடியே அவர் உயிர் போனது. (1972 ஆம் ஆண்டு மே மாதம் 6ம் திகதி) பாபா மனிதர் போல எல்லாம் செய்கிறார் என்று கடவுள் இல்லை என்று ஐமிச்சம் பட வேண்டாம் என்கிறார். அவர் திடீரென அவரின் சக்தியைக் காட்டுவார் என்கிறார். கருடன் என்ற பறவை உத்தம ஜீவன்களை பிரம்ம லோகத்துக்கு சுமந்து செல்லும் என்று புராண கதைகளில் உள்ளது. இறைவன் எங்கள் இடத்தில் தான் இருக்கி றாராம். வேறு இடத்தில் இல்லை என்கிறார். பாபா நாங்கள் விரும்புவதை முதலே தருபவராம். எங்களுக்கு என்ன அவசரத் திலும், எந்த துன்ப நேரத்திலும் சுவாமி என்று கூப்பிட்டால் சுவாமி வந்து நிவாரணம் தருவார். தியானத்திலும் விட எங்களுக்கு விருப்பமான இஸ்டதெய்வத்தின் பெயரை சொல்வது நல்லது. இடைவிடாது அந்த பெயரை சொல்லிக் கொண்டு வந்தால் மனம் அமைதி அடைந்து நிம்மதியாக வாழலாம்.

**ஆன்மீகத்தின் அவசிய அம்சங்கள்**

1. கடவுளுக்காக மன வேதனைப்படுதல்.
2. கடவுளுக்காக தீவிர வேட்கை கொள்ளுதல்.

3. கடவுளை தேடும் முயற்சியில் கஸ்டங்களும், மனதுன்பங் களும் அனுபவித்தல் ஆகும்.

பாபா நல்ல பொறுமையானவர். அவரின் உயர்ந்த பண்பு அதுவாகும். பாபாவை யார் குறை சொன்னாலும் அதற்கு அவர் செய்வது புன்னகை தான். அதே மாதிரி நாங்களும் இருக்க வேண்டும். பாபா அன்பான இதயம் கொண்டவர். கோபமே வராதாம். பாபாவின் வைத்தியசாலையில் இலவசமாக மருத்துவ சேவை செய்யப்படுகிறது. பாபாவே தெரியாமல் வைத்தியராக வந்து சத்திரசிகிச்சை செய்வாராம் என்று கூறப்படுகிறது. எந்த வருத்த நேரமும் பாபாவின் விபூதியை பூசினால் வருத்தம் குணம் அடையும் என பாபா சொன்னார் பழைய தீய கர்மாக் களை தன்னால் தீர்க்க இயலாது என்றார். பாபா சொல்கிறார் ஒரு வசதி உள்ளவர் மனம் அமைதியில்லாமல் இருந்த வரிடம் நான் எல்லாம் தந்து இருக்கிறேன். ஆனால் நீர் எனக்கு ஒன்றும் உதவி செய்யவில்லையே என்று சொன்னார். அதற்கு அவர் என்ன உதவி என்றார். பாபா நீ எப்பொழுதும் மகிழ்ச்சியாக இரு என்று சொன்னார்.

சட்டைப்பையில் இருக்கும் பாபாவின் படத்தை கஸ்டம் வருகின்ற நேரம் எடுத்து வணங்கி விட்டு வைத்தால் அந்த கஸ்டம் நீங்கும். எந்த வருத்தம் வந்தாலும் பாபாவின் விபூதியைப் பூசவும் உடன் வருத்தம் சுகம் ஆகும். இறைவன் சிந்தனையுடன் இருந்தால் கெட்ட நினைவுகள் போய் விடும் என்கிறார் பாபா. பாபாவை வணங்கும் போதும் பஜனை நடக்கும் போதும் மனதை அலைய விடாமல் பாதுகாக்க வேண்டும் என பாபா சொல்கிறார். அப் போதுதான் பலன் கிடைக்கும். இறைவன் நாமம் தொடர்ந்து சொன்னால் எங்கள் மனம் அலைபாயாது. நாங்கள் இப் பொழுது நன்றாக இருப்பதற்கும் கஸ்டப்படுவதற்கும் காரணம் நாங்கள் முற்பிறவியில் செய்த வினையின் பலனை இப்பிறவியில்

அனுபவிக்கிறோம். அதனால் இப்பிறவியில் நன்மையை செய்தால் இப்பிறவியில் கொஞ்சம் கஸ்டத்தை குறைக்க வல்லமையுள்ளது என்கிறார் பாபா. ஆனால் இதற்குத் தான் காரணம் இல்லை அதனால் எங்கள் (கைவிலங்கை) நாங்கள் தான் உருவாக்கு கின்றோமாம்.

எங்களுக்கு வரும் கஸ்டம் எல்லாம் பாவங்களின் தண்டனை ஆகும். பிச்சைக்காரர் சாப்பாட்டுக்கு கஸ்டப்படுவது அவை முற் பிறவியில் சாப்பாட்டை வீசியதால் இப்பிறவியில் சாப்பாட்டுக்கு கஸ்டப்படுகிறார்கள் என்றார். பாபா 1000 தாய்க்கு சமம் ஆகும். பாபாவில் நேர்மையான நம்பிக்கை வைத்தால் தான் அவர் எங்களைக் காப்பாற்றி முழு நம்பிக்கையை தருவார். ஒரு பக்தன் 8 வருடமாக பாபாவிடம் இருந்து சந்தோஷமாக கால் நடக்க இயலாமல் நாமஸ் மனனம் சொன்னதால் பாபா காலை மாற்றி விட்டார். (8 வருடமாக நாமஸ் மனனம் சொன்ன பலனே ஆகும்.) கடவுளின் நாமத்தை நாம் சொல்வதின் மூலம் எத்தனை பெருங் காரியங்களை செய்து முடிக்கலாம். ஆன்மீக சாதனையில் உயர்ந்தது நாமஸ்மனனம். அன்புடன், பக்தியுடன், நாமஸ் மனனம் சொல்ல வேண்டும். அதோடு அவர் உருவத்தையும் நினைவு கொள்ள வேண்டும். குசேலர் கிருஷ்ண பிரானின் அருளைப் பெற்றது நாமஸ் மனனம் சொல்லியே ஆகும்.

எங்களை சித்திரவதை செய்கிற மனதை நாமஸ் மனனத் தால் மாற்றலாம். அது ஒரு மருந்து, ஆன்மீக மருந்து, தெய்வீக மருந்து, எப்பொழுதும் எங்களுடன் தங்கி இருந்து அமைதி யும், திருப்தியும் தரவல்லது. எந்த பெயராலும் சரி 5 நிமிஷம் செலவிடு. மாபெரும் பலனை நமக்கு தரும். பாபாவை நோக்கி ஒரு அடி போனால் அவர் நூறு அடி எங்களிடம் வருவார். நாம் நல்லது செய்ய நினைத்தால் பாபா எங்களுக்கு முன்னாலே எப்பொழுதும் இருப்பார். கடவுளை நினைத்தால் மட்டும்

போதாது. உடல், பொருள், ஆவி அனைத்தாலும் உதவி செய்ய வேண்டும். ராம நாமத்தை சொல்லியே அனுமான் இப்படியான ஒரு பேறு பெற்றார். நீ மற்றவைக்கு செய்யும் சேவை ஆனது நீ உனக்கு செய்யும் சேவை ஆகும். அவரிடம் உள்ள கடவுள் எங்க ளிடம் வருகிறார். சேவை விண் உலகத்துக்கு எங்களை இட்டுச் செல்லும். சேவையிலும் மனம் உவந்து செய்யும் சேவைக்குத்தான் பாபா மதிப்பு தருகிறார்.

எல்லாவற்றையும் விட சேவைதான் மிக உன்னதமான இடத்தை வகிக்கிறது. உண்மையான தன்னலமற்ற சேவையாக இருக்க வேண்டும். அதுதான் பாபா மக்களுக்கு காட்ட School, Hospital, கட்டினார். மக்களும் அப்படி சேவை செய்ய பழகு வதற்காகவாகும். என்னை மகிழ்விக்க மற்றவைக்கு செய்யும் சேவையை தனக்கு செய்வது போல நினைத்து செய்ய சொல்கிறார். அப்பொழுது பாபாவிடம் நாங்கள் போய் சேருவோம் என்கிறார். வாழ்க்கை முழுக்க ஆன்மீகத்தை பராமரித்து வரச் சொல்கிறார். கடவுளிடம் கொண்ட பக்தியை மறக்காமல் இருக்க வேண்டும். வெங்காயம் எப்பவும் மணம் மாறாமல் இருப்பது போல வாகும். வெங்காயத்தை வெட்டினால் கண்ணீர் வருவது போல நல்ல இறை பக்தி உள்ளவனை துன்புறுத்தினால் துன்புறுத்து பவர்கள் கண்ணீர் விடுவார்கள். கஸ்டம் கடவுள் அருகில் எங்களை கொண்டு வருமாம்.

குந்திதேவி கிருஸ்ணரிடம் கேட்டது கஸ்ரநேரத்தில் தான் உங்களை வணங்கினேன். அதனால் தனக்கு அடிக்கடி கஸ்ரம் தரச்சொல்லி கேட்டாள். பாபாவுக்கு கஸ்ரமும், சுகமும், ஒன்றாகவே தெரியும் என்கிறார். கடவுளிடம் நம்பிக்கை வைத்தால் அவர் கைவிட மாட்டார். எங்களுக்கு கவலை வரும் நேரம் பாபாவின் இனிய சொற்களையும், செயலையும் நினைத் தால் சந்தோசம் வரும். துக்கம் மனதுக்குள் மாறி விடும். பாபா

சொல்கிறார் நாங்கள் கேட்பதை முதலில் தருவாராம். பிறகு தான் என்ன தர வருகிறாரோ அதையே நாங்கள் பேட்போம் என்கிறார். காலையும், மாலையும் இறைவனை இடைவிடாது வேண்டி னால் வாழ்க்கையில் எது நல்லதோ அனைத்தையும் பெறுவார்கள் பக்தர்கள்.

## முடிவுற்றது சனாதனா சராதி

நமக்கு என்ன துன்பம் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியுடன் ஏற்க பழக வேண்டும். இறைவன் தான் ஆத்மா. நான் தான் கடவுள் என்று பாபா சொல்கிறார். எங்கள் மனம் நிலையற்றது தன் இச்சை படி ஓடி திரியும். எங்கள் உடல் நீர் குமிழி போன்றது. மனம் பைத்தியம் பிடித்த குரங்குக்கு சரி. எப்பவும் அன்பாக இருக்கவும். இறைவனது உண்மையான பெயர் அன்பு ஆகும். மற்ற பெயர்கள் எல்லாம் நாங்கள் வைத்த பெயர்கள் ஆகும். எவரையும் வெறுக்கக் கூடாது. எவருக்கும் உதவுங்கள். மற்றவரை ஒருபோதும் நோகடிக்காதீர்கள். இதையே பாபா விரும்புகிறார். கடவுள் என்னை சுற்றி எங்கும் இருக்கிறார் என்று நினைக்க வேண்டும். அப்போது தான் ஆனந்தமாக இருக்கும்.

எங்கு ஒற்றுமை இருக்குமோ அங்கே தூய்மை இருக்கும். என்ன வேலை செய்தாலும் இறைவனை நினைத்து இறைவன் நாமத்தை சொல்ல வேண்டும். எந்த நேரமும் பஜனை செய்வது நல்லது. எங்கள் உணர்வுகள் போலவே எங்கள் விளைவு களும் இருக்கும். எதிரியை கண்டாலும் வணக்கம் என்று சொல்ல வேண்டும். எப்பொழுதும் மனதில் உற்சாகத்துடனும் முகத்தில் புன்சிரிப்பு உடனும் வாழ வேண்டும். வேப்பெண்ணெய் முகத்துடன் வாழ கூடாது. பாபாவின் அன்பு அருள் எங்களுக்கு உள்ளது. அப்பொழுது எங்களுக்கு ஒரு குறையும் இல்லை. சுவாமி எங்களுடனும் எங்களுக்குள்ளும் தான் இருக்கிறார். எங்கள்

உணவும், எங்கள் நண்பர்களும் எப்படியோ அப்படியே எங்கள் குணமும் இருக்கும்.

எங்கள் மனம் சாதாரண மனம் இல்லை. பைத்தியம் பிடித்த குரங்கு போலவாம். மனித குலத்தின் ஒரு அங்கம் மனம். அதனால் மனதை கனிவுடன் வைத்திருக்க வேண்டும். மற்றவை தெரியாமல் நமக்கு பிழை விடலாம். நாங்கள் தெரிந்து கொண்டு பிழை விடக் கூடாது. நல்லது கெட்டது எல்லாம் சமமாக எடுக்க வேண்டும். அதே போல மக்கள் அனைவரையும் சமமாக மதிக்க வேண்டும். இரண்டுபேர் கோபமாக இருந்து யார் முதல் கதைக் கிறார்களோ அவர்களுக்கு புண்ணியம் கிடைக்கும். பாபா நம்பிக் கையானவருக்கு தங்கம் நம்பிக்கை இல்லாதவருக்கு தூசியும் ஆவார். நாங்கள் பாபாவிடம் பக்தி ஞானத்தை தரும்படி கேட்க வேண்டும். மற்ற எதுவும் கேட்க கூடாது. தாயை பழிப்பது மகா பாவம் என்று சிறீராமர் சொன்னார். யார் என்ன பிழை விட்டாலும் முடிந்த காரியம் என்று மன்னிக்கின்ற சுபாபம் உள்ளவர் சுவாமி. பாபா சொல்கிறார் உயிர் உள்ள உயிரற்ற பொருள்களில் தான் இருப்பதாக கூறுகிறார்.

சாயி ராமனாக வந்து பிரசாந்தி நிலையத்தில் சாயிபாபா என அவதரித்துள்ளார். சிறிராமன் தான் சாயிராமனாக வந்தது. சிறிராமர் தாயை பழிப்பது மகாபாவம் என்று அறிவுரை அளித்–தார்.

**சிறிராமர்.**

1. புன்னகையுடன் பேசுபவர் ஆவார்.
2. சிங்கத்தின் பலம் உள்ளவர்.
3. சந்திரனை போல முகம் கொண்டவர்.
4. மதம் கொண்ட யானையை கூட அடக்க வல்லவர்.
5. சகல கல்யாண குணம் கொண்டவர்.

கவலை என்பதே என்ன என்பது தெரியாதவர் பாபா. எப்பொழுதும் சந்தோசமாக இருப்பார். பாபா மாணவர்களை திருத்த கோபத்தை வர அழைக்கிறதாம். கோபம் வருவதில்லையாம். வந்த கோபமும் அன்பால் கரைந்து விடும். பொறாமை கொள்வது கான்சரை விட பெரியதாகும் என பாபா கூறுகிறார்.

1. கோப தாபங்களை சாயிசமித்திக்கு கொண்டு வரக் கூடாது.
2. மற்றவையை கண்டு பொறாமை கொள்ளும் புத்தியை கொண்டு இருக்க கூடாது.
3. ஏழை, பணக்காரர் என்று வித்தியாசம் காட்டக் கூடாது.
4. மாயையை மறக்க வேண்டும்.

நாங்கள் ஆனந்தத்தில் இருக்கும் நாளே பாபாவின் பிறந்த நாள் என்று கூறுகிறார். எங்கள் தாய்–தந்தையை கடவுளாக எண்ணி போற்றி வழிபட வேண்டும். ஒரு தேசத்தின் அமிர்தம் என்பது ஒருவர் தாயின் மேல் வைக்கும் அன்பே ஆகும். இறைவனை மறந்து இருப்பது எங்கள் பாவச்செயல் ஆகும். எங்கள் கஷ்டங்களுக்கு காரணம் இறைவனை மறந்து இருப்பதே ஆகும். நல்லதாக பார்க்கும் எண்ண போக்குகளை நாங்கள் பார்க்க வேண்டும். அப்படியானால் துயரங்களை அனுபவிக்க மாட்டோம். துயரத்துக்கு இடம் கொடுக்க கூடாது. இறைவன் மீது நம்பிக்கை வைத்து துயரத்தை அகற்ற வேண்டும். நான் இறைவனின் அங்கம் கவலைப்படக் கூடாது என்று நினைக்க வேண்டும். சந்தோசமோ துக்கமோ அதற்கு இடம் கொடுக்க கூடாது. அது நிரந்தரம் இல்லாதது.

எந்த கஸ்ட நேரமும் இறைவன் பார்த்துக் கொள்வார் என்று விட்டுவிட வேண்டும். தன்னம்பிக்கையுடனும், தைரியத் துடனும் இருக்க வேண்டும். எல்லாம் விரும்பியபடி நல்லதாகவே நடக்கும். எங்களுடைய அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து

கொள்ள வேண்டும். அப்பொழுது தான் எங்கள் அறிவு விரிவடையும். எங்கள் புலன்களை கட்டுப்பாட்டில் வைத்து இருந்தால் புலன்கள் வலிமை அடையும். தாயை மகிழ்ச்சியாக வைத்திருந்தால் தான் எங்கள் வாழ்க்கையும் மகிழ்ச்சி பெறும். தாய் கண்ணீர் விட்டால் எங்கள் வாழ்க்கையும் துன்பப்படும். எந்த பதவியில் இருந்தாலும் தாய்க்கு சேவை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அமைதியாக, ஆனந்தமான வாழ்க்கை வாழ்ந்திட வேண்டும். தெய்வ நாமம் நிலையானது. அதனை மறக்காமல் சொல்ல வேண்டும்.

பாபாவின் உபதேசங்களை உண்மையாக அதை பற்றிக் கொண்டால் எங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் வரும். ஒரு மனிதனின் உண்மையான பெயர் ஆத்மா. அவன் பிறக்கும் பொழுதே வரும் பெயர் அது ஆகும். ஆத்மா என்பது இறைவன் ஆகும். இறைவனுக்கு இறப்பும் இல்லை. பிறப்பும் இல்லை. அது போல தான் எங்கள் ஆத்மாவும் அதனால் தான் இறைவன் தான் ஆத்மா. யாரை வேண்டுமானாலும் மறக்கலாம். ஆனால் இறைவனை மறக்கக் கூடாது. இறைவனை மறந்தால் எல்லோரையும் மறந்ததிற்கு சமம். தன்னம்பிக்கையே வாழ்க்கையின் அடித்தளம் ஆகும். எங்களைச் சுற்றி கடவுள் எங்கும் இருக்கிறார். மனவலிமையை விட சிறந்த வலிமை வேறு ஒன்றும் இல்லை என பாபா கூறுகிறார். அத்தோடு இறை நம்பிக்கையும் இருந்தால் எல்லாம் எங்களுக்கு கிடைக்கும்.

எங்களுக்கு எதிலும் நம்பிக்கை இருந்தால்

1. குருடனும் பார்க்க முடியும்.
2. ஊமையும் பேச முடியும்.
3. செவிடனும் கேட்க முடியும். அதனால் சந்தேகத்துக்கு இடம் அளிக்கக் கூடாது.

ஒவ்வொன்றும் இறைவனது தீர்மானத்தின் மூலம் நடக்கிறது. இறைவன் தீர்மானம் மீது நம்பிக்கை வைத்தால் பாதுகாக்கப்படும். இறைவன் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் வாழ்வு சீர் அழிந்து விடுகிறது. எவ் இடத்திலும் நம்பிக்கை அத்தியாவசியம் ஆகின்றது. மனிதன் நம்பிக்கையினாலும், அன்பினாலும் எதையும் சாதித்து விடலாம். இது இரண்டாலும் முடியாதது ஒன்றுமே இல்லை என்கிறார் பாபா.

எங்களது உடலை கூட நம்பிக்கை இருந்தால் மாற்றிட முடியும். பாபா சொல்கிறார் நாங்கள் தனக்குள் இருக்கிறோம். எல்லாம் இருந்தும் ஆன்மீகம் இல்லையேல் அது பூச்சியம் ஆகும். நான் ஆடை என்று உடலை அணிந்து கொண்டு இருக்கிறேன். என்னுடன் இறைவன் இருக்கிறார். அவர் தான் எல்லாவற்றையும் செய்கிறார். நாமஸ் மனனம் இலகுவானது. தொடர்ந்து செய்து வர வேண்டும். இதை விட இலகுவானது வேறு ஒன்றும் இல்லை. பாபா என்னோடு இருக்கிறார் என்று நினைக்க வேண்டும். நாங்கள் நன்றாக இருக்கிறோம் என்று அகங்காரம் கொண்டால் வீழ்ச்சி அடைந்து விடுவார்கள். எங்கள் எல்லோரையும் இறைவன் ஒருவரே கவனித்துக் கொண்டு இருக்கிறார். அப்படியான இறைவனை ஒருநாளும் மறக்க கூடாது. இறைவன் ஒருவரே எங்களை திருத்தி நன்றாக வைத்திருப்பவர் ஆவார்.

பிரசாதத்தை விரும்பி ஏற்பது போல, கடவுள் எங்களுக்கு என்ன தந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும். திருவாசகத்தை வாசித்தால் சிவம் ஆகி விடுவோம். துறவிமார் நெருப்பை தொடுவது இல்லை. நிரந்தர இன்பம், நிரந்தர துன்பம் என்ற ஒன்று எங்குமே கிடைக்காது. அது வெறும் குழந்தையின் கனவு மட்டுமே. உலகில் வாழும் அனைவருக்கும் வாழ்க்கை இடைவிடாத போர் ஆகும். நாங்கள் உண்ணும் உணவும் தான் நல்ல மனதை உண்டாக்கு கிறது. எண்ணம் தூய்மையுடன், தர்மம் செய்தால் எல்லா வீடும் நல்லது. வீட்டை குறை சொல்லக் கூடாது. கடவுளுக்கு பூ

முக்கியம் இல்லை. அவனின் (பக்தனின்) இதய பூ தான் முக்கியம் ஆகும். அடக்கமின்றி அகங்காரமாக நாங்கள் பேசினால் எங்கள் புண்ணிய பலன் எல்லாம் உப்பு தண்ணீரில் கரைவது போல கரைந்து விடும்.

கடவுளின் காரியங்களை நான் செய்கிறேன். என்பதை அறிந்து கொள்வது கர்ம யோகம். கொடை பெரியதல்ல. எதற்கு, எப்படி, எந்த மனோநிலையில் கொடுக்கப்பட்டது என்பது தான் முக்கியம் ஆகும். ஒருவரை நல்லவர் ஆக நினைத்தால் அவர் நல்லவர் தான். கெட்டவராக நினைத்தால் அவர் கெட்டவராம். இப்படி நினைப்பதற்கு காரணம் எங்கள் உணர்ச்சியாகும். நாம் நினைப்பதெல்லாம் கிடைக்க வேண்டும் என்று நினைப்பது தவறாகும். அப்படி நடந்து விட்டால் மனித பிரயத்தனத்துக்கு இடமே இல்லை. கர்மவிதியை மாற்ற இயலாது. ஒருவர் செய்யும் நல்லதாகட்டும், தீயதாகட்டும் அதன் பலனை அவன் தப்பாமல் அனுபவித்தே தீர வேண்டும். அர்ப்பணிப்பு எப்போதும் முழு மையாக இருக்க வேண்டும். அரை குறையாக இருந்தால் துன்பம் தான் மிஞ்சும்.

பாபா சொல்கிறார் நல்லவர்களுடனே சேர வேண்டும். தீயவர்களுடன் சேர்ந்தால் நல்லவர்களையும் தீயவர்களாக ஆக்கிவிடும். சுயநலவாதியிடம் இருந்தும் விலகி இருக்க வேண்டும். பணிவுடன் அனுபவம் மிக்கவர்கள் சொல்வதை கேட்டு நடை முறையில் கொண்டு வர வேண்டும். (Negative) மனப்பாங்கு இருக்கக்கூடாது. தடைகள் வரும் போகும் அவ்வளவு தான். இந்த மனப்பாங்கு இருந்தால் சாபம் போல எங்களை வாழ்க்கை முழுக்க முடக்கி விடும். மனதில் (Negative) மனப்பாங்கு போக (Positive) மனப்பாங்கு இருக்க வேண்டும். மனதில் அன்பை வளர்க்க வேண்டும். அப்பொழுது (Negative) மனப்பாங்கு போய் விடும். பாபா சொல்கிறார் நமது பேச்சில், நமது செயலில், நமது நடத்தையில், இதயத்தையும் கவனமாக கவனித்து இதில் உள்ள (Negative) மனப்பாங்கை வெளியேற்றினால் தான்

(Positive) மனப்பாங்கு வந்து வாழ்க்கையில் சந்தோஷம், முன்னேற்றம், நம்பிக்கையுடன் வாழ்க்கையை ஆனந்தத்துடன் கழிக்கலாம்.

சேவை செய்வது முதல் தாய், தந்தையருக்கு ஆகும். பிறகு தான் சமூகத்துக்கு செய்ய சொல்கிறார். பாபா சொல்கிறார் ஆசைகளை கட்டுப்படுத்த என்ன செய்ய வேண்டுமென்று கூறு கிறார். காலம், நேரம், உணவு, பணம் எங்கள் சக்தி இந்த நான்கை யும் வீண் அடிப்பது மகா பாவம் என்கிறார். வீண் வார்த்தைகள் பேசி காலத்தை வீண் ஆக்கக்கூடாது. நல்ல உணவை அளவுடன் சாப்பிட்டால் சாப்பிட வரும் பொழுது உடம்பு எப்படி வயிறு இருக்கிறதோ அதே போல எழும்பும் பொழுது வயிறு இலேசாக இருக்க வேண்டும். எங்களுக்கு உணவு மட்டும் தான் ஆகாரம் என்று நினைக்கக் கூடாது. நாங்கள் காணும் காட்சிகள், செய்கின்ற சிந்தனைகள் எல்லாமே எங்களுக்கு ஆகாரம் தான் அதை தூய்மை ஆக எடுத்து வாழ்க்கையில் நன்றாக நடத்த வேண்டும்.

நல்ல முறையில் செலவு செய்யாத பணம் வைத்தியர் வீட்டுக்குத் தான் போய் முடியும். அல்லது அரசாங்க வரியாக போய் முடியும். அல்லது திருடர்கள் கையில் போய் முடியும். சின்ன வயதில் நற் குணங்களை பழகா விட்டால் பெரியவர்கள் ஆனதும் பழக முடியாது. எப்போதும் உதவி செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு தீங்கிழைக்கக் கூடாது. பாபா சொல்கிறார் எல்லோருக்கும் ஆன்மீக மாற்றம் தேவை என்கிறார். நாங்கள் ஆனந்தமாக இருக்கும் நாளே பாபாவின் பிறந்தநாள் ஆகும்.

## சத்தியம், சிவம், சுந்தரம் பாகம்:-01

சத்தியம், சிவம், சுந்தரம் புத்தகத்தில் உள்ளது பாபா பளிங்கு போல தூய்மையானவர். பாம்புக்கு எறிந்த கல் இருந்த இடம்தான் கோபால சுவாமி கோயில் ஆகும். பாம்பு பசுவின் பாலை குடித்ததால் இடையன் கோபப்பட்டு பாம்புக்கு கல் எறிந்தான். பாம்பு சாபம் போட்டு புட்டபர்த்தியில் பாம்பு புற்றுக்கள் கூட வந்தது. பசுக்கள் குறைய தொடங்கின. எறிந்த கல்லில் பசு வில் இருக்கும் கண்ணனின் உருவத்தை பாபா எடுத்துக் காட்டினார். பாபாவின் பரம்பரையே இறைபக்தி உள்ளவர்கள். அதனால் சத்திய நாராயணனை வேண்டியே ஆண் குழந்தை வேண்டும் என்று பாபா பிறந்தார். குடும்பத்தில் 04 பிள்ளைகள். 01 அண்ணன், 02 அக்கா மற்றது இவர் (பாபா) ஆவார். பாபா தாயின் வயிற்றில் இருக்கும் பொழுது சுவரில் தம்புரா, கீழே இருந்த மத்தளம் தன் பாட்டில் பகல் முழுக்க நல்ல ராகத்துடன் வாசிக்க படுமாம் என கூறப்படுகிறது. பாபா பிறந்து படுக்க போட்ட சீலையின் கீழ் நாகபாம்பு படுத்து இருந்தது.

பாபா 05 வயதிலே அவரின் சிநேகிதர்களுக்கு குருவாக இருந்தார். அப்படியான குணம் ஆக அவர் இருந்ததால் குருவானார். பாபா சிறுவயதில் செய்யும் அதிசயங்களை கண்டு மற்றப்பிள்ளைகள் கேட்க, “அது கிராமதேவதை நான் விரும்பி கேட்பதை தருகிறது” என்று சொல்வாராம். பாபாவை வகுப்பில் ஆசிரியர் கோபம் கொண்டு கதிரையின் மேல் ஏற்றி விட்டார். பின் ஆசிரியர்கள் இருந்த கதிரை ஆசிரியர்களிடம் ஒட்டிக் கொண்டது. பின் பாபாவை இறக்கி விட்டதும் தான் ஆசிரியரின் கதிரை விடுபட்டது. பாபா கோபத்துடன் செய்யவில்லையாம். தனது ஆற்றலை உலகத்துக்கு வெளிக் காட்ட செய்தது என்றார்.

பாபா 10 வயது இருக்கும் பொழுது அந்த CH பிள்ளைகள்

எல்லோரும் சேர்ந்து பஜனை வைப்பார்கள். பாபாவே குருவாக இருந்தார். பாபா அதில் நரசிம்மர் என்பவர் பாட்டுப்பாட ஆடினார். உண்மையான சிங்கத் தோற்றத்துடன் ஆடினார். பின் அதில் இருந்து பாபாவை எடுக்க பூசை, ஆரத்தி, நைவேத்தியம் என்று எல்லாம் செய்து தான் அவர் வழமைக்கு வந்தார். இதுவும் ஒரு அவதாரமாக தோன்றினார். மக்களின் மகிழ்ச்சியே பாபாவின் ஆகாரம் ஆகும் என்று பாபா கூறுகிறார். பிறருக்காக உழைப்பது (கஷ்டப்படுவது) என்றால் தனக்கு செய்யும் சேவை என்று பாபா சொல்கிறார். கடவுளை நினைத்துக் கொண்டு மனிதர்க்கு உதவி செய்வது அது தான் உண்மையான ஆன்மீகம். ஞானம் என்றால் புத்தகத்தில் வாசித்து முறளி கேட்டு அறிவை பெறுவது. யோகம் என்றால் தியானம் இருப்பது ஆண்டவனுடம் தொடர்பு கொள்வது, சிறிமத் என்றால் சிவபாபா சொற்படி கேட்டு நடப்பது ஆகும்.

நேர்மையான செயல்களில் முக்கியமானது. தேவையான நேரத்தில் மற்றையவர்களுக்கு உதவி செய்வது ஆகும். கொடிய செயல் மற்றவைக்கு தீங்கு இழைப்பது ஆகும். பாபாவின் குறும்பு வேலைகள், அதிசய வேலைகளுக்கு தகப்பன் தடியால் அடிக்க அப்பொழுதுதான் 14 வயதில் தான் சாயிபாபா என்று சொன்னார். பாபா எங்கள் மனதையும், எங்கள் வீட்டையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார். இறைவனின் பாதங்களை நாங்கள் நினைத்தால் (தியானம்) செய்தால் பிறவிப் பெருங் கடலை தாண்ட முடியும். பாபா 16 ஆண்டுகள் தனது லீலைகளிலும் பிறகு 16 ஆண்டுகள் தனது மகிமைகளிலும் பிறகு மிகுதி ஆண்டுகள் தனது உபதேசத்திலும் கழியும் என்று பாபா சொல்லியுள்ளார். என்றாலும் வாழ்க்கை முழுக்க எல்லாம் இருக்கும் என்று சொன்னார்.

இறைவன் திருநாமத்தை நம்பி யார் எங்கெல்லாம் இருப் பார்களோ அவர்களுக்கு தேவையான எல்லாம் கிடைக்கும்

என்கிறார் பாபா. பாபா பக்தர்களுக்கு ஆன்மீக அறிவுரை களையும், தோன்றா துணையாகவும் இருந்து அருள் புரிவார் என பாபா சொன்னார். இறைவனை நம்பினால் நாங்கள் தைரியம் உள்ளவர்களாக வர முடியும் என்கிறார். பாபாவுக்கு திருப்தி அளிக்க நாங்கள் 100/100 உண்மை பேசுபவர்கள் ஆகவும் ஆன்மீக கொள்கை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். பாபா சொல்கிறார் தனக்கு பூவால் மேடை தேவை இல்லை. பூ மாதிரி தூய மனம் உள்ளவர்கள் ஆக இருப்பது தான் தேவை என்று கூறுகிறார். பாபாவிடம் போனால் எங்களுக்கு வாழ்க்கை யில் நல்ல ஒரு மாற்றம் ஏற்படும். இது உண்மையாகும் என பாபா சொன்னார் அற்ப கவலைகளுக்கும், மனம் பேதலிப்ப தையும் (அந்தரப்படுவது) தவிர்க்க வேண்டும். அதற்கு மனதை ஒரு நிலைப்படுத்த ஜெபத்தில் ஈடுபட வேண்டும். என்று சொன்னார்.

பிரசாந்தி நிலையம் பாபாவின் 25 ஆவது பிறந்த தினத்தன்று திறக்கப்பட்டது. தியானம் சிறு வயதில் இருந்து பழகி வருவது நல்லது என்று பாபா வற்புறுத்தி சொல்கிறார். பாபாவுக்கு சிறுபிள்ளைகளில் விருப்பம் அதிகமாகும். தசரா பண்டிகை அன்றும், அவரின் பிறந்த நாள் அன்றும் மக்கள் பாத பூசை செய்வார்கள். லலிதாம்பாக நினைத்து லலிதா சகஸ்நாமம் சொல்லி செய்வார்கள். தசரா விழாவும் (நவராத்திரியும்) விஷே சமாக கொண்டாடப்படுவது பாபாவின் இடத்தில் ஆகும். கை, நெற்றி, பாதம், விரல், இந்த அங்கங்கள் இருந்து சிவன் ராத்திரி அன்று விபூதியை வெளிப்படுத்துவார். மக்கள் பார்த்து பஜனை செய்து கொண்டு இருப்பார்கள். சிவராத்திரி அன்று மாலை பஜனை நடக்கும் பொழுது அவரின் வயிற்றில் இருந்து சிவலிங்கத்தை எடுப்பார். எடுத்து நல்ல பக்தர்களுக்கு கொடுப்பார்.

அதை தன்னால் தடுக்க இயலாது என்பார். சிவலிங்கம் எடுப்பதை பாபா காட்டிய நாளில் இருந்து சிவலிங்கம் எடுக்கிறார்.

சிவலிங்கம் கொடுத்த பக்தர்கள் அதை வைத்து பூசை செய்கிறார்கள். லிங்கங்களில் ஒவ்வொரு வருசமும் மாற்றம் வரும் 3 இல் இருந்து 9 வரை எடுப்பாராம். பளிங்கு, தங்கம், வெள்ளி இப்படியானதாக இருக்கும். 1 இல் இருந்து $1\frac{1}{2}$ அங்குலம் உயரம் உள்ளதாகவும் இருக்கும். 3 குறியும் இருக்கும். எங்கு இருந்து நாங்கள் கும்பிட்டாலும் பாபா வருவார். திருச்சியில் பாபா நின்று பஜனை செய்யும் பொழுது ஒரு பக்தர் சொன்னா ராம். ஆன்மீக புட்ட பத்தி பஜனைக்கு வந்தால் நல்லது என்றார். உடனே பாபா அந்த பக்தனுக்கு உமது கஷ்டம் எமக்கு தெரியும் எங்கு இருந்து என்ன பெயர் சொல்லி சொன்னாலும் நான் உடனே ஓடி வருவேன் அதனால் செலவழித்து வரவேண்டாம் என்று கூறினார்.

பாபாவின் வாயில் இருந்து "அழகே ஆனந்தம்" என்ற வார்த்தை அடிக்கடி வருமாம். பாபா எல்லா உயிர்களை யும் ஒரே மாதிரியே அன்பு காட்டுவார். பாபாவின் விருப்பம் இல்லாமல் புட்டபத்திக்கு நாங்கள் போக இயலாது. பாபா விரும் பினால் தான் எங்களை கூப்பிடுவார். பாலில் இருந்து வெண்ணெய் எடுப்பது போல எங்கள் மனதில் இருந்து தெய்வீக வாழ்வு என்னும் வெண்ணையை கடைய வேண்டும் என்கிறார் பாபா. இறைவனுடைய கையில் எப்படி பொருள் ஆக இருக்க ஆசைபடுகிறாய் என்று கேட்டால் புல்லாங்குழல் போல இருக்க ஆசைப்படுவமாம். ஏன் என்றால் எல்லார் மனதையும் இன்பப்படுத்தும் இசை என்பதனால் ஆகும். பாபா பிறப்பதற்கு முதலே நடந்ததை சொல்ல ஒரு யோகி எப்படி உங்களுக்கு தெரியும் என்று கேட்க பாபா சொன்னாராம் தனக்கு இறப்பு, பிறப்பு இல்லை என்று கூறினார்.

பாபா சொல்கிறார் மனக்கவலையுடன் இருப்பவரிடமும் மனச்சோர்வு உள்ளவர்களிடமும் பாபா எங்கே இருந்தாலும்

ஓடிப்போய் ஆறுதல் கொடுப்பார். நம்பிக்கை இல்லாதவர்க்கும் நம்பிக்கை ஊட்டவே தான் இந்த உலகத்துக்கு வந்ததாகவும் சொன்னார். பக்தி, துணிவு, தன் மரியாதை, உண்மை பேசுதல் இப்படி உயர்ந்த பண்புகளை ஊட்ட வேண்டும் என பிள்ளை களுக்கு கூறினார். பாபா பக்தர்களுக்கு அன்பு ஒன்றுதான் கொடுக்கும் பெரிய பரிசு என்றார். கிருஷ்ணராக பாபா தான் வந்து நடித்தாராம். பாபா கை அசைவால் எடுக்கும் விபூதிக்கு பெயர் கைலாச விபூதி ஆகும். பாபாவின் வயிறு, கையில் இருந்து நல்ல வாசனையுடன் அமிர்தம் வருமாம். சீரடி சாயிபாபாவை ஒரு முஸ்லீம் நபர் பக்கீர் என்பவர் எடுத்து வளர்த்தார். காட்டில் அனாதரவாக இருந்த குழந்தை சிவபெருமானே இப்படி வந்து பிறந்தார்.

## சீரடி சாயி பாபாவின் வரலாறு

சாயிபாபா என்பது சீரடி சாயி பாபாவின் வரவு ஆகும். சத்திய சாயி பாபா தான் சத்திய நாராயணன் அவர் பெயர். தானங்களில் பெரிய தானம் கன்னியாதானம் என்றால் பெண்ணை கலியாணம் செய்யும் பொழுது செய்யும் கன்னி யாதானம் தான். ஆண் பிள்ளைகளை விரும்புவது பிதுர்களுக்கு ஆற்ற வேண்டிய கடனை கழிப்பதற்கு ஆகும். சீரடி சாயி பாபா காட்டில் அனாதரவாக விடப்பட்ட இந்து பிராமணனின் பிள்ளை ஆவார். நல்ல கடவுள் பக்தியானவர். அவர்களுக்கு தவத்தால் சிவபெருமான் அவர்களின் வயிற்றில் வந்து பிறந்தார். வாழ்க்கை காணும் என்று காட்டில் உயர்ந்த இடத்தை நோக்கி கணவன் செல்ல மனைவியும் போனார். அப்பொழுது பிறந்த குழந்தை தான் சீரடி சாயி பாபா ஆவார். இதை சத்திய சாயி பாபாவே சொன்னார். யார் கோத்திரம் என்று பிள்ளையை தெரியாததி–னால் பாபா என்ற அடைமொழி இல்லாத பெயரை தம் வாயால் வைத்தனர்.

சீரடி சாயிபாபா முதல் செய்த அதிசயம் 12 வயதில் வாயில் சிவலிங்கம் விளையாடும் பொழுது விழுங்கி அதை உடனே பெரியவர்கள் பார்க்க அது பகவான் விஸ்னுவின் 10 அவதாரங்களும் உடனே வாயில் நாக்கில் தெரிந்தது. உடனே அவர்கள் காலில் விழுந்து வணங்கினார்கள். தானும் சீரடி சாயி பாபா ஒன்றுதான் அதனால் தன்னை வணங்குவது, கேட்பதை சீரடி சாயி பாபாவிடமும் கேட்கலாம் என்று பாபா சொல்வார். சத்திய சாயி பாபா சீரடி சாயி பாபாவை கிழவன் என்றும் சொல்வார். தன்னுடைய முந்திய திருமேனி அவர் என்றும் சொல்வார். சீரடி சாயி பாபா இறந்த நாள் அன்று சமாதிக்கு சத்திய சாயி பாபா எப்பவும் சீரடிக்கு தனது உடலை விட்டு போய் வருவார். ராமர், கிருஸ்ணர், சிவபெருமான், ஆஞ்சநேயர் (மாருதீ) ஆகியோர் சீரடி பாபா தான் எனக் கூறுவார்.

பாபா கனவில் மக்களுக்கு வருத்தங்களை மாற்றியும், மனிதர்களை திருத்தியும் (குடிப்பவர்கள்), பிழைவிடுபவர் களுக்கு அறிவுரை சொல்லியும் மக்களை மாற்றுகிறார். தொடக்க காலத்தில் தன்னை பயப்படாமல் வணங்கும்படி கூறினார். பாபாவின் பேட்டியின் போது ஒரு அம்மையார் இரண்டு வரம் கேட்டார்.

1. எளிய இனிய மரணம் வேண்டும்.
2. கடைசி நேரத்திலும் நினைவு மங்காமல் இருக்க நல்ல அறிவு வேண்டும். ஏன் என்றால் ராமநாமம் கடைசி மூச்சு வரை தான் சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

அதன்படி பாபா இரண்டு வரத்தையும் கொடுத்தார். பாபா விரும்பினால் தான் அங்கே நாங்கள் போகலாம். அங்கே நாங்கள் தங்குவது கூட அவரின் விருப்பப்படியே ஆகும். அவர் விரும் பினால் அந்த நாளில் திரும்பி விடுவோம் என்று பாபா சொன்னார்.

தான் கூப்பிடாமல் ஒருவரும் புட்டபத்தி வர இயலாது என்றார். தான் இருக்கும் இடத்திற்கு 1000 பேர் நினைத்தாலும் வர இயலாது என்று பாபா சொல்கிறார். நான் இருக்க பயம் ஏன் என்றும், எங்களுடைய துக்கத்தை தன்னிடம் தந்து விட்டு என்னுடைய ஆனந்தத்தை எடுத்துக் கொள் என்றும், உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்படும் தன்னை தரிசித்த உடனே என்கிறார். பாபாவிடம் எல்லாம் உண்டு. நாங்கள் கேட்பவை எல்லாம் தருவார். ஆனால் அதை பெற எங்களுக்கு தகுதி இருக்க வேண்டும். தகுதி இருந்தால் தான் தருவார்.

ஆத்ம சாந்திக்கு தியானம் அவசியம். தியானம் செய்தால் ஐம்புலன்களின் வேகம் அடங்கும். வேலைக்காரருக்கு உடனுக்கு உடன் சம்பளம் கொடுத்து திருப்திபடுத்தி அனுப்ப வேண்டும். என்று பாபா சொன்னார். சீரடி பாபா இறந்து 8 வருடத்தின் பின் சத்திய சாயி பாபா தோன்றினார். பாபா புன் சிரிப்பும், எல்லா சந்தேகங்களையும் போக்கும். (முத்திரைகளும்) கை அசைப்பும், எங்களை அவருக்கு சமர்ப்பணம் செய்ய செய்கிறது. பாபா வற்றிய உயிர்களை அன்பு மழை பொழிந்து போஷித்து வளர்க்க வந்த மழை மேகம். பாபா 32 வயதில் தான் உபதேசம் செய்ய ஆரம்பிப்பேன் என்று சொன்னார். பாபாவின் தந்தை கொண்ட மகராச் பாபாவை “சின்னகுரு” என்று அழைப்பார். பாபா வந்தது உலகோர்க்கு நல்வழி காட்டத் தானே.
தெரிந்து ஒரு பிழையை விட்டால் அது பிழைதான் எனவும் தெரியாமல் ஒரு பிழை செய்தால் பிழை இல்லை என்கிறார். பக்தி மார்க்க முடிவில் சாதனை ஞான மார்க்கத்துக்கு அழைத்து செல்லும். பாபா பேச்சு விருந்து, போசனம், இல்லை. மருந்து போசனம் என்று எல்லோரும் அதை மனதில் எடுத்து அருந்த வேண்டும். என்று பாபா சொல்வார். பாபா மன உபாதைகளை தீர்க்க வந்த தெய்வீக மருத்துவர் ஆவார். பாபா பந்தயங்

களில் வெற்றி பெற்றவர்களை பார்த்து தோல்வி பெற்ற வர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று சொன்னார். இரவு 9 மணிக்கு நித்திரைக்கு இறைவனை தியானித்து விட்டு போக வேண்டும், காலை 5 மணிக்கு எழும்பி இருந்து இறைவன் நாமத்தை சொல்ல வேண்டும் பாபா சொல்கிறார். இறைவ னுக்கு நன்றியும் சொல்லிக் கொண்டு இன்று நன் நாள் ஆக இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்க வேண்டும். இறைவனின் நாமத்தை சொல்லி சூழலை தூய்மை ஆக்குங்கள். கோபம் கொண்டு சூழலை அசுத்தம் ஆக்கக் கூடாது.

பூரண உடல் நலம் பெறுகில் (மனஆறுதல்), (சாந்தி) கிடைக்கும் என்று சொன்னார். மனோ விகாரங்கம், கோபம், கவலை, பேராசை, ஆத்திரம் சஞ்சலம் ஆகியன உடல் நோய்க்கு அடிப்படை காரணம் என்று பாபா சொன்னார். திருப்தியே சிறந்த மருந்து என்றும் சொன்னார். உபவாசத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார் பாபா. தூய குணமே உடல் நலத்தின் பிறப்பிடம் என்கிறார் பாபா. நன்மைகளை கடைப்பிடி, சந்தோஷமாக இரு, தைரியமாக இரு, உண்மை உள்ளவனாக இரு. அமைதியானவனாகவும் இரு அப்பொழுது சுகமாக வாழலாம் என்கிறார் பாபா. எங்கள் மனம் காற்றை போல நல்லதையும் செய்யும், கூடாததையும் செய்யும் என பாபா சொல்கிறார். ராம் ராம் என்று தினமும் சொன்னால் எங்கள் மனதில் உள்ள துன்பங்கள் எல்லாம் இடிந்து போவது போல போய் விடும் என்கிறார் பாபா. போர்க்கு போற யந்திரம் போல ராம், ராம் என்று சொல்வது நல்லது என்று பாபா சொல்கிறார்.

நேர்மைக்கும், திறமைக்கும் சுயநலமில்லாமல் இருப்ப தற்கு, சிறந்த எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும் என்று இளைஞர்களுக்கு பாபா சொன்னார். ஜெபம், தியானம், வாழ்க் கையை பொறுப்பு உள்ளவர்கள் ஆகவும், தைரியம் உள்ளவர்கள்

ஆகவும் மாற்றுகிறது. மனிதன் கடவுளை வலது கையிலும், உலகத்தை இடது கையிலும் பிடித்து இருக்க வேண்டும். வலது கையை இடையில் விட்டு விடுவோம் ஆனால் வலது தான் சரியான பிடி என்கிறார். அதை விடக் கூடாது. என்று பாபா சொன்னார். பாபா எங்களைப் போல சாதாரண மனிதனாக வந்தால் கணக் கெடுக்க மாட்டோம் என்று மகிமைகளை புரியும் மனிதராக தான் வந்து உள்ளதாக சொன்னார். பாபா சொன்னாராம் தான் ஒருவரையும் கைவிட மாட்டேன் என்று. என் சுபாவமே அது என்று நீங்கள் எனக்கு உரியவர்கள் அச்சம் வேண்டாம் என்றும் கூறினார். எங்கள் நிழல் நடக்கும் பொழுது எங்கு இருந்தாலும் கவலைப்படாமல் இருப்பது போல எங்கள் மனம் உடலுக்குள் இருக்கும் நன்மை, தீமைகளைப் பற்றி கலைப்படக் கூடாதாம்.

நாங்கள் ஒரு பிழையை செய்து விட்டு இனிமேல் அப்படி பிழைவிட மாட்டோம் என்று சொல்லி பாபாவிடம் கேட்டால் பாபா அதை பொறுத்து மன்னித்துக்கொள்வார். உலகத்தில் அதர்மம் தலைதூக்கி இருப்பதால் பாபா மனித அவதாரம் எடுத்து வந்து அதர்மத்தை அடக்க ஆன்மீக சிந்தனையை உலகத்துக்கு பரப்பு கிறார். சிறுபிள்ளைகளை பயப்படுத்தி வளர்க்க கூடாது என்கிறார். தன்னம்பிக்கை, தைரியம், ஆர்வம், ஆகிய அருங்குணங்களை வளர்க்க வேண்டும் என்கிறார் பாபா. எமது உடல் இறைவனின் ஆலயம் ஆகும். பாபாவின் புத்தகங்களை வாசித்து நாங்கள் அடையும் ஆனந்தம் இறை சிந்தனையை வளர்ப்பதை பாபாவின் உணவு என்கிறார் பாபா. எங்கள் ஆனந்தமே அவர் உணவு என்கிறார். மக்கள் ஆன்மீக பெரு வாழ்வை பெறுவதற்காகத் தான் மகிமைகளையும், லீலைகளையும் தான் காட்டுவதாக பாபா சொல்கிறார். சனாதனா சராதி புத்தகத்தை வாசிக்க வேண்டும். அதில் வரும் வசனத்தை சில்லறை வசனம் என்று விடக் கூடாது. அது எங்கள் மனதை திருத்தி தரும்.

மற்றவர்கள் எங்களை குறை சொன்னால் கோபப்படக் கூடாது. அதை நினைத்து திருத்திக் கொள்ள வேண்டும் என்று பாபா சொல்கிறார். கோபம் வந்தால் பாபா சொல்கிறார் பஜனை பாடுதல், இறைவனின் திருநாமத்தை சொல்ல வேண்டும், இறைவனை நினைத்துப்பாட வேண்டும், அல்லது படுத்துக் கொள்ள வேண்டும். சொந்த அனுபவவே உண்மையை உணர்த்தும். மற்றவர்களின் அனுபவத்தை கேட்டு நடக்காதே. எல்லோர்க்கும் துன்பம் இருக்கும். அதை மற்றவர்களுக்கு சொல்லியும், அழுதுமே பலன் இல்லை. இன்னும் துன்பம் கூடும். நாங்கள் தியானம், ஜபத்தில் ஈடுபட்டு மற்றவைக்கும் எடுத்து காட்டாக இருக்க சொல்லி பாபா சொல்கிறார். மனம் உள் உத் தரவுக்கு கட்டுப் படும்வரை தியானம் செய். மனம் கட்டு மீறி ஓட தொடங்கினால் எச்சரிக்கை செய். மனம் போன போக்கெல்ல–ாம் போகாமல் அமைதியாக இரு. மனம் சிறு குழந்தை போன்றது என்கிறார் பாபா.

பாபா சொல்கிறார் இறைவனின் அவதாரமாக தான் வந்து இருக்கும் வேளையில் தனது அருளைப் பெற்று இருக்கும் நாங்கள் அதிஸ்டசாலிகள் என்கிறார். பாபாவை பார்த்து அனுப விக்கிறோம் என்கிறார். எல்லா விடயத்திலும் நடுப்பாதையை கையாள வேண்டும் என்று பாபா சொல்கிறார். துக்கம், துயரங்களுக்கு, கலங்காமல் இருக்கும் மனப்பாங்கு வேண்டும் இவை நோய் இல்லாமல் எங்களை பாதுகாக்கும். கூடுதலாக பட்டினியும் போடக் கூடாது. கூடுதலாக சாப்பிடவும் கூடாது என்கிறார் பாபா. இல்லற வாழ்க்கையை குரு என்கிறார் பாபா. இல்லற வாழ்க்கையில் வரும் துன்பங்களே அவனை ஆன்மீக வாழ்க்கையில் கொண்டு செல்கிறது என்கிறார் பாபா. துன்பங்கள் இல்லாவிட்டால் ஆன்மீக வாழ்க்கைக்கு தன்னிடம் ஒருவரும் வரமாட்டார்கள் என்று பாபா சொன்னார். துன்பங்களுக்கு இடம்

கொடுக்க கூடாது என்றும், துணிவுடனும், தன்னம்பிக்கையுடனும் எதிர்த்து நிற்கும் மன உறுதி வேண்டும்.

எங்களுக்கு துன்பத்தை தந்து காய்ச்சி எடுக்கிறார் இறைவன். பொன்னை காய்ச்சி நகை செய்வது போலவும் கரும்பை காய்ச்சி சீனி எடுப்பது போலவும் எங்களுக்கு துன்பத்தை தந்து ஆன்மீகத்தை வளர்க்க பண்ணுகிறார் பாபா. பலமாக உறுதியாக மனம் இருப்பது புண்ணியமாம்.

துர்பலமாக மனம் பலம் இல்லாமல் இருப்பது பாவம் என்கிறார் பாபா. மனச்சோர்வே அழிவிற்கு காரணம். எப்போதும் ஆனந்த மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். சமூக சேவையும் இறைவழிபாடு போல என்று பாபா சொல்கிறார். பலனை எதிர் பார்க்காமல் உலக சேவையில் நாங்கள் ஈடுபட வேண்டும். அதே சமயம் இறைவனையும் மறக்க கூடாது. நாமஸ் மனனம் தான் ஆனந்தத்தை தருவதில் முதல் இடம் வகிக்கிறது என்கிறார் பாபா.

யாகம் செய்யும் பொழுது போடும் (தடி) விறகு அது கூடுதலாக சந்தன கட்டையாகும். அன்பே விதை, பக்தியே அதன் முளை, நம்பிக்கையே சிறந்த உரம், நல்லோர் கூட்டுறவே நன்மழை, சரணாகதியே நறுமலர், இறைவனுடன் கலத்தலே தீஞ்சுவைக் கனி (பழம்) என்று பாபா உபதேசித்தார். எங்கள் நெஞ்சில் இருக்கும் இறைவனை நினைத்தால் எங்கள் வாழ்க்கை தேரை சுலபமாக கொண்டு செல்வாராம். எங்கள் பிரார்த் தனையை கேட்கவே இறைவன் வந்துள்ளார். இராமர் உலகத் துக்கு வந்தது இராவணன், அரக்கர்களை அழிப்பதற்கு முன்பாக இராமேஸ்வரத்தில் இராமரே லிங்கத்தை பிரதிஸ்டை செய்தார். அதே போல சாயிபாபா சீரடிபாபாவின் சிலையை பிரதிஸ்டை செய்தாராம். வேறு ஒருவரும் இப்படி அவதாரத்தில் பிரதிஸ்டை

செய்ய வில்லையாம். பாபா எந்த கோயிலுக்கு போனாலும் அந்த கோயிலின் புனித தன்மை, மேல் ஓங்கி நிற்கும். உடல் நலத்தை பேணுவது போல நாங்கள் ஆன்மீக நலத்தையும் பேண வேண்டும். பாபா சொல்கிறார் பெற்றோர் இருந்தாலும் சரி இல்லாவிட்டா லும் சரி. நாங்கள் இப்படி சந்தோஷமாக இருப்பதற்கு காரணம் அவர்கள் அதனால் அவர்களை மறக்காமல் நினைவு கூர வேண்டும். மரியாதை செய்ய வேண்டும். அது எங்கள் கடமை யாகும். பாபா சொல்கிறார் இறைவன் நாமத்தை எழுதியோ, வாயால் சொல்லியோ, தியானித்தோ, பூசை செய்தோ ஏதோ ஒன்றால் கடவுளை நினைத்துக் கொண்டு இருப்பது நல்லது என்று கூறுகிறார். மனதை தளர விடாமல் உற்சாகத்துடனும் சந்தோஷத் துடனும் இருக்க வேண்டும். என்று பாபா கூறுகிறார். பாபா எங்கள் மனதில் எப்பவும் இருக்கிறார் என்ற உணர்வில் சாந்தியுடனும், திருப்தியுடனும் இருக்க வேண்டும் என்கிறார் பாபா.

## சத்தியம், சிவம், சுந்தரம்
## பாகம்:02

கொண்ட மகராச் சத்திய சாயி பாபாவின் பேரன் அவர் கட்டிய கோயில் தான் சத்திய பாமை என்ற கோயில் புட்ட பத்தியில் பிரசாந்தி நிலையத்துக்கு கிட்ட உள்ளது. ஈசுவரம்மாவின் தந்தையார் சிவன் கோயில் கட்டினார். ஆதன் பிறந்த பிள்ளை என்பதால் உமாதேவியின் பெயரை ஈசுவரம்மா என்று பெயர் வைத்தார். பாபா சொல்கிறார் பஜனை படிக்கும் பொழுது உள்ளிருந்து பொங்கி வர வேண்டும். நாவினிலே இருந்து தவிர வரும் பயிற்சி ஆக இருக்க கூடாது. இன்பம், துன்பம், இறப்பு, பிறப்பு இவைகளை கடக்க இறைவனின் பாதங்களை நாட வேண்டும். உண்மை ஒரு நேரம் வென்றே தீரும் பொய் ஒரு போதும் வெல்லாது. பிரசாந்தி நிலையம் என்றால் பேர் அமைதி

நிலவும் இடம் என்று பொருள் என்கிறார் பாபா. அன்பு உற்றோரின் இதய ஆனந்தமே பாபாவின் ஆனந்தம் என்கிறார். பாபாவின் ஆனந்தமே பக்தர்களின் பரிசு பொருள்.

பாபா சொல்கிறார் தான் ஆலயவாசி இல்லை. இதயவாசி என்று தன்னை இதயத்தில் வைக்க சொல்கிறார். நான் என்பதே இல்லை எல்லாம் நீயே என்று இறைவன் திருவடியில் என்னை அர்ப்பணித்து விட வேண்டும். எங்களை நசுக்குகிற சுமைகளில் இருந்து நாங்கள் விடுபடுவோம் என்கிறார் பாபா. தர்மம் மக்களின் சர்வபோக நிவாரணியாகும். எதிரியை நண்பன் ஆக்கினால் சந்தோஷமாக வாழலாம். பாபா சிறுவர்களுக்கு அறிவுரை கூறினார். துன்பமுற்றோர்க்கும், மனமுடைந்தோர்க்கும் அன்புடன் தொண்டு புரிய வேண்டும் என்கிறாா். காயத்திரி மந்திரம் பொருள் உணர்ந்து சொன்னால் அது எங்களை காப்பாற்றும் என்கிறார். காயத்திரி மந்திரம் அறிவை கொடுக்கும் மந்திரம் ஆகும். நான் தொடங்கிய காரியத்தை வடிவாக (துணிவாக) முடிக்க தனக்கு சக்தியை தரச் சொல்லி பாபாவிடம் ஒருதர் கேட்க பாபா சொன்னார். சந்தியா வந்தனம் செய்கிறனியா? என்று கேட்டார். அவர் இல்லை என்று சொன்னாா். உடனே இன்று தொடக்கம் செய். 3 நேரமும் காலை, மதியம், இரவு (6மணி) பொழுது படும் நேரம் அன்புடனும், பக்தியுடனும் இறைவனை வணங்க செய்ய சொல்லி அவர் அதன்படியே பின் செய்தார்.

இராம நவமி என்பது இராமர் பிறந்த நாள் ஆகும். என்னை நான் யார் என்று அறிந்தால் சந்தோஷமாகவும், ஆனந்த மாகவும், வாழலாம் என்று பாபா சொன்னார். தெய்வீக சாதனைக்கு உள்ள முதல் சாதனைகள் பொறுமை, இறைவன் நாமத்தை ஜெபித்தல், தியானித்தல், உதவி செய்யும் உண்மையான எண்ணம், தீய ஒழுக்கத்தில் இருந்து நீங்குதல் இவைகளை கடைப்பிடிக்க வேண்டும். சலனம் முரண்பாடு உள்ள எங்கள்

இதயங்களை தன்னிடம் ஒப்படைக்க சொல்கிறார் பாபா. எங்களுடைய விஷயத்தை போலவே மற்றவர்களின் விஷயத்தையும் நாங்கள் நினைக்க வேண்டும் என்று பாபா சொல்கிறார்.

எங்கள் உடலை சுகமாக வைத்திருக்க் என்னென்ன வழிகள் செய்கிறாமோ, அதே போல எங்கள் சித்தங்களை (மனங்களை) வைத்திருந்தால் அளவற்ற ஆனந்தத்தையும், அமைதியையும் பெறுவோம் என்று பாபா கூறுகிறார். வாழ்க்கை என்பது இறைவன் நடிக்கும் நாடகம். அதில் நாங்கள் நடிகர்கள். எங்கள் நோய்களுக்கு அவசரத்துக்கு நல்ல மருந்தை விட விபூதி பாபாவுடையது தான் எங்களுக்கு குணமளிக்கும் அதை கடைப்பிடிக்கவும். பாபாவே தான் சிவனாகப் பிறந்தது என்று சொன்னார். பாபாவின் ஒரு தரிசனம் இரும்பையும் தங்கமாக்கவல்லது. அவருடைய அறிவுரையை கேட்பது ஆன்மீக சக்தியால் எங்களை நிரப்புவதற்கு சரியாகும். அவர் எழுதியதை படிப்பது அகந்தை என்னும் அழுக்கை அகற்றி ஆன்மீக உணவை உண்பதற்கு சரியாகும்.

பாபாவிடம் போகின்றவர்களை பாபா புனிதப்படுத்தி, வலிமையூட்டி, உரமிட்டு எங்களை அனுப்புகிறார். துக்கமும், நோயும் சகோதரிகள். அது எல்லோர்க்கும் உள்ளது. இதை நீ அறியவில்லையா? என்று பாபா சொன்னார். எங்களுக்கு வரும் வருத்தம் எல்லாம் எங்கள் பூர்வீக கர்மங்கள் என்று பாபா சொல்வார். நாங்கள் 13 ஆம் திகதியை அதிஸ்டம் இல்லை என்போம். பாபா 13 ஆம் திகதியையே அதிகம் தேவைக்கு பாவிப்பார். பாபாவுக்கு நாங்கள் ஸ்பெஷல் சாப்பாடு செய்து கொடுத்தால் பிடிக்காது. சாதாரணமாக நாங்கள் சாப்பிடுவதையே கொடுத்தால் தான்பிடிக்கும். பாபா அவர் அடியார்களின் கறைகளில் அடியார்களை தேற்றவும், அறிவுறுத்தவும், அமைதிப்படுத்தவும், எச்சரிக்க

வும் வருகிறார். பாபா அவர் நினைத்தால் தான் எங்கள் கனவுகளில் வருவார் என்கிறார். பகவான் ஒரு நடமாடும் தெய்வம் என்று குறிப்பிடுகிறார். பாபா எங்களுடன் இருந்து எங்களுக்குதேவையான நேரம் எல்லாம் செய்வார். வழிகாட்டியாக இருப்பார்.

பாபாவிடம் அன்பும், நம்பிக்கையையும் வைத்து விட்டால் பாபா பக்கத்தில் இருந்து எங்களை காப்பாற்றுவார். பாபா விரும்பினால் அல்லது நம் விருப்பம் அவர் உள்ளத்தை தொட்டால் அது இயற்கையின் நியதிகளையும் கடக்கிறது. செய்ய இயலாததையும் செய்ய பண்ணும். பாபா எல்லா உயிர்கள் இடத் தினும் இருக்கிறார். அதனால் நாங்கள் மற்ற உயிர்களை துன் புறுத்தக் கூடாது. மற்ற மனிதர்களையும் குறை சொல்ல கூடாது. பாபா அவருடன் இருப்பதால் ஆகும். பாபாவின் நாமத்தை சொல்லிக் கொண்டே இருக்கச் சொல்கிறார். பாபா நோய், துன்பம், அச்சம், இழப்பு இவைகளை புலம்பி கொண்டு திரியாமல் இருக் கச் சொல்கிறார். இறைவனுடைய எல்லா பெயரும் எல்லா உரு வமும் சத்திய சாயி பாபா ஒருவரே என்றார். பாபா சொல்கிறார் தான் சொல்வதைக் கேட்டு போர் படைக்கு (பகுடிக்கு) சேருங்கள். எல்லாம் வெற்றி என்கிறார். கடவுளை எங்கே காணலாம் என்று கேட்டால் புட்டபத்தி என்று சொல்லலாம். சித்தம் (மூளை) யின் தடுமாற்றங்களுக்கு ஆள் ஆகாமல் இருக்க வேண்டும் என்கிறார்' பாபா. மக்கள் மனதில் உள்ள சலனத்தையும், முரண்பாட்டையும் பாபா தன்னிடம் தர சொல்கிறார். அப்படி தந்தால் நாங்கள் விடுதலை பெற்று விடுவோம். மற்றவர்கள் செய்யும் குற்றங்களை மன்னிப்பவர்களை, மறப்பவர்களை பாபா பாக்கியசாலிகள் என்கிறார். அவர்கள் இடத்தில் பாபா பாவ சுமையை சுமத்த மாட்டார்.

பாபா சொன்னார் என்ன குற்றம் செய்தாலும் அதற்கு உரிய தண்டனையை அனுபவிக்க வேண்டுமாம். அனுபவிக்காமல் போக கூடாது. அது பிழை என்று பாபா சொன்னார். மற்ற பிறவிக்கு தண்டனையை தள்ளி போடக் கூடாது என்றார். குற்றவாளி யிடம் பாபா சொன்னார் உனக்கு தூக்கு தண்டனை வராது. நீ போய் தண்டனை அனுபவித்து விட்டு வா. வர உனக்கு கழுத்தில் ஜெப மாலை தான் போட்டு விடுகிறேன் என்று கூறினார். பாம்பு செட்டையை களட்டி விட்டது போல இவனும் தனது கூடாத குணங்களை எல்லாம் மறந்து புது மனிதன் ஆக மாறினான். செய்த குற்றத்தை உணர்ந்து வருந்தி இறைவனிடம் மன்னிப்புக் கோரியதால் அவர்கள் மனம் சாந்தி அடைந்து இறைவனிடம் பக்தி மேவிவிட்டது. பாபாவின் நாமத்தையே எங்கள் உயிர் தோழனாக நினைக்க வேண்டும்.

சினிமாக்களைப் பார்த்து பிள்ளைகளை மனம் பாதிக்காமல் இருக்கும் படி பார்க்க சொல்கிறார் பாபா. ஒரு தாய் முரட்டு பிள்ளையை திருத்த தனது அன்பை காட்டி என்ன பாடுகிறாளோ அதே போல பாபா குற்றவாளியிடம் அன்பை காட்டுகிறார். குற்ற வாளி குற்றத்தை ஒத்துக் கொள்ள வேண்டும். குற்ற வாளி தண்டனையை ஏற்றுக் கொள்ள வேண்டும். குற்ற வாளி திரும்ப குற்றம் செய்ய மாட்டன் என்று உறுதி பூண வேண்டும். என்று பாபா சொன்னார். குற்றத்திற்காக மன்னிப்பு கேட்பது காணாது என்றார். நாங்கள் செய்த குற்றத்திற்கு மனம் வருந்தினால் பாபா அதற்கு உள்ள தண்டனையை குறைத்துக் கொள்வார். பாபா வாழ்வில் வீழ்ச்சியடைந்தவர்களை உயர்த்துவார்.

ஒவ்வொரு விநாடியும் இறைவனின் நாமம் நினைவாக இருக்க வேண்டும். 23 வருடமாக பிரார்த்தித்த பக்தர்க்கு ஒரு தங்க, வைர பதக்கத்தை பாபா கொடுத்தார். பாபா அற்புதம்

செய்வதன் நோக்கம் எங்கள் குணத்தை மாற்றுவதற்கும், எங்கள் நடத்தைகளில் மாற்றத்தை உண்டாக்கவும் ஆகும். நாங்கள் 3 மாதத்தில் முழு மனத்துடன் தியானம் செய்தால் அதன் பலனை அடையலாம். பாபா மேல் நம்பிக்கை வைத்து, அவர் சொற்படி நடப்பதே அவருக்கு நாம் செய்ய வேண்டிய செயல் ஆகும். சினத்தை தவிர்த்தால் சிறப்பாக வாழலாம். பிரசாந்தி நிலை யத்தை பாபா மதுர, பத்ரிநாத், திருப்பதி என்று சொல்கிறார். துவாரகையின் இறைவன் சீரடியாம் என்கிறார். சாயி சத் சரித்திரம் என்பது சீரடி சாயி பாபாவின் வரலாறு உள்ளது. அதை வாசித்தால் சத்திய சாயி பாபாவை பற்றி கூட அறியலாம்.

சீரடி சாயி பாபாவை ஒரு பக்தர் கேட்டார் அவருக்கு கண் தெரியாது. கடவுள் ஆகிய உங்களை பார்க்க மட்டும் ஒரு தடவை கண்பார்வை தெரியும் படி ஆக்கச் சொல்லி அதன் படியே சீரடி சாயி பாபா அவர்க்கு பார்வை கொடுத்து எடுத்தார். ஓம் காரம், காயத்திரி மந்திரத்தை படித்து பின்பற்றும் படி பாபா சொல் கிறார். குருடர்களுக்கு பார்வை தரவும் தற்பெருமைகாரரை திருத்தவும் அறியாமையில் மூழ்கியவர்களுக்கு ஞான ஒளி களாகவும் துன்புறுவோர்க்கு ஆறுதல் அழிக்கவுமே பாபா வந்திருக்கிறார். உலக நாடக மேடையில் பொம்மலாட்ட கயிறு களை ஆட்டுபவன் நானே என்று சீரடி பாபா சொன்னார். பாபா இகழ் மொழி, புகழ் மொழி இரண்டையும் சமமாகவே எடுத்துக் கொள்வார். பாபா பொறுமை உடையவராக பற்றுக் கள் அற்றவராய் உணர்வுகள் வென்றவராய் ஆன்மீக விடுதலை வந்தவராய் இருக்கிறார். பாபா சொல்கிறார் எந்த உயிர் இனத்தையும் அலட்சிய படுத்துவது தன்னை அலட்சியப்படுத்து வதற்கு சரி என்று கூறினார்.

தன்னை தவறாக விளங்கும் பக்தர்களுக்கு உண்மையை தெரிவிக்க பாபா 7 கடல் கடந்து சென்று தரிசனம் செய்வார்.

எங்களை கஷ்டப்பட்டு தன்னிடம் வராமல் சிறந்த சாதனம் என் இதயத்தை பிரசாந்தி நிலையமாக மாற்றுவதற்கு அங்கே பாபா ஓடி வருவார். சீரடி பாபாவின் கொள்கைகளும், சத்திய சாயி பாபாவின் கொள்கைகளும் ஒரே மாதிரியானவை. தாயை குறை கூறாதே, தற்தையை பழி வாங்காதே, தலைவிதியே அனைத் துக்கும் காரணம். என் துயரத்துக்கும், மேற்கொண்ட துன்பத் துக்கும் காரணம் என் வினைபயனே. அதனால் மற்றவை அன்போ, நன்றியோ காட்டாவிட்டால் அதற்காக வருந்தக் கூடாது. பழி சொல்லக் கூடாது. (இறைவனை வணங்க வேண்டும்) பாபா சொல்கிறார் தன்னிடம் முதல் வரட்டாம் அனுபவங்களை பெற்ற பின் நம்பிக்கை வந்த பின் தன்னை பயன்படுத்தி கொள்ள சொல்லி அதுதான் முறை என்று கூறினார்.

எங்கள் இதயமே பாபா குடி கொண்டிருக்கும் கோயில் என்கிறார். பாபா சொல்கிறார் வாடுகிற மாலையும், அழுகிப் போகும் பழங்களையும், மதிப்பற்ற பணத்தையும் தான் எதிர் பார்க்க வில்லை. எங்கள் சுத்தமான இதயத்தை தான் விரும்பு கிறார். பந்தம் துன்பத்தை தருகிறது. மீட்சி இன்பத்தை தருகிறது. என்று பாபா சொன்னார். இதை மனதில் நிலை நிறுத்தி வைத்துக் கொள்ளச் சொல்கிறார். இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு இவைகளுக்கு அப்பாற் பட்டவன் தான் உயர்ந்தவன் என்கிறார் பாபா. மனதில் உள்ள சலனங்கள் அழிந்த பின் தான் ஒருவன் வைரம் ஆகின்றான். அதாவது Die mind ஆகினான் மனிதன். அன்று பூத்த மலர் போல என்றும் எப்பவும் உற்சாகமாக இருப்பார் பாபா. பாபாவிடம் சோர்வை காண இயலாது. பயம் தான் நோய் களுக்கு மூல காரணம் என்கிறார் பாபா. கடவுளிடம் நம்பிக்கை வைத்தால் பயம் குறையுமாம். மருந்தை விட கடவுளிடம் நம்பிக்கை வைக்கச் சொல்கிறார். ஜபம், தியானம், ராம நாமம் இவைகளை விட வேறு மருந்து இல்லை என்கிறார் பாபா.

ஆனந்தம், அமைதி, ஆகியவைகளை பெற ஆன்மீக வழியை பின்பற்ற சொல்கிறார் பாபா. கடவுள் (GOD) என்னும் உயிர்ச் சத்தை உண்பவருக்கு நிச்சயம் இறைவனின் அருள் கிடைக்கும். என பாபா சொன்னார். அனல் (கக்கும்) வெளியிடும் உக்கிரமான பாடலையும், பொருள் இல்லாத தாறுமாறான ஓசைகளையும் உள்ள பாடல்களை பாபா வெறுக்கிறார்.

எங்கள் மன குழப்பத்தையும், அவநம்பிக்கையையும் மற்றவைக்கு தொற்ற வைக்க வேண்டாம் என்கிறார் பாபா. கேவலமான பொழுது போக்கு சாதனத்தை விலக்கி விடுவது நல்லது. ஆன்மீக நூல்களைப் படித்தல், சமூக சேவை, மௌனம், தியானம், இனிமையான பேச்சு, புலனடக்கம், நாமஸ் மனனம், இப்படியான முதற் படிகளையாவது கையாள வேண்டும். என்று பாபா சொன்னார். சாந்தி, பிரேமை ஆகியவை என்கிறார். பாபாவின் பிறந்தநாளை அவருக்கு கருணை தெரிவிக்கும் நாளாக மக்கள் எடுத்துக் கொள்ளும் சந்தர்ப்பமே. பாபாவின் பிறந்தநாளை கொண்டாடுவதை விட எங்கள் மனதில் பாபாவை நிலைநிறுத்தி இருப்பதையே பாபா விரும்புகிறார். பாபாவின் சிறந்த மகிமையே பிரசாதம் ஆகிய விபூதி மழை அவர் மனதால் நினைத்தால் ஆறு போல விபூதி மழை கொட்டும்.

பாபா சொன்னார் தனது படத்திலோ, வேறு சுவாமி படத்தில் இருந்தோ விபூதி வந்தால் தீமை இல்லை அது நன்மை தான் என்று சொன்னார். படங்களில் இருந்து விபூதிப் பிரசாதம், வருவது பாபா வீட்டுக்கு வரும் அறிகுறியாகும். (விசிற்றிங்காம்) என்றார் பாபா. விபூதி என்பது சக்தி, வலிமை, தேஜஸ், மகிமை, புகழ், கம்பீரம் ஆகியவைகளை குறிக்கிறது. இருண்ட சாம்பல் நிறமாக படத்தில் விபூதி வந்தால் சீரடி விபூதி என்பர். மணமுடனும், மிருதுவாகவும் இருக்கும் விபூதியை சத்திய சாயி பாபாவின் பர்த்தி விபூதி என்றும் சொல்வார்கள். குங்குமம் பல

நிறத்தில் இருக்கும். மனதை அடக்கி அமைதியாக இருப்பவர் களுக்கு நினைவாற்றல் கூடவாகும். மனம் அமைதி இல்லாமல் ஓடி திரிபவர்களுக்கு நினைவாற்றல் குறைவாகும். Sun T.V இல் சுவாமி நாதன் சொன்னார். சில இடங்களில் விபூதி ஒரே கொட்டிக் கொண்டு இருக்கும். அதை நிறுத்த பாபாவை வேண்டிக் கொள்பவர்களும் உண்டு.

அகங்காரம் தலை எடுத்தால் (கிஸ்டேரியா) நோய் என்று பாபா சொல்வார். சந்திரன் மனதுக்கு அதி தேவதை. சூரியன் புத்திக்கு அதி தேவதை என்று பாபா சொல்கிறார். ஒவ்வொரு வினாடியும் நல்ல நேரம் தான் என்று பாபா கூறுகிறார். உலகத்தில் உள்ள ஆசைகள் எல்லாவற்றாலும் மனிதன் தனது புத்தி, மனம், தரும் ஆனந்தத்தை பெறும் வழியை மறந்து விடுகின்றேன் என்று பாபா சொல்கிறார். இறைவனிடம் நாங்கள் வைத்திருக்கும் அன்பே எங்கள் ஆனந்தத்தின் ஆணிவேர் ஆகும். பாபா லிங்கம் வாயால் எடுக்கும் நேரத்தை லிங்கோத்பவ முகூர்த்தம் என்று கூறுவர். லிங்கம் வெளி வரும் பொழுது பக்தர் கள் ஓம் நமசிவாய என்று மந்திரம் எல்லோருடைய இதயங் களில் வெளிவரும். லிங்கம் வரமுதல் பாபாவுக்கு, இருமல், விக்கல் பெருமூச்சு எல்லாம் வரும்.

சேவை, எளிமை, நற்பண்பு, ஆகியவைகளை குழந்தை களுக்கு எடுத்து காட்டாக இருக்க பெற்றோர் நடக்க வேண்டும் என்று பாபா சொன்னார். பாபாவின் பேச்சை கேட்டு மக்கள் இன்புற்று, மனசுமை குறைந்து வலுவுற்று இருப்பர். பிரசாந்தி நிலையத்தின் நோக்கம் வழிதவறிப் போய் படுகுழியில் விழும் மனித குலத்தை நேர்வழி காட்டுவதே ஆகும். என்று பாபா சொன்னார். பாபா யார்க்கும் தெரியாமல் ஒவ்வோர் குடும்பத் துக்கும் முதற் குருவாக இருக்கிறார். இறைவன் நாமத்தை சொன்னால் அகங்காரத்தை அழித்து மனதை தூய தாக்கும்

என்று பாபா சொன்னார். பஜனை செய்வது நாவுக்கு தரும் பயிற்சி இல்லை. மனதுக்கு தரும் பயிற்சி ஆகும். பஜனை செய்யும் போது பாபாவின் உருவத்தை பார்த்தும் அந்த கருத்தை உணர்ந்தும் செய்ய வேண்டும். பஜனை என்பது கவலையுடன் இருக்கும் மனதுக்கு சக்தி அளிக்கும் மருந்து ஆகும். தாளம், மேளம் நன் மக்களின் கூட்டு உறவால் தெய்வீக ஆனந்தம் என்னும் மருந்தால் நோயை குணப்படுத்தும் செயல் திட்டமே பஜனை என்று பாபா சொன்னார்.

பாபாவின் தரிசனம் கிடைக்கும் பொழுது ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி கிடைக்கும் அந்த நேரத்தில் உயர்ந்த பேரின்ப நிலை கூடுகிறது. என்ன நாங்கள் செய்தாலும் அதற்கு ஆனந்தத்தை தருபவர் பாபாவே என்று உறுதியாக நம்ப வேண்டும். பாபாவை தெளிவு படுத்தாத ஓர் அற்புதம் என்றால் யாராலும் அவரை இன்னார் என்று அடையாளம் காட்டவோ, புரிந்து கொள்ளவோ இயலாது. பாபா சொல்கிறார் தான் எங்களுக்குள்ளும் அவருள்ளும் இருக்கிறேன். இதை யாராலும் பிரிக்க முடியாது. எங்களை நாம் உணரும் போது தான் அதை உணர முடியும் என்கிறார். உலக இன்பங்களில் ஆசை கொள்ளாமல் அது திரும்ப, திரும்ப பெற வேண்டும் என்று மனம் ஆசை கொள்ளும். அதில் மனதை செலுத்தாமல் நிலையான, உயர்வான குன்றாத இன்பத்தை பெற ஆசை கொள்ள மாட்டோம். அது தான் ஆன்மீகமும், இறைவனின் சிந்தனையும் ஆகும்.

பாபாவிடம் எல்லோரும் பொருள், பண்டம், பதவி, உயர்வு, இவைகளை கேட்டு வருகிறார்கள். ஆனால் பாபா விரும்பி கொடுப்பது துன்பம், வேதனை, கலக்கம், அச்சம், மனத்துன்பம் இவைகளையே கொடுத்து நீக்குகிறார். பாபா ஏழையின் உணவு மாதிரியே உண்கிறார். பால், தயிர், நெய், வெண்ணெய், இனிப்புப் பண்டம் இவைகளை தொட கூட மாட்டார். அவரது

அறையில் மிகவும் எளிய கட்டிலே உள்ளது. அவர் செல்லும் கார் கூட மிகவும் ஆடம்பரம் இல்லாத காரே ஆகும். எங்களுக்கு மகிழ்ச்சியை தருவதும், துன்பத்தை தருவதும் பாபா இல்லை. எங்கள் செயல்களின் பலனே ஆகும் என பாபா கூறுகிறார். இரும்பால் ஆனதோ, பொன்னால் ஆனதோ என்ற பிணைப்பை உண்டாக்குவது எமது செயலே ஆகும். பாபா எப்பொழுதும் சோர்ந்து இராமல் ஓடி, ஆடி வேலையினை செய்வார். ஒவ்வொரு வினாடியும் நற்கருமம் செய்வதில் இருக்க வேண்டும் என்று தானே செயல் படுத்தி காட்டுவார் பாபா.

எளிய நடத்தை, ஏற்றத் தாழ்வு அற்ற உள்ளத்தால் இறைவனிடம் அசைக்க முடியாத நம்பிக்கை இதனால் மற்றையவர்கள் எங்களை நம்ப வேண்டும் என்று பாபா கூறுவார். பாபா தன்னை புகழ்பவர்களை பார்த்து புன்னகை செய்கிறேன். அதேபோல் தன்னை இகழ்பவர்களை பார்த்தும் புன்னகை தான் செய்கிறேன் என்றார். கவலைக்கும் கோபத்துக்கும் இடம் கொடுத்து உடல் நலத்தை கெடுத்துக் கொள்ள வேண்டாம் என்று பாபா கூறுகிறார். தவறு செய்பவனுக்கும், தீங்கு இழைப்பவனுக் கும் இறைவன் மட்டும் தான் அன்பு காட்டுவார். மனிதன் காட்ட மாட்டான். பாபா தங்கும் கொடைக்கானல் என்பது ஆரோக்கிய மலைவாசஸ்தலம் எனப்படும். பாபா பிரசாதம் மக்களுக்கு கொடுத்து பிரசாதம் உண்டவர்களை பொய் சொல்ல கூடாது என்று சொன்னார்.

நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு இந்த 5 பஞ்ச பூதங்களையும் மனிதன் மிகுந்த பய பக்தியுடன் கையாள வேண்டும். மனநோய்க்கு சங்கீதத்தை பயன்படுத்தலாம். இசைக்கு நோய் அகற்றும் தன்மை உள்ளது என்று பாபா சொன்னார். தெய்வீக மருத்துவரை நாடி வருபவர்களுக்கு இறைவன் நாமமே சிறந்தது. பாபா சொல்கிறார் மோகம், கோபம்,

வெறுப்பு, பொறாமை ஆகியவைகளின் விஷகிருமிகளே எங்களுக்கு நோய், மனதில் அமைதியின்மையை தருகின்றன. தவறுகளையும், தோல்விகளையும் மற்றவையின் மேல் சாட்டு வதை பாபா வன்மையாக கண்டிக்கிறார். வெறுப்பும், பொறாமை யும் எங்கள் அழகை கெடுக்கும் என்கிறார். பொறாமை, கோபம், மோகம், பேராசை ஆகியவைகளால் பீடிக்கப்பட்டவனுக்கு அஜிரணம், நரம்புத்தளர்ச்சி ஆகிய நோய்கள் ஏற்படும். இவைகளில் இருந்து நாங்கள் தப்புவதற்கு இறைவன் பால் பக்தியை பெருக்கிக் கொள்ள வேண்டும்.

எங்களைப் போல உடனே மற்றவைக்கு இரங்கி ஒன்றும் செய்ய மாட்டாராம் பாபா. எல்லாம் அறிந்து மதிப்பிட்டு இது இவனுக்கு தேவை தானா என்று அறிந்து தான் பாபா செய்வாராம். இதை முறையாக இவன் பாவிப்பானா என்று தான் செய்வார் பாபா. பாபா தன்னிடம் இருந்த பக்தன் கடைசிநேரத்தில் வருத்தத் தால் துன்பட சொன்னார். இது அவர் அனுபவித்து தான் தீர வேண்டும். அடுத்த பிறவியில் போய் கஸ்ரப்படாமல் இப்பவே அனுபவித்து போவது நல்லது என்று கூறினார். பாபாவிடம் எல்லா பொறுப்பையும் விட்டு, விட்டு நாங்கள் இருக்க வேண்டும். பாபா எல்லாவற்றையும் செய்வார். பாபாவிடம் முழுநம்பிக்கை யுடன் கூப்பிட்டால் எந்த நோயையும் மாற்றி விடுவார். நோய் வரும் நேரம் பாபாவின் விபூதியை பக்தியுடன் பூச வேண்டும். தர்மத்தை வளர்க்கவும், தெய்வ நம்பிக்கையை வளர்க்கவும் பிணி, மூப்பு, சாக்காடு, என்னும் தீராத துன்பத்திலிருந்து மனித குலத்தை மீட்கவும் தான் பாபா அவதாரம் செய்தார்.

தனிப்பட்ட பேட்டியின் போது பாபா சொன்னார் எப் பொழுதும் பயந்து நட இல்லையேல் ஏதாவது தவறு நிகழலாம் என்கிறார். எங்கள் மனதில் வரும் ஆனந்தம், சாந்தி தான் இறைவன் என்கிறார். பாபாவின் வாயில் இருந்து வரும் லிங்கமானது

பாபா தன்னை தானே லிங்கமாக எடுக்கிறாராம். லிங்கங்கள், தெய்வ உருவங்கள் எல்லாவற்றிலும் பாபாவின் உருவங்கள் தெரியுமாம். பிரசாந்தி நிலையம் புனிதமானது தான். ஆனால் மகா சிவராத்திரிக்கு பாபா லிங்கம் வாயில் எடுப்பதால் அன்று இன்னும் விஷேடமானது. நல்லவைகளை காண்பதிலும், நல்ல வைகளை பேசுவதிலும், நன்மையான செயல்களை செய்வ–திலும், ஒவ்வொரு வினாடியையும் செலவிடுங்கள். பச்சாத் தாபத்தோடு ஒரு சொட்டு கண்ணீர் சிந்தினால், நூறு துளிகளை துடைப்பேன் என்று பாபா சொன்னார். ஞானம் என்பது கர்ம சுமையை இழுத்துக் கொண்டு இறை வனிடம் செல்ல உதவுகின்றது.

சாயிக்கு விருப்பமான ஒழுக்கம், நம்பிக்கை, நேர்மை, எளிமை, பயபக்தி ஆகியவைகளை அளித்தால் சாயி அவர்களை ஆதரிப்பார். சத்திய சாயி சமித்தி நிறுவனத்தினர் இறைவனிடத் திலும், மனிதர்களிடத்திலும், பக்தியும், அன்பும் உள்ளவர்கள் ஆக இருக்க வேண்டும். விருப்பத்துடனும், உள்மனதுடனும், சேவை செய்ய வேண்டும் என்கிறார். சாந்தமும், அமைதியுமாக இருந்து தெய்வீக சூழலில் மாணவர்கள் வாழ வேண்டும் என்று பாபா சொன்னார். உடலுக்கு எவ்வாறு உணவு முக்கியமோ அப்படியே ஆன்மாவுக்கு ஜபம், தியானம், நாமஸ்மனனம் முக்கியம் என்றார் பாபா. நான் இதை செய்தேன், அதை செய்தேன் என்று நினைக்க கூடாது. பாபாவின் கருவிகள் என்று நினைக்க வேண்டும். புகழ் என்பது கானல் நீரைப் போன்றது. பிறர்க்கு நன்மை பயக்காத எந்த செயலையும் பொருள் இல்லாத சொல்லையும் நான் செய் வதில்லை என்று பாபா சொன்னார். பாபாவின் நினைவாலும், பாபாவின் அறிவுரைப்படி கேட்டு, சாந்தியும், அமைதியும் பெறலாம் என்கிறார் பாபா.

அமைதி, ஆனந்தம், ஞானம், இவைகளை உணர வேண்டும்

என்று பாபா சொல்கிறார். பாபாவிடம் வருபவர்கள் அவரிடம் தான் பெறும் பரிசு அவர்களுடைய புன்னகையே ஆகும். எங்களை சுற்றி இருப்பவர்கள் நிம்மதியாக இருந்தால் தான் நாங்கள் அமைதியாகவும், சந்தோஷமாகவும் இருக்கலாம் என்கிறார் பாபா. இறைவழியில் முன்னேறும் மக்களுடன் தொடர்பு கொள் என்கிறார் பாபா. தியாக உணர்வால் தான் மனதில் ஆறுதல், ஆனந்தம் வரும் என்கிறார் பாபா. தானும் பயந்து, மற்றவர்களையும் பயமுறுத்தி மிருகத்தனத்துக்கு ஆள் ஆகாமல் இறைவனை நாட வேண்டும். பாபாவின் அற்புதங் கள் அனைத்திலும் உயர்ந்த அற்புதம் பாபாவின் பிரேமை (அன்பு) தான் ஆகும். பாபா சொல்கிறார் வாழ்க்கை என்பது காரியார்த்தமான நாடகம் நாடகத்தினுள் ஒரு நாடகம் கடவுளும் இதில் பங்கு கொண்டு நடிக்கிறார்.

வாழ்க்கை நாடகத்தில் எங்கே கம்பீரம், அழகு, ஒழுக்கம், இசைவு, இனிமை, ஆகியவை காண்கிறோமோ அங்கே இறைவன் இருக்கிறான். பாபா தானும் ஒரு நாடகமாக ஒரு பாகம் ஏற்று நடிக்கிறார். மக்கள் தனக்கு தானே நம்பிக்கையை வளர்க்க வேண்டும். சந்தேகங்களை தீர்க்க வேண்டும். பாபாவின் அற்புதங்களை படம் எடுத்து காட்டி மக்களை நம்ப வைக்க கூடாது என்கிறார் பாபா. அமெரிக்காவில் உள்ள டாக்டர்க்கு (சாயி பக்தன் அவர்) வருத்தத்துக்கு பாபா அங்கே போனவர்களிடம் விபூதி சொல்லி கொடுத்து விட்டார். விபூதியை பூசியவுடன் டாக்டர்க்கு நோய் எல்லாம் மாறிவிட்டது. பாபா சொல்கிறார் எல்லோர் மக்களின் இதயத்திலும் தான் இருப்பதாக கூறுகிறார். ஆனால் அவர்களின் சந்தோஷம், கோபம், தன்னை தொடாது. தான் ஆனந்தரூபன், பிரேமரூபன் என்கிறார். உலக நாடுகளில் உள்ள மக்கள் கிஸ்ரேரியா நோயால் கூடுதலாக பாதிக்கப்பட்டு உள்ளார்கள். அதனால் வாழ்க்கை சுமை உள்முக எதிரியான

காமம், ஆசை, பகை, வெறுப்பு ஆகியவைகளை எதிர்த்து நிற்க சக்தியை அளிக்க வேண்டும் என்கிறார் பாபா.

பாபாவின் நல்ல பக்தனுக்கு கடைசிநேரம் நோய்வாய்ப் பட்டு இருக்கும் நேரம் பாபா போய் தரிசனம் கொடுத்தார் அதன் பின் அவர் இறந்தார். எங்கள் கடைசி காலத்தை பாபா வின் நினைவுடன் இருக்க வேண்டும். அப்பொழுது மனம் அமைதி, சாந்தம், பெற்றதாக இருக்கும். பஜனை நடக்கும் பொழுதும், பாபாவின் பிரணவ மந்திரம் சொல்லும் பொழுதும், மரணம் சம்பவித்தால் அந்த நேரம் எங்களுக்கு அமிர்தம் கிட்டும். பாபா வந்து தரிசனமும் கொடுப்பார். சிலருக்கு நெற்றியில் விபூதி பூச்சு தெரியும். இப்படி உயிர் உடலை விட்டு போகும் நேரம் பாபாவின் தரிசனம் எத்தனை, எத்தனை எல்லையே இல்லை.

பழங்காலத்தில் தான் அற்புதங்கள் புரியும் சித்தர்களை படித்திருக்கிறோம். ஆனால் நாங்கள் வாழும் காலத்தில் பாபாவை காண நாங்கள் கொடுத்து வைத்தவர்கள் ஆவோம். இப்படி காணுவோம் என்று கனவு கூட காணவில்லை என்று ஒரு பெரியவர் சொன்னார். பாபா வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு ஏற்ற மாதிரி நீதிக்கதைகள், பண்பாடுகளை விளக்குவார். மனிதனுடைய இதயத்தில் இருந்து வரும் வெறுப்பை போக்க தியானத்தின் மூலம் இருளில் இருந்து ஒளியை பெறும் படை ஒன்றை திரட்டலாம். (சரியான உண்மை) பாபா அமெரிக்காவில் இருந்து போன நல்ல பக்தன் ஒருவருக்கு அபயம் அளித்தார். என்னவென்றால் உதவி தேவைப்படும் பொழுது தன்னை கூப்பிடச் சொல்லி பாபா உடனே வருவேன் என்று சொன்னார். பாபா சொல்லும் பொழுது அவருக்கு ஒரு ஒளிக்கதிர் உடலில் வந்தது போல இருந்தது என்றார். அந்த சந்தோஷத்துடன் தனது வீடு திரும்பினார் என்றார்.

தியானமும், யோகமும் துன்புறும் மக்களுக்கு சிறந்த சிகிச்சை முறையாகும். இறைவன் எங்கள் இதயத்தின் உள்ளில் இருக்கும் அசையாத ஒளி கிரணம் என்று வேத புத்தகங்கள் அறிவிக்கின்றன. சூரியனைக் கண்ட தாமரை மலர்வது போல எங்களுக்கு புட்ட பத்தி போனால் எங்கள் துன்பங்கள் எல்லாம் போய் விடும். பாபா சொன்னார் நிகழ் காலத்தை பற்றிய கவலை, இறந்த காலத்தை பற்றிய பச்சாத்தாபம், எதிர்காலத்தை பற்றிய ஆகாயக் கோட்டை, இவைகளால் தான் மனிதன் நோய் படுகிறான். இதை சமாளிக்க தைரியம் அற்றவன் ஆகிறான் மனிதன். ஏழைகளை ஏழைகள் என்று சொல்லக் கூடாது. அவர்கள் மனதளவில் செல்வந்தர்கள் என்று பாபா சொல்வார். மக்கள் பாபா போல மனத்தால் மாறி பேர் ஆனந்தம் அடையும் போது தான் தனது பிறந்த நாள் அது ஆகும். தன்னை நினைத்து வணங்கி விட்டு கொண்டாடச் சொன்னார் பாபா.

## சத்தியம், சிவம், சுந்தரம்,
## 4 பாகமும் இத்துடன் முடிவுற்றது.
## 5ம் பாகம் தொடங்குகிறது.

பாபாவின் கருணை எங்களுக்கு உடல் நிலையைச் சீராக்குகிறது. சோர்வடைந்தவர்களை உற்சாகப்படுத்துகிறது. எங்கள் சிறு பணியையும் புனிதப்படுத்துகிறது. உயர்ந்த எண்ணங் களை செழித்து வளரச் செய்கிறது. நோக்கத்தை விஷாலப்படுத்து கிறது. இறை வழியை நமக்கு விளக்கிக் காட்டுகிறது. பாபா தன்னை வெறுப்பவர்களை கூட தன்னுடையவர்களே என்று சொல்கிறார். மற்றவர்களை குறை சொன்னால் அவர்களில் பாபா இருப்பதால் தன்னை அது தாக்குகிறது என்கிறார் பாபா. தன்னை அருகில் வந்து சோதித்து உணர்ந்து தெளிந்த பிறகே தன்னை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று பாபா சொல்கிறார்.

## 5ம் பாகம் சத்தியம் சிவம் சுந்தரம்

பாபா அற்புதங்களை பக்தர்களுக்கு காட்டுவது தனது பெருமையை காட்ட இல்லை. எங்களை தன்னிடம் நெருங்கி வர செய்யவே என்றும் எங்களுடைய இதயங்களை தன்னுடன் சேர்த்துக் கட்ட உள்ள இலட்சியம் என்றும் கூறுகிறார். பாபா சொல்கிறார் நாங்கள் முற்பிறவியில் செய்த புண்ணியத்தின் பலன் தான் தனது அவதாரத்தை நாங்கள் காண கிடைத்தது. தேவர் களுக்கே கிடைக்க நிறைய காலம் கஷ்டப்பட்டனர். ஒரு நிமிடம் கூட தவறாமல் பாபாவின் ஆனந்தத்தை பெற முயற்சி செய்யுங்கள். மகா விஷ்னுவே பாபாவின் தலைவராக வந்துள்ளார். உலகத்தில் உள்ள எல்லா சமய தெய்வங்களின் வடிவமே சத்திய சாயி பாபா என்று பாபாவே சொன்னார். பாபாவை எங்கள் இதயத்தில் நம்பிக் கையுடன் வைத்தால் உண்மை தன்மையின் தரிசனத்தை நாங்கள் பெறலாம். சத்தியம், சிவம், சுந்தரம் என்பது பாபாவே ஆகும். கடவுள் கீழ் இறங்குவதற்கு காரணம் மனிதன் மேல் ஏற வேண்டும் என்பதற்காகும். பாபா சொல்கிறார் தான் கடல் என்றும், நாங்கள் அலை என்றும் நானே நீ, நீயே நான் என்றும் சொல்கின்றார். அலை வந்து தனது அகங்காரத்தை அடக்கினால் தான் கடல் யார் என்று அறிய முடியும். அதே போல எங்கள் அகங்காரத்தை நாங்கள் அடக்கினால் தான் கடவுளை நாங்கள் உணர முடியும்.

பாபாவை நம்பிக்கையுடன் கை விடாமல் கடவுளை பற்றிக் கொள் அப்பொழுது தான் சம்ஷாரக் கடலை எளிதில் கடக்க முடியும். மனிதர்களுக்கு முன் உதாரணங்களுக்கும், இலட்சியங் களுக்கும், கற்க வேண்டிய அனைத்து அம்ஷங்களையும் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக உருவம் கடந்த மனித வடிவில் அவதாரமாக பாபா வந்து மனிதர்களுடனும், மனித தன்மை யுடன் பழகி தனது ஒட்டுறவை உணர வேண்டும். அதோடு

பாபாவின் உயரத்துக்கு செல்லும் பொழுது சமுதாயமும் அத்தகைய உயரத்தை அடைய வேண்டும் என்பதே அவதாரத் தின் நோக்கம் ஆகும். பாபாவிடம் முழு சரண் அடையுங்கள். அப்பொழுது ஒரு மாயையும் எங்களுக்கு துன்பம் தராது. சரண கதியை வளர்த்துக் கொள் என்றார். அகங்காரத்தை நாங்கள் விட்டால் தான் நாங்கள் பாபாவிடம் சரணடைய முடியும். பாபாவின் அருளால் தான் எங்கள் அகங்காரத்தை விட முடியும். அவரது கருணையை நம்புவதே சாலச் சிறந்தது.

பாபா சொல்கிறார் எங்கள் மனம் கரையாத வரை இறைவன் நாமத்தை சொல்லிக் கொண்டு இருந்தால் அள்ள அள்ளக் குறையாத ஆனந்தத்தினை நாங்கள் சாயி பாபா அனுபவிப்பது போல அனுபவிக்கலாம் என்று பாபா சொல்கிறார். நேர்மையான மனிதர்களுக்கு பாபா எப்போதும் உதவி செய்ய காத்து இருக்கிறார். பாபா பிறந்து ஒன்பது மாதம் வரையில் அழவில்லை. 9 மாதத்தில் நல்ல குளிர்மையான ஒளி வட்டம் தெரிந்தது. எங்கள் மாயையை நாங்கள் விலக்கினால் தான் தெய்வ தன்மையை நாங்கள் காண முடியும் எங்கள் பலவீனங்களை எல்லாம் பாபா அறிவார். நாங்கள் இடைவிடாது பாபாவை பிரார்த்திக்க வேண்டும். பாபாவின் (செவிலி தாய்) சுப்பம்மா நினைவாக (வளர்ப்பு தாய்) 60 வீடுகள் பாபாவால் ஏழைகளுக்கு திறக்கப்பட்டது. நன்றி உணர்வை காட்டுவதற்கு பாபா இப்படி செய்தார். மகாத்மா காந்தி போல ஒரு பெரியவர் ஆன்மகீவாதி வெள்ளையன் சத்திய சாயி பாபாவை சிறு வயதில் இருக்கும் பொழுது தூக்கி கொஞ்சி ஆனந்தம் அடைந்தார். அவருக்கு அப்பொழுதே கடவுள் போல் தெரிந்து உள்ளது பாபா. வெள்ளையன் பைத்தியம் போல நடிக்கிறான். பாபாவை தூக்கி விடுவார்கள் என்று பிள்ளையை மறைத்து வைத்தார்கள் பெற்றோர்.

பாபாவை நம்பி எங்கள் வாழ்க்கையை அவரிடம் ஒப்படைத்தால் பாபா அன்னம், அமிர்தத்தை எங்களுக்கு அளிப்பார். இது உலகம் முழுக்க உள்ள பக்தர்கள் உணர்ந்தார்கள். கடவுளிடம் நம்பிக்கை இல்லாதவர்கள் தம்மை தாமே அழித்து கொள்கிறார்கள். பாபாவிடம் நம்பிக்கை உள்ளவர்களுக்கு மேடு, பள்ளம், வரத்தான் செய்யும். ஆனால் அவர்களுக்கு கடைசியில் வெற்றி தான் அழிவு இல்லை. சத்ய சாயி பாபாவின் பாடசாலை உற்ற சிநேகிதர்கள் 2 பேர் ஆகும். சத்யா பாடசாலை விட்டு போனதும் ஒரு நண்பன் கவலையில் கிணற்றில் விழுந்து இறந்தார். மற்ற நண்பன் பைத்தியம் பிடித்து சத்யா, சத்யா என்று சொன்னபடி கண்ணை மூடியபடி இருந்தார். பின் அவர்களின் பெற்றோர் சத்யாவை தேடி பிடித்து வந்து குரல் கொடுக்க பாபாவை விளித்து பார்த்து விட்டு பின் திரும்ப நிரந்தரமாக கண்ணை மூடிக் கொண்டார் அவருடைய நண்பன்.

பின் பாபா இவர்கள் இருவரையும் 2 நாய் குட்டிகளாக பிறக்க வைத்து புட்ட பத்தியில் பாபாவுடன் இருக்கிறார்கள். ஒன்று தலைமாட்டிலும், ஒன்று கால் மாட்டிலும் படுத்துக் கொண்டு இருக்கும். நாய்களின் பெயர் ஜில், ஜாக் ஆகும். 18ம் எண் தெய்வ தன்மை உள்ள எண் என்கிறார் பாபா. சுவாமி காருண்யா என்றவர் பாபாவுடன் இருந்து அவரின் அற்புதங்களை அறிந்தவர். அவர் சொன்னார் இது கலியுகம் இல்லை. சத்திய யுகம் என்று. பாபா எங்களுடன் இருப்பதால் ஆகும். பாபா இயற்கையான புல்வெளி, அப்படியானதை தாவரங்கள், விலங்குகளை நன்றாக இரசிப்பார். அவையுடன் பாசமும், நேசமுமாக இருப்பார். பாபாவை நேரடி யாக பார்த்தவர்கள் இறைவனே தந்தை என்று உணர்ந்தார்கள்.

கெட்டதுக்கும், நல்லதுக்கும் ஒரு நேரம் முடிவு வரும். ஆனால் நல்லதுக்கு சீக்கிரமாக முடிவு வரும். கெட்டதுக்கு இழுத்து, இழுத்து முடிவு வரும். பாபா எல்லா இடத்திலும், எல்லா நேரங்

களிலும் எங்களுடனே இருப்பார் என்று சொன்னார். பாபா விடம் போகிறவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு (திருப்பு முனை) நல்ல மாற்றம் வரும். பெரிய வருத்தமாக இவர் இருந்ததால் பாபாவை மனத்தால் நினைத்து பாபாவிடம் போய் வந்த பிறகு அவர் வருத்தம் நல்ல சுகமாகி விட்டது. அவர் 30 வருடத்திற்கு பின் சொல்கிறார்கள். அதன் பின் தாங்கள் வருடத்திற்கு 2 தரம் பாபாவிடம் செல்வது என்று கூறினார். குருபூர்ணிமா அன்றும், Birthday அன்றும் செல்வது என்றும் கூறினார்கள். பாபாவின் தொடர்பால் தங்களுக்கு வாழ்க்கை யில் உயர்மாற்றம் அடைந்ததாக சொன்னார்கள். பாபாவை போய் பிரசாந்தி நிலையத்தில் தரிசித்த பின் எங்களுக்கு தளர்ந்த மனதை சுறுசுறுப்பு ஆக்குகின்றது. எங்கள் வாழ்க்கை யில் வரும் பிரச்சினையையும். சவால்களையும் சந்தித்து சமாளிப்பதற்கு வலிமையை தருகின்றது.

புதிய உலகம் என்பது ஒரு மனிதன் துன்பத்தை இன்னொரு மனிதன் மேல் சுமத்தாமல் இருப்பதாகும். பாபா வினால் கல்வியை பற்றி எழுதப்பட்ட நூல் வித்யா வாகினியாகும். பாபாவுடைய சொத்து அவருடைய பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்கள் ஆவர். பாபாவின் பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்கள் சக மனிதர்களிடம் கருணையையும், இறைவனிடம் பக்தியையும் கொண்டு உள்ள புனித பாதையையும் பின்பற்றினர். கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், ஆனால் பொறுமையும் திடநம்பிக்கையும், வளர்த்துக் கொண்டு நிறை வேறும் தருணத்துக்காக காத்து இருக்க வேண்டும் என்று பாபா கூறுகிறார். பொறுமை இன்மை மனதளர்ச்சிக்கும், நிராசைக்கும் தான் இட்டு செல்லும். பாபா ஒரு பக்தனுக்கு அன்பு செலுத் தாமல் விட்டால் அது பெரும் அன்பு செலுத்துவது போல் தான் கணிக்கப்படும். பாபாவின் சங்கற்பம் இல்லாமல் விருப்பம் இல்லாமல் நாங்கள் பாபாவிடம் போக முடியாது.

பாபாவின் வாழ்க்கையில் – பகுதி நேரத்தை மாணவர் களுக்கே செலவிட்டார். பாபாவின் வற்றாத சக்தி அவரது அள வற்ற அன்பு ஆகும். மாணவர்களின் ஆளுமை தன்மையை செதுக்கி சீர் செய்ய பாபாவே சிறந்தவர் ஆவார். பாபாவின் உண்மையான உருவம் பிரம்மா, விஸ்னு, மகேஸ்வரர் 3 முகமும் உள்ளதாக தோன்றி தான் தத்தாத்ரேயாவர் என்று சொன்னார். பாபா சொல் கிறபடி நடக்க வேண்டும். எங்கள் வாழ்க்கை விடயங்களில் மாறக் கூடாது. மாறினால் அதில் கஸ்டம் இருக்கும். எங்கள் நன்மைக்கு தான் அவர் சொல்வது ஆகும். மாணவர்களின் முன்னேற்றம் வெற்றியின் உயரத்துக்கு எல்லாவற்றுக்கு காரணம் வராது. ஆசிரியர்கள் தான் என்று பாபா சொல்கிறார். என்ன அற்புதங்கள் செய்த பின்னும் பாபா எல்லாமே அறிந்தவர். ஆனால் எல்லாம் அறி யாதவர் போல அவர் முகம் தெரியும். பாபாவுடன் தினமும் செல்லும் பக்தன் ஒருவர் சொன்ன கவிதை இது: "பிரபு முன்னே செல்லுங்கள், நான் பின்னே வருகின்றேன், சத்தியம் தவறாமல் பற்று மாறாமல் கடைசி மூச்சு வரை பின் தொடர்ந்து வருவேன்." ஒரு பக்தன் வெறுத்து வாழ்க்கையில், மனம் நொந்து நடு கடலில் கப்பல் தத்தளித்தது போல தத்தளித்துக் கொண்டு இருக்கை யில் அப்பொழுது பெருங் காற்று போல பகவான் மனதுக்கு பெரிய ஆறுதலை தந்தார். மனதில் குடி கொண்டுள்ள வெறுப்பு, சந்தேகம், அவநம்பிக்கை ஆகியவைகளை நீக்கினார்.

பக்தியும், சிரத்தையும் வாழ்க்கையில் முக்கியமான செல்வங்கள் இவையை கொண்டு எல்லா தடையையும் நீக்கலாம், வெல்லலாம் என்றார் பாபா. ஆசிரியர்கள் மாணவர்களை பிரேம புத்திரராக பாவிக்க வேண்டும். பாபா அன்பும், பண்பும், கொண்டவர் அதோடு தீவிர கண்டிப்பானவர் என்றும் மாணவர் கள் கருதினர். பாபாவை கும்பிடும் பொழுது, பஜனை பாடும் பொழுது பக்தியுடன் செய்தால், அப்பொழுது பாபா படத்தில்

இருந்து கீழே பூ விழும். அது பாபா அருள்பாலித்ததற்கு சரியாகும். ஆன்மீக அறிவு, பொது அறிவு இல்லாதவர்களுக்கு புத்தக அறிவு இருந்தும் பிரயோசனம் இல்லை. உண்மை அறிவு, பணிவு, பொறுமை, இரக்கம் இல்லாமல் படித்த பட்டம் பெற்றவர்கள் இருந்தால் அது வெறும் தலைசுமையே என்கிறார். படித்தவர்களுக்கு அற்ப புத்தி இருந்தால் அவர்கள் சரஸ்வதி தேவியை அவமரியாதை செய்வதாகும்.

ஆசிரியர்கள் முன் உதாரணமாக இருந்தால் தான் மாணவர்களும் அவர்களை பார்த்து நடப்பார்கள். பெண் தான் கிரகலட்சுமி. அவள் சமுதாயத்தில் உயர்ந்த லட்சியங்களுக்கு காவல் தேவதை ஆகும். அரை குறை உடுப்பும், அரை குறை சிகை அலங்காரமும் உயர்ந்த கல்வியின் சின்னங்கள் என்று கருதுவது மடமை ஆகும். ஒருமுறையும் பிரச்சினைகளுக்கு மனம் சஞ்சலப்படக் கூடாது. அனைத்தையும் தான் பார்த்து கொள்கின்றேன். எல்லாம் காலப்போக்கில் நல்லதாகவே முடியும். ஒரு ஆசிரியர் பாபாவிடம் கேட்டார் தாங்கள் ஆன்மீக பாதையில் முன்னேறி இலட்சிய பாதையை எப்படி அடைவது என்றார். பாபா சொன்னார் மாணவர்களை நல்ல உயர்ந்த வல்லமை மனிதர்களாக மாற்றுங்கள். அதுவே போதும் என்றார். உங்கள் வாழ்க்கையின் நிறைவினை சந்தேகம் இல்லாமல் பெறுவீர்கள். வேறு எதுவும் செய்ய வேண்டாம். பாபாவின் பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் சேவை செய்வதே பெரிய ஒரு சிறப்பான வெகுமதி. அதுவே விண்ணுலக அரசுக்கு திறவுகோல் ஆகும்.

பாபாவின் அன்பும், அற்புதமும் தான் வாழ்க்கையில் வரும் மேடு பள்ளங்களை மனங்கலங்காமல் இருக்க செய்கிறது. அல்லா என்ற முஸ்லீம் சொல்லிய கருத்து (கடவுள்) பரமேஸ்வரன் ஆகும். முஸ்லீம் ஆட்களின் நிறம் பச்சை சின்னம் பிறை, நடசத்திரம் ஒரு முஸ்லீம் கேட்க பாபா சொன்னார். ஒரு மனிதர் சிறையில்

இருக்கும் பொழுது ஒரு சாயி பக்தர் Orange பிரசாதமாக பயனை முடிய கொடுத்தார். அவர் Orange னை வாங்கி பக்தனுக்கே தலையில் எறிந்தார். பக்தன் பாபாவை வேண்டினார். இவர் பக்தனாக மாறி தன் வீட்டிற்கு வந்து 1 ஊரி கோப்பி குடிக்க வேண்டும் என்று அதே போல பாபா செய்தார். அதன் பின் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்பட்டது. பாபா அவதார மானவர் எங்களுக்கு அருகில் வந்தால் எங்கள் உடம்பில் நல்ல வித்தியாசம் தெரியும். எங்கள் உயிர் அணுக்களில் நல்ல அதிர்வு களை காணலாம். எனக்கும் இரண்டு தரம் நடந்தது. பாபாவை முதல், ஒரு சாயி பக்தன் பாபாவை கனவு கண்ட கதை சொன்ன பொழுது தேகம் எல்லாம் புல்லரித்தது. புத்தகத்திலும் அப்படியே உள்ளது.

பாபாவின் அருள் இருந்தால் எந்த நவக்கிரகத்தாலும் தீங்கு ஒன்றும் செய்ய முடியாது. வாழ்க்கையில் வரும் ஏற்ற தாழ்வு நேரம் நாங்கள் பாபாவின் பாதங்களை மனத்தால் இறுக கட்டி பிடிக்க எல்லாம் போய் விடும். மனதுக்கு ஆறுதல் ஆகும். ஒரு பக்தன் கஸ்டம் வந்ததும் பாபாவை மறந்தான். பாபா போய் சொன்னார் இரவும், பகலும் போல இன்பமும், துன்பமும் மாறி, மாறி வரும். ஆனால் கடவுள் ஒருவரே நிரந்தரமானவர் அதை மறக்கக் கூடாது என்று பாபா சொன்னார். மனிதர் விடும் பிழை களை திருத்தி நடந்தால் பாபா அதை மன்னித்துக் கொள்வார். பாபாவின் சிரிப்பு வசீகரமான சிரிப்பு ஆகும். ஒரு பெண் பாபாவை நினைத்து பிரார்த்தனை செய்து கொண்டு சமைத்தார். மகனுடைய படிப்பு விடயமாக பாபாவை நினைத்தார். பாபா அவர் முன்னால் வந்து மகனுக்கு எல்லாம் சரிவரும் என்றார். பாபாவை கண்டதும் அவளுக்கு உடல் நடுங்கியது என்றார். அவருக்கு பாபா கடவுள் என்று தெரியாது. பின் அவர் படங்களை தேடி எடுத்தார். சரியான வீரனாக மகன் வந்தார். அதன் பின்பு தான்

வந்தவர் கடவுள் பாபா என்று அறிந்தார்.

படுக்கும் பொழுதும், எழும்பும் பொழுதும் பாபாவை வணங்கிவிட்டு எழும்ப வேண்டும். பாபா வந்து வீட்டுக்கு காட்சி அளித்த பின் சரியான பெரிய இடத்திற்கு முன்னேறினான். ஒரு பக்தன் சொன்னார். பணிவு தான் உயர் நிலைக்கு இன்றி அமையாத அம்சம் என்கிறார் பாபா. எவ்வித நோய் ஏற்பட்டாலும் பாபாவை நினைத்து பாபாவின் விபூதியை பூசினால் (மருந்தை விட) வருத்தம் சுகம் வரும். நல்ல ஒரு பக்தன் சொன்னார் நாங்கள் இறைவன் பாபாவின் தெய்வ தத்துவத்தை பெற விரும் பினால் அவரின் பஜனை பாடல்களை செவிமடுத்து கேட்க வேண்டும் என்கிறார். எங்கள் எல்லா பிரச்சினையையும் பாபா விடம் ஒப்படைத்து விட்டு பாபாவின் நாமத்தை நாங்கள் சொல்ல வேண்டும். பாபா எங்களுக்கு தேவையான எல்லாம் செய்வார். பகவானின் மௌனத்தை அறியாதவர்கள் அவரின் சொற் களின் பொருளை அறிய மாட்டார்கள். பிரார்த்தனையின் போது மனிதன் தன்னை மறந்து இருக்க வேண்டும். பக்தியில் தோய்த்த இசையானது மோட்சத்துக்கானவழி என்கிறார் மகாத்மாகாந்தி.

மனிதர்களுக்கு கஷ்டத்தை கடவுள் ஏற்படுத்துவது தன் பக்கம் எங்களை இழுக்க என்று இந்தியாவில் ஒரு கதை உண்டு. பாபாவின் பார்வை எங்கள் மேல் விழும் போது வரும் ஆனந்தமே பெரிய அற்புதம் என்றார் பாட்டுக்கார சுப்புலட்சுமி. பாபாவின் சொற்கள் அனைத்தும் சத்திய வாக்குகள், தெய்வ வாக்குகள் என்றார். சுப்புலட்சுமி விரும்பியதை மனதில் நினைக்க அதனை முதலே பாபா நிறைவேற்றி விடுவார் என்று சொன்னார். மனிதன் ஆன்மீக லட்சியத்தை தேடி போகும் பொழுது தான் முழுமையான மகிழ்ச்சி, இசைவு, போன்ற இலட்சியத்தை அடைய முடியும். பாபா எங்களை முழுமையான ஆன்மீக கொள்கைகளை தர இருந்தாலும் உலக இன்பங்களை புறக்கணிக்கவில்லை.

பாபாவின் மருத்துவ மனையில் முக்கிய மருந்து அவருடைய அருளே ஆகும். பாபா எங்களின் கண்ணுக்கு தெரியாமல் மருத்துவ மனையில் அருள்பாலிப்பார்.

பாபாவின் திடநம்பிக்கையால் தீராத நோய் எல்லாம் தீர்த்து வைப்பார். தெய்வ அருளே மருந்துகளை விட வலிமை யானது. எங்கள் அன்பை உள்மனத்துடன் பாபாவிடம் செலுத்தும் போது அவரும் தன் அன்பை எங்களில் செலுத்தும் போது நோய் குணமாகும். உண்மையான அன்பை பாபாவிடம் செலுத்தா விட்டால் நோய் குணமாகாது. எங்கள் கர்மா படியா? எங்களுக்கு எல்லாம் செய்கிறீர்கள் என்று பாபாவை கேட்டால்; இல்லை எங்கள் இதயம் தூயதாக இருந்து சுவாமியின் அறிவுரைப்படி வாழ்ந்து வந்தால் சுவாமியின் அருள் நிச்சயமாக கிடைக்கும்;. பாபா ஒரு பக்தனுக்கு கனவில் வந்து அறுவை சிகிச்சை செய்தார். வருத்தம் குணமடைந்தது. நேர்மையான பிரார்த்தனை மூலம் எளிதாகப் பெறவல்லது. தெய்வ அருளின் துணையை நாடாமல் வெறும் மருத்துவ முயற்சி பலனற்றது. என்பதை அறிவுறுத்தவே பகவான் மருத்துவ மனையை ஸ்தாபித்தார்.

உடல் ரீதியான நோய்க்கும், மனரீதியான நோய்க்கும் மருந்தாக நற்பண்புகளை வளர்க்கச் சொல்லி பாபா கூறுகிறார். உலகியல் வாழ்க்கையும், ஆன்மீக வாழ்க்கையும் இரு தராசின் தட்டுக்கள் போன்றது. ஆன்மீக கொள்கைகள் இருந்தால் பொறுமை, தாராள மனோ பாவம், சகிப்பு தன்மை, நல்லது செய்யும் தன்மை, பிறர்க்கு உதவி செய்யும் உற்சாக உணர்வும் கிடைக்கப் பெறும். இந்த குணநலன்கள் உடலையும், மனதையும் வலுப்படுத்துகின்றன. மருந்து இடம் நம்பிக்கையை காட்டுவதை விட கடவுளிடம் அன்பு, நம்பிக்கை வைத்தால் நோய் குண மாகும் என பாபா கூறினார். எந்த நோய்க்கும் சிறந்த மருந்து

இறைவனின் அருளை சார்ந்து இருத்தல் ஆகும். இறைவன் நாமத்தை விட மேலான மருந்து வேறு ஒன்றும் இல்லை ஆகும்.

அறுவை சிகிச்சை செய்வதும், அழுக்கு துணியை தோய்ப்பதும் சமமான வேலையே. வேலையை பிரித்துப் பார்ப்பது அதாவது நல்லவேலை, கூடாதவேலை என்று பார்ப்பது அற்பமான செயல் ஆகும் என்கிறார். பகவானுக்கு அர்ப்பணமாக செய்யும் எந்த வேலையும் செய்பவனை கர்மயோகியாக உயர்த்துகிறது. அப்படியானவர்க்கு தெய்வ அருளே உயிர் மூச்சு ஆகும். நான் தான் செய்தேன் என்று நினைக்க கூடாது. எல்லாம் பாபா தான் செய்தது என்று நினைக்க வேண்டும். ஒன்றை செய்து விட்டு பலனை எதிர்பார்க்கக் கூடாது. அப்படி இருந்தால் அது இறைவனிடம் ஒன்றிணையாது. எனது இதயமே இறைவனின் கோயில் ஆகும்.

முதலாவது இல்லம் புட்டபத்தி. இரண்டாவது இல்லம் பெங்களூர் பிருந்தாவனமாக இருந்தார் பாபா. உலகத்திலே ஆன்மீக பொக்கிஷமுள்ள நாடு முதலில் இந்தியா ஆகும். பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமைகளில் இருந்து தவறக் கூடாது. இறைவனை மறக்கக் கூடாது. 1000 தந்தை ஒரு தாய்க்கு சரி ஆகும். நாங்கள் இறைவனிடம் சிறு பக்தி பூண்டாலும் எங்களை பேர் அழிவில் இருந்து காப்பாற்றும். பிரசாந்தி நிலையம் பாபா வின் அலுவலகமும், பிருந்தாவனம் பாபாவின் இல்லமும் ஆகும். பிரசாந்தி நிலையத்தில் சிவன் பிருந்தாவனத்தில் கிருஷ்ணனாக இருக்கிறார். பாபாவிடம் எங்களுக்காக ஒன்றும் கேட்கக் கூடாது. நாங்கள் செய்வதை சரியாக செய்தால் எங்களுக்காக எல்லாம் செய்வார். நாங்கள் கேட்காமலே எங்கள் தேவைக்கு மேலாக செய்வார்.

சாயிராம், சாயிராம், என்று அன்பாக நாங்கள் கூறினால் பாபாவுக்கு அது கேட்கும். எந்த கஷ்ட நேரத்திலோ, சந்தோஷ [redacted]

ஆகும். பேராசை, அகந்தை, வெறுப்பு, கோபம், ஆகிய இவைகளுக்கு அரு மருந்தாக அன்பு, சேவை, கலங்காத அமைதி என்று பாபாவின் நற்செய்தி என்று பாபா சொல்கிறார். பாபா சொல்கிறார் தனக்கு சுயநலமற்ற சேவையே மகிழ்ச்சி தருகிறது என்கிறார். சேவை சிறந்த ஒப்பற்ற சாதனைப்பயிற்சியாகும். ஆன்மீக கொள்கைகளில் சேவை தான் உயர்ந்தது. சேவை செய்யாத வாழ்க்கை இருளில் மூழ்கிய கோயில்களுக்கு சரியாகும். கெட்ட ஆவிகள் வசிக்கிற இடமே அப்படியான மனிதர்கள் ஆகும். மற்றவைக்கு உபதேசிப்பதை நாங்கள் கடைப்பிடித்த பிறகு தான் மற்றவைக்கு சொல்ல வேண்டும் என பாபா சொல்கிறார் அப்படி செய்யாவிடில் இது ஏமாற்று வித்தையாகும். ஆன்மீக பற்று இருந்தால் எங்களுக்கு வரும் பயங்கள் எங்களை விட்டு போய் விடும்.

பாபாவுக்கு எமது வாழ்க்கை திறந்த புத்தகம் ஆகும். பாபா எங்கள் மனதில் இருக்கும் வரை அவரது கையில் நாங்கள் இருக்கலாம். அவரை மறந்தால் நாங்கள் அவரை விட்டு விலகி விடுவோம். எங்களுக்கு கீழ் உள்ளவர்களுக்கும், ஏழைகளுக்கும் உதவி செய்ய ஆயத்தமாக இருந்து செய்ய வேண்டும். நதி, நீரோட்டம் இல்லாத வாழ்க்கை போல எங்கள் வாழ்க்கை ஆகும். ஆனால் பாபா தான் நிரந்தரமானவர். வாழ்க்கையின் உயர்ந்த இலட்சியம் இறைவனை அடைதல் ஆகும். இது மட்டும் தான் நிரந்தர ஆனந்தத்தை தர வல்லது. அனைத்து துன்பம், இன்பங்களை தீர்ப்பதற்காக இறைவனை அடைதல் ஆகும். எங்கள் மனம் கருவண்டு போன்றது. அது கடினமான மனத்தைக் கூட துளைத்து விடுகிறது என்று பாபா கூறுகிறார். அதனால் துள்ளிக் குதிக்கும் மனதை அமைதிப் படுத்த இறைவனிடம் பக்தி கொண்டால் மட்டுமே முடியும். மனதை கட்டுப் படுத்த இறைவனிடம் பதிய வைக்கவும்.

என்ன வேலையானாலும் கடவுள் தந்தது என்று நம்ப வேண்டும். தன்னலம் அற்ற சேவை செய்வதே எங்களை முத்திக்கு கூட கொண்டு செல்லும். பாபா எங்கள் பதவி, பணம், பொருளுக்கு மதிப்பு தரவில்லை. எங்கள் இதயத்துக்கு தான் மதிப்பு தருகின்றார். நாங்கள் ஒன்றை அடைய வேண்டுமானால் சொந்த முயற்சியும், இறைவன் நம்பிக்கையும் வேண்டும் என்கிறார் பாபா. வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு அம்சத்திலும் தர்மத்தை பின்பற்ற வேண்டும் என்று பாபா கூறுகிறார். இராமன் பாபா போல 14 வயதில் வாழ்க்கையை துறந்தார் என்று பாபா கூறுகிறார். அப்பாவி மிருகங்களை பலியிடுவது அல்ல. எங்களது விலங்கு குணத்தை தான் பலியிட வேண்டும். தாய் நாட்டை நேசித்து அதற்கு சேவை செய்ய வேண்டும். நோயாளிக்கும், வயது முதிர்ந்தவர் களுக்கும் உணவும், அன்பும், தங்கும் இடமும் பராமரிப்பும் கொடு என்கிறார்.

எந்த காரணத்தையிட்டும் வெறுப்பும், பொறாமையும் வளர்த்துக் கொள்ளக் கூடாது. எனது சொந்த தேவையை நிறைவேற்றிக் கொள்ள பிறரை நம்பியிராதே. மனதைக் கட்டுப் படுத்த கடவுளை போற்று, பாவத்தை விலக்கு என்று பாபா கூறுகிறார். இருக்கும் இடம், சூழல் தூய்மையாக இருக்க வேண்டும். குடும்பத்தில் ஒத்திசைவான சூழலை உருவாக்க வேண்டும். சாத்வீக உணவு சிறந்தது. காரம், புளிப்பு, துவர்ப்பு, கசப்பு, மாமிச உணவைத் தவிர்க்க வேண்டும். ஒருபோதும் மது அருந்தக் கூடாது. நல்ல எண்ணங்களை வளர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். நாம் புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். நல்ல சேவைப் பணியை தெரிந்து எடுக்க வேண்டும்.

**சத்தியம், சிவம், சுந்தரம் முடிவுற்றது.**

நாங்கள் சேவை செய்யும் மனிதர்களை தெய்வத்தின் வடிவமாக நினைக்க வேண்டும். ஆன்மீக ஒழுக்கங்களைத் தவறாது பயில வேண்டும். கோபம் வருகின்ற நேரம் அந்த இடத்தை விட்டு வேறு இடம் செல்ல வேண்டும் அல்லது குளிர்ந்த நீர் பருக வேண்டும். அல்லது ஒரு மைல் தூரம் வேகமாக நடந்து செல்ல வேண்டும் அல்லது முகத்தைக் கண்ணாடியில் பார்க்க வேண்டும் அல்லது இறைவனைப் புகழ்ந்து பாட வேண்டும்.

அனைவரையும் நேசி, அனைவருக்கும் தொண்டு செய் இதுவே அனைத்து சாதனங்களின் சாதனையாகும். காயத்திரி மந்திரம் அறிவுத்திறன் தெளிவு பெற வேண்டி ஓதப்படும் ஓர் புனிதமான வேதவாக்கு ஆகும். மனக்கட்டுப்பாட்டுக்கு வழி ராஜ யோகமாகும். இறைவனை வணங்கும் போது மற்றவர்களுக்காக வணங்க வேண்டும். எங்களுக்காக வணங்கக் கூடாது. நல்ல தையே நினைக்க வேண்டும். பரந்த மனப்பான்மை இருக்க வேண்டும் அப்போது நாங்கள் நன்றாக இருப்போம். கடவுளிடம் ஒன்றும் கேட்கக் கூடாது. நமக்கு என்ன வேண்டும் என்பதை அறிந்து அவரே தருவார். எங்களோடு பாபா இருக்கிறார் என்று நினைக்க வேண்டும். சிரித்த முகத்துடன் சந்தோசமாக இருக்க வேண்டும்.

இராம நாமத்தில் ஓம் என்று தினமும் சொல்வது நல்லது. இவ்வாறு சொல்வதனால் மனதிற்கு சுகமும் மனம் அலை பாயாமலும் இருக்கும். சாயிபாபா என்பதன் கருத்து என்ன என்று தந்தை கேட்கச் சொன்ன மறுமொழியானது தெய்வீக அன்னையும் பிதாவும் என்றும் தாய் தன்னலமற்ற அன்பையும், தந்தை என்பது ஞானம், ஒழுக்கக் கட்டுப்பாடு ஆகியவற்றைக் குறிப்பது ஆகும். பாபா அன்பு இயக்க விதி இவற்றைக்

கொண்டே ஆள்கின்றார். முதுக்கு முன் தர்மம் செய். பழைய நினைவுகள் மறந்து போனால் பதட்டமடையாமல் கண்ணை மூடி மனதை அமைதிப்படுத்த வேண்டும். மனம் விட்டுப் பேசினால் ஒற்றுமை வரும் என்று பெரியார் தொலைக்காட்சி யில் சொன்னார். விலகியது நெருங்கும் எனவே கோபமாக இராமல் மனம்விட்டுப் பேச வேண்டும். இறைவனை தொடர்ந்து நினைப்பதனால் மட்டும் தான் மனதைக் கட்டுப்படுத்த முடியும்.

அமைதி மகிழ்ச்சி அடைய விரும்பினால் இறை நாமத்தையே தொடர்ந்து சொல்ல வேண்டும். அப்போது தான் மகிழ்ச்சியாக இருக்கலாம். நன்மையும் தீமையும் ஒரு நாணயத் தின் இரு பக்கங்கள் என்று பாபா கூறுகிறார். பிழைவிட்டால் அதனைத் திருத்தி மீண்டும் பிழை விடாமல் நடக்கச் சொல் கிறார். பெற்றோரின் கவலைக்கு நாம் காரணமாக இருக்கக் கூடாது. உயர்ந்த எண்ணங்களையும் உணர்வுகளையும் வளர்த்துக் கொண்டால் எமது வாழ்வு ஒரு ராஜவீதியாக மாறும். எனது பெற்றோருக்கும் நான் நல்ல பெயரை சம்பாதித்துக் கொடுக்க வேண்டும். ஒருவரின் வாழ்க்கையில் மிக மிக முக்கிய மானது அன்பு ஆகும். எல்லோர் மீதும் அன்பு காட்டி சேவை செய்ய வேண்டும் என்று பாபா கூறுகிறார்.

அன்பை மட்டும் வளர்த்தால் உலகம் முழுக்க எங்கள் கட்டுப் பாட்டிற்குள் வந்து விடும் என்று பாபா கூறுகிறார். எங்களது எண்ணங்கள் தான் நமது சந்தோசத்திற்கும் கவலைக்கும் காரணம் என்கிறார். அதனால் நல்ல எண்ணங்களை நாம் எண்ண வேண்டும். எந்த நேரமும் நமது மனதை அமைதியாகவும் சலனமற்றும் வைத்திருக்க வேண்டும். எது நடந்தாலும் எங்கள் நன்மைக்கு என்றே இருக்க வேண்டும். எங்களுக்கு என்ன நடந்தாலும் இன்ப, துன்பம் அது இறைவனின் பரிசு என நினைக்க வேண்டும் என்று பாபா கூறுகிறார். சந்தேகம் என்பது

மெல்ல மெல்ல கொல்லும் நஞ்சு ஆகும் என்று பாபா கூறுகிறார். அதனால் தேவை இல்லாமல் சந்தேகப் படக் கூடாது. ஒருநாளும் வருந்தக் கூடாது. அது எங்கள் லட்சியம் என்று இருக்க வேண்டும். எங்களை விட்டுக் கொடுத்தாவது மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். எதிரிக்கு கூட துன்பம் கொடுக்கக் கூடாது.

வாழ்க்கையில் மேலே முன்னேற, முன்னேற நாங்கள் செருக்கையும், பொறாமையையும் குறைக்க வேண்டும் என்று பாபா கூறுகிறார். எங்களுக்கு வரும் நன்மை தீமை அனைத்தும் பாபா தந்த பரிசு என்று நினைக்க வேண்டும். இறைவனுக்கு யார் மீது முதலில் விருப்பம் என்று கேட்டால் ஒரு கோரிக்கையும் இல்லாமல் தன்னை யார் வணங்குகிறார்களோ அவர்களை தான் முதலில் விரும்புவார். எந்த ஒரு வேலை செய்யும் பொழுதும் இறைவனின் பணி என நினைத்து செய்ய வேண்டும். வேலையோ, உதவியோ சுயநலம் இல்லாமல் செய்வதே இறைவனுக்கு பிடிக்கும். எங்கள் மன சுத்தத்தை தான் இறைவன் விரும்புகிறார். வெளி சுத்தத்தை கிடையாது.

துன்பத்திலும், இன்பத்திலும் சரி எங்கள் மனம் மாறாமல் இருப்பதையே இறைவன் விரும்புகிறார். எதைப்பற்றியும் கவலைப்படாமல் தெய்வ சிந்தனையில் இருப்பவர்களையே பாபா விரும்புகிறார். எல்லாம் நான் செய்தது என்று நினைக்கக் கூடாது. இறைவனே எல்லாம் செய்தது என்று நினைக்க வேண்டும். இறைவன் எங்கள் இதயத்தில் தான் இருக்கிறார் வேறு இடம் தேடத் தேவையில்லை. மற்றவைக்கு சேவை செய்யும் பொழுது இறைவனுக்கு சேவை செய்வதாக நினைக்க வேண்டும் என்று பாபா கூறுகிறார். பாபாவிடம் போகிறவர்கள் அவரிடம் ஜென்மம், ஜென்மமாக தொடர்பு உள்ளவர்களாகும். அதுதான் தன்னிடம் போக கிடைப்பது என்கிறார். துர்குணங்கள் தான் எங்களை

இறைவனிடம் இருந்து பிரிக்கின்றது. அதனால் நல்ல குணங்களை எடுத்தால் இறைவனை அடைய முடியும் என்கிறார்.

கோபம் என்பது நாயின் குணம் ஆகும். கோபம் வரும் நேரம் நான் (நாய்) இல்லை மனிதன் என்று நினைக்க வேண்டும். அதே மாதிரி (குரங்கின் குணம்) மிருக குணம் எங்களுக்கு வரும். அப்பொழுது நான் மிருகம் இல்லை. மனிதன் என்று நினைக்க வேண்டும். எத்தனையோ செய்த புண்ணியத்தின் பலன் தான் நாங்கள் மனிதப் பிறவி எடுப்பது ஆகும். அதனால் இந்த பிறவியில் செய்யும் நன்மைகளை செய்துவிட வேண்டும் என்கிறார். அது இறைவன் தந்த கொடையாகும் அதை ஒரு நிமிஷமும் வீண் ஆகாமல் சரியான முறையில் பாவிக்க வேண்டும். நல்ல எண்ணங்கள் இருந்தால் எல்லாமே நன்றாக நடக்கும். உள் அன்புடன் பாபாவை போற்றி வழிபடுபவரை பாபா கடைசியில் தேற்றுவார். பாபா ஒரு பக்தனுக்கு சொன்னார் எந்த செயலையும் தாமதமாக்கக் கூடாது. இதை கற்று கொள்ளுங்கள் என்று பாபா சொன்னார். தாயின் அன்பை விட உயர்ந்த அன்பு உலகத்திலே இல்லை என பாபா சொல்கிறார். அன்னையே உண்மையான தெய்வம் ஆகும். அன்னையை அழவிடும் யார்க்கும் மகிழ்ச்சியோ, செல்வமோ இராது என்கிறார் பாபா. தாயின் அன்பை பெற்று விட்டால் உலகத்தில் வேறு ஒன்றுமே தேவையில்லை என்று பாபா கூறுகிறார். உலகின் கொடுமையான பிள்ளைகள் இருக்க முடியும். ஆனால் கொடுமையான தாய் இருக்க முடியாது என்று பாபா கூறுகிறார்.

1000 ஆண்கள் பிரார்த்திப்பதை விட 1 பெண் இறைவனை பிரார்த்திப்பதில் பலன் கூட என்று பாபா கூறுகிறார். காரணம் பெண்கள் மென்மையானவர்கள் ஆகும். தாய்க்கு சேவை செய்தால் எங்களுக்கு இறைவன் உதவி செய்வார். எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும் பாபா எங்களுக்கு உதவி

செய்ய இருக்கிறார். அது தான் பாபாவின் ஆனந்தம் ஆகும். வாழ்க்கையில் தன்னம்பிக்கையை அடையும் பொழுது தன்னம் பிக்கையை விடக் கூடாது. சுயநலமாக இருப்பவர்கள் கடவுளால் வெறுக்கப்படுவர். நாம் செய்யும் நற் செயலுக்கும், தீய செயலுக் கும் பலனை அனுபவிப்போம். ஆபிரகாம் லிங்கனுக்கு தாய் தன்னம்பிக்கையுடன் இருக்க சொன்னார். தாயின் அறிவுரையை கேட்காதவர்கள் வாழ்வில் வெற்றி அடைவதே இல்லை. “தாய் வாழும் தெய்வம்” என்கிறார் பாபா.

தியானம் என்பது கண்ணை மூடிக் கொள்வது இல்லை. மனதை அலை பாயாது சீரான முறையில் பாதுகாப்பதே ஆகும். ஒருவர் உண்மையான வெற்றியை அடைந்திட தன்னம் பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இறைவனின் அருள் இல்லாமல் யாரும் வெற்றி அடைய முடியாது. மனிதருக்கு செய்யும் சேவை மட்டுமே இறைவனுக்கு செய்யும் சேவை ஆகும். நல்ல நட்பு முக்கியமானது. நல்ல குணங்களை வளர்ப்பதற்கு ஆகும். அவதாரங்கள் மாறி மாறி உலகத்தில் வந்து கொண்டே இருக்கிறது. வந்து தம் பணியினை செய்து விட்டு மறை கின்றனர். (உ+ம்:- பாபா, கிருஷ்ணர், புத்தர், யேசு, இராமர்) ஆனால் நிலையான இறைவனையே தியானம் செய்யுமாறு பாபா கூறுகிறார். என்ன தான் துன்பம் வந்தாலும் தியானத்தை விடக் கூடாது. தொடர்ந்து செய்ய வேண்டும்.

அதிக அளவிலான பேச்சு தீயது என்கிறார் பாபா. இறைவன் நாமத்தை தொடர்ந்து சொல்வதே உண்மையான தியாகம் என்கிறார். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். தாயின் அறிவுரையை புறக்கணித்தால் நிச்சயமாக வாழ்வில் பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டும். நம்பிக்கை இருந்தால் ஒரு பெரிய மலையை கூட நகர்த்த முடியும்

என்கிறார் பாபா. எந்த நேரத்திலும் உதவி செய்ய தயாராக இருக்கிறார் பாபா. கடவுளை நிச்சயமாக நம்பி இருந்தால் துன்பத்தில் இருந்து பாதுகாப்பார். இலட்சியத்தை அடையும் வரை துவண்டு போகாமலும், அதில் இருந்து பின் வாங்குவதும் கூடாது. கடும் முயற்சி, மற்றும் பிரார்த்தனை இவ்விரண்டுக்கும் விதியையும் மாற்றும் சக்தி உண்டு. தன்னம்பிக்கை இல்லாமல் உச்சங்களை எட்ட முடியாது. (சொத்து) அது தான் என்கிறார். மனிதர்க்கு செய்யும் சேவை மட்டுமே இறைவனுக்கு செய்யும் சேவை ஆகும்.

பாபாவின் மானச பயரே குரு சரணம் என்ற பாட்டின் கருத்து இறைவனின் பாதங்களை தியானம் செய்வதால் இறைவனிடம் சுகமாக போய் சேரலாம் என்பது ஆகும். பாபாவின் தாய் தான் புட்ட பத்தியில் இருக்கும் படி மன்றாடினார். அதனால் பாபா அங்கே இருக்கிறார். ஒரு நாள் எல்லாம் சாம்பல் ஆகும். என்பதற்கு அடையாளம் தான் பாபா விபூதி எடுத்துக் கொடுப்பது ஆகும். நினைவு சின்னமாக விபூதி விளங்குகிறது.

உன் உணர்வுகள் சரியாக இருந்தால் உனக்கு வெற்றி நிச்சயம் என பாபா சொல்கிறார். நாம் சந்தோசமாக இருந்து கொண்டு அன்பு பாசம் மற்றவர்களுக்கு பொழிய வேண்டும். அதோடு சேவை செய்ய வேண்டும் என்று பாபா சொல்கிறார் அப்போது தான் எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கலாம். தன்னம்பிக்கை இருந்தால் மலையைக் கூட நகர்த்த முடியும். மனதை சீராக வைத்திருந்து மகிழ்ச்சியாக இருக்கச் சொல்கிறார். தாயை மதித்து அவர்களின் அறிவுரையை கேட்டு நடப்பவர்களே சிறந்த மனிதர். அதாவது ஆபிரகாம் லிங்கனுக்குக்கூட தாய் அறிவுரையை கூறி அதனை கேட்டு நடந்ததனால் உயர்ந்த மனிதானக மாறினார்.

நாட்டில் தர்மம் வீழ்ச்சியடையும் போது பாபா, புத்தர், யேசு, கிருஸ்ணர் அப்படியானவர்கள் தான் அவதாரங்கள் பிறக்கின்றது என பகவத் கீதையில் உள்ளது. என்னதான் இடையூறு துயரங்கள் இன்னல்கள் வந்தாலும் விடாமல் தியானம் இருக்க வேண்டும். கடும் முயற்சி பிரார்த்தனைக்கு விதியையும் மாற்றும் சக்தி உண்டு. மனிதனுடைய துன்பங்களுக்குக் காரணம் பேராசையே ஆகும். மற்றவை கூறுவதையிட்டுக் கவலைப் படாதீர்கள் பாபா இருக்கிறார் என்று நினைக்க வேண்டும். நன்மையும் தீமையும் எப்போதும் ஒன்றையொன்று பின்தொடரும். அதாவது மாறி மாறி வரும்.

வாழ்க்கையில் வரும் கஸ்டங்களுக்குப் பிறகு பாபா அனுக்கிரகத்தை தருவார். கஸ்டம் வாழ்க்கையில் வரும் போது உயர்ந்து நிற்க வேண்டும். அது தான் பாபாவுக்கு விருப்பம். இறைவன் உடலுக்கு சக்தி தரும் ஊட்டச்சத்துப் போல இருக்கிறார். மகிழ்ச்சி துன்பங்களைப் போக்கும் மாமருந்தாக இருக்கிறது. ராமநாமத்தைச் சொன்னால் எந்தக் கஸ்டமான காரியமும் சுகமாக முடியும். ராமநாமத்தை விட சிறந்தது எதுவுமில்லை. விவேகானந்தரை தாய் ஆண்பிள்ளைகள் இல்லாமல் சிவபெரு மானை தவமிருந்து பெற்றார். பெண்களுக்கு தன்னலமற்ற குணம் உள்ளதால் பரமாத்மாவிடம் போவதற்கு உரிமையுள்ளது. இறைவனின் திருநாமத்தைச் சொன்னால் சொர்க்கத்திற்குச் செல்ல முடியும்.

தீயோர் செய்யும் பிழைகளை நல்லோர் கேட்டு கோபப்படாமல் தீயோருக்கு நல்லதையே செய்தால் நல்லோருக்கு மோட்சம் கிடைக்கும் தீயோர் கவலையில் வாடி வதங்குவர். நேர்மையான செயல்களில் முக்கியமானது தேவையான நேரத்தில் மற்றவருக்கு உதவி செய்ய வேண்டும். இறைவனை ஒரு நாளும் மறக்க வேண்டாம். உலகை ஒரு

போதும் நினைக்க வேண்டாம். மரணம் குறித்து அஞ்ச வேண்டாம். எங்களுக்கு சந்தோசம் கிடைக்க வேண்டும் என்றால் மற்றவர்களுக்கு அன்பைக் கொடுக்க வேண்டும். இறைவன் எல்லாவற்றையும் எங்களுக்குத் தருகிறார் நாங்கள் அவருக்கு கொடுப்பது அன்பு ஒன்று தான் அதைத்தான் அவர் விரும்புகிறார். பணிவாக இருந்தால் வேலை செய்யும் இடத்தில் எங்களுக்குப் பதவி உயர்வு முன்னேற்றம் வரும். இந்த நாவை அடக்கினால் இந்த உலகத்தையே வென்று விடலாம் என பாபா சொல்கிறார். ஆன்மீக சக்தியை விட மேலான சக்தி வேறு இல்லையாம்.

## பாபாவின் கீதை பேருரைகள் பகவத் கீதை பக்தி யோகம்

எங்கள் கடமையை வடிவாக செய்ய வேண்டும். பின் வயது போக மனச்சாட்சிப்படி நடந்து தர்மத்தை முடிந்த அளவு காப்பாற்றினால் துன்பம், குழப்பம் இருக்காது. அர்ச்சுனனின் பற்றும், பாசமும் கண்ணனால் போதிக்கப்பட்டு உடன் போய் விட்டது. பற்றையும், யோகத்தையும் அழிப்பது முக்தி ஆகும். பகவத் கீதையை வாசியுங்கள். பின் உன்னதமானதை நடைமுறைப் படுத்துங்கள் அதன்பின் கருணையுடன் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். காலத்தை வீணாக்கக் கூடாது. காலம் கடவுள் ஆகும். கடவுளிடம் சரண் அடைபவர்கள் புகலிடமாக இருப்பவர்கள் கடவுளால் காப்பாற்றப்படுவார்கள். உலகம் இறைவனின் திருவுருவம் ஆகும். சொல், செயல், சிந்தனை மூன்றையும் இறைவனிடம் அர்ப்பணிக்க வேண்டும். நாங்கள் எதை செய்தாலும் சொந்த நலனுக்காக செய்யக் கூடாது. இந்த பரந்து விரிந்த இறைவன் எங்கள் இதயத்தில் சிறை போல வந்து இருக்கிறார். இறைவனை எங்கள் இதயத்தில் பூட்டியதால் பூட்டிய பக்தன் தான் பெரியவன் ஆகும். இறைவனை அன்பால், பக்தியால் இதயத்தில் பூட்டி விடவும்.

பகவானையும், பக்தனையும் இணைக்கும் செயல்முறை பக்திமார்க்கம் என அழைக்கப்படுகிறது. ஆத்மா தா்ன் நான். உடல் நான் இல்லை என்று நினைக்க வேண்டும். இறைவனும், நானும் ஒன்று என்று நினைக்க வேண்டும். இறைவனிடம் அன்போடு போனால் அவருடைய அன்பு உங்களுக்கு கிட்டும். இறை வனுடைய மிகச் சுலபமான வழி எங்களுடைய பார்வை, சொல், செயல், அனைத்திலும் இறை நினைவாக இருக்க வேண்டும். நாம் இறைவனை மகிழ்விக்கும் சிறப்பு இயல்பு போற்றுதல், தூற்றுதல், வெப்பம், தட்பம், இலாபம், நஷ்டம், இன்பம், துன்பம், மானம், அவமானம் எல்லாவற்றையும் சம பாகத்துடன் ஏற்க வேண்டும். ஆசைகளை விட்டால் ஆண்டவனை தொட முடியும். நல்லது நினைத்தால் எங்களுக்கு நல்ல பலனே கிடைக்கும். கெட்டது நினைத்தால் எங்களுக்கு கெட்டதே நடக்கும் என்று பாபா கூறுகிறார். மனம் கட்டுக்கடங்காது. தன் இஸ்டப்படியே நடக்கும்.
ஆசைகளை குறைத்தால் இறைவனுக்கு எங்களில் விருப்பம் ஏற்படும். குறைந்த ஆசையுடன் சந்தோஷமாக இருக்கலாம் என்கிறார் பாபா. நாங்கள் செய்வதையே திரும்ப அனுப விப்போம். இறைவன் எங்களுக்கு ஆனந்தத்தை தான் தருகிறார். கஷ்டத்தை தரவில்லை. ஆசைகளை விட்டு சந்தோஷமாக இருக்க சொல்கிறார் பாபா. இறைவன் உருவத்தை நினைத்துக் கொண்டு மனத்தால் கண்ணை மூடிக் கொள்ளுங்கள். அப்பொழுது இறைவனை மனக்கண்ணில் காண முடியும். ஓம் என்ற மந்திரத்தை சொன்னாலே போதும். சகிப்பு தன்மை தான் உண்மையான அழகு ஆகும். இந்த நாட்டில் அமிர்தமான உணர்வென்றால் அன்னையிடம் செலுத்தும் அன்பே ஆகும். கடவுளை உணராதவர்கள் மிருகத்துக்கு ஒப்பானவர்கள் ஆகும். ஆன்மீக ஒழுக்கத்தின் துணை கொண்டு புத்தியை வெளிப் படுத்து என்கிறார் பாபா. இறைவனிடம் ஒன்றும் எதிர்பார்க்காமல் சுயநலமற்ற அன்பே பக்தி ஆகும்.

அன்பை தவிர சக்தி வாய்ந்தது வேறு ஒன்றும் இல்லை என்கிறார் பாபா. சுயநலம் இருப்பதால் மனதில் அமைதி என்பதே கிடைப்பதில்லை மனிதர்க்கு என்று பாபா கூறுகிறார். நாங்கள் மட்டும் உயர்ந்தால் காணாது மற்றவர்களையும் உயர்த்த வேண்டும். சிக்கனம் மனிதனின் பாதுகாப்பு கவசம். குழந்தைகளுக்கு இதை பழக்க வேண்டும். எங்கு அன்பு இருக்கிறதோ அங்கு துன்பம் இல்லை. எனது சொற்களை கொண்டு எனது தரத்தை அறிந்து கொள்ளலாம்.

**பாபா சொல்கிறார்:**

1. சத்தியத்தை பேச வேண்டும்.
2. அன்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
3. நம்பிக்கை உறுதியாக பெருக வேண்டும்.
4. உலகத்துடன் அமைதியை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

இவைகள் மக்களின் முக்கியமான கடமை ஆகும். வேதங்களை ஓதி பிரம்மனை உணர்ந்தவர்கள் தான் பிராமணர்கள் ஆகும். பிறவியிலே அவன் பிராமணனாக வரு வதில்லை. அவன் செய்கையில் தான் பிராமணனாக வருகிறான். தாய் தவறு செய்யலாம். ஆனால் குழந்தைகள் விடயத்தில் தவறு செய்ய மாட்டார். அப்படியான தாயின் அன்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். இறைவன் அருள் அடக்கம் உள்ளவனிடம் மட்டும் தான் வருவார். அகங்காரம் உள்ளவனிடத்தில் வர மாட்டார். இராமர் சீதையிடம் விவாதம் கேட்டார். தாய், தந்தையை விட உலகத்தில் வேறு கடவுள் இல்லை என்றார். என் துயரங்களில் உடன் வந்து உதவுவார்கள். என் எண்ணங்களை அறிவார்கள். என் தொல்லைகளை அகற்றுவார்கள். அதனால் கண்ணுக்கு தெரியும் தாய் தந்தையரை முக்கியம் ஆதரியுங்கள்.

தாயை பூமிக்கு ஒப்பிடுகிறார் பாபா. ஒவ்வொரு செயலுக்கும் உரிய நேரம் வர வேண்டும் என்று பாபா கூறுகிறார். நாங்கள் நல்ல விடயங்களை அனுபவிக்க வேண்டும் என்றால் முதல் மற்றவர்களுக்கு நல்ல விடயங்களை செய்ய வேண்டும். எங்களுக்கு உதவி செய்தவர்களுக்கு உதவி செய்வதை விட எங்களுக்கு தீங்கு இழைத்தவர்களுக்கு உதவி செய்வதே மேல் ஆகும். சுயநலத்தையும், தீய குணங்களையும் அகற்றினால் தான் நாங்கள் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். மனம் அமைதி இல்லாமல் இருந்தால் எங்களை விட்டு துன்பம் அகலாது. உண்மையான இன்பம் என்பது மனதிருப்தியுடன் இருப்பதும், நிலைத்து நிற்கும் அன்புடன் இருப்பது ஆகும். என்ன தடை தாமதம், என்ன கஸ்டம் வந்தாலும் அது இறைவனின் வெகுமதி என் நினைக்க சொல்கிறார். அவை எங்கள் நன்மைக்கே ஆகும்.

எங்களது திறமைகளை இறை அருளில் பயன்படுத்தினால் நல்லது. எங்களை முதலில் பாபா போல அவதார இறைவனை வணங்கச் சொல்கிறார். பின் சிறிது காலம் போக வடிவமற்ற இறைவனை வணங்கலாம் என்கிறார். இறை உருவத்தை நினைத்து இதயத்தில் பதித்தால் தான் உருவமற்றது எங்களிடம் நிரந்தரமாக இருக்கும். இறைவன் இல்லை என்று நினைப்பவர்கள் பாபாவை வணங்கினால் நம்பிக்கை வரும் என்கிறார். உருவம் உள்ள இறைவனுக்கு மல்லிகை, றோசா பூக்களால் அர்ச்சனை செய்கின்றோம். உருவம் இல்லாத இறைவனை இதயத்தில் நினைத்து அகிம்சை, புலனடக்கம், சத்தியம், சகிப்புத்தன்மை, விடாமுயற்சி, அன்பு, கருணை, தர்மம், தியாகம், இப்படியான பூக்களால் வழிபடுகிறோம். இதனால் வருணிக்க முடியாத இன்பத்தை அனுபவிப்போம். உண்மையான தெய்வீக வீட்டுக்கு நுழைவீர்கள்.

உண்மையான பக்தன் பெற்று இருப்பது என்ன என்று கண்ணன் போதிக்கிறார்.

1. மனதில் சாந்தியும், அசைக்க முடியாத உறுதியையும், எப்பொழுதும் மன நிறைவு பெற்று இருக்க வேண்டும்.
2. எப்பொழுதும் கவலை, துன்பம், இதயத்தில் நுழையவோ தொல்லை தரவோ விடக் கூடாது.

எந்த துன்பம் வந்தாலும் கவலைப் படாமல் இறைவன் நினைவாக இருந்தால் எங்களை ஒன்றும் தாக்காது. இறை வனிடம் ஒப்படைத்து விட்டு இருக்கவும். வெறுப்பு, பொறாமை, சினம், பேராசை, முதலியன இருந்தால் பக்திக்கு தடையாக எங்களிடம் குடி கொண்டு உள்ளவை இவை ஆகும். இறைவனை தொடர்ந்து நினைக்கும் சொல் தான் தியானம் ஆகும். தியானத்தை தொடர்ந்து செய்தால் அமைதி, சந்தோசம், அடையலாம்.

இறைவனிடம் எங்கள் குடும்பம் செல்வம் அனைத்தையும் அர்ப்பணித்து விட்டிருந்தால் உறுதியாக இறைவன் எங்களைக் காப்பாற்றுவார். இறைவனை அடைய தடையாக உள்ளது எங்களுக்கு மாயை ஆகும். மாயை என்பதன் கருத்து இல்லாத பொருள் ஆகும். இருக்கிற பொருள் எல்லாம் ஒன்றுமில்லை அதுதான் மாயை. இல்லை என நினைப்பது தான் கடவுள் இருக்கிறார். எல்லாவித தொல்லைக்கும் காரணம் கற்பனை அதைத் தவிர்க்க வேண்டும்.

எந்த நேரமும் இறைவனை நினைக்க எங்கள் மனம் அமைதியடையும். ஓவ்வொரு செயலுக்கும் உரிய நேரம் வரவேண்டும் என பாபா சொல்கிறார். எல்லோரும் காயத்திரி மந்திரத்தை மூன்று நேரமும் படிக்கவும். அகத்தில் (மனதில் உள்ள கூடாத குணங்கள்) உள்ள பகைவர்களை வென்று விட்டால்

புறத்தில் உள்ள பகைவர்களை வெல்வது சுகமாகும். எங்களைப் பற்றிய எண்ணம் ஒரு துளியும் இருக்கக் கூடாது. ஆணவமும் இருக்கக் கூடாது. இறைவனிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்து விட்டு பேசாமல் இருக்க வேண்டும். பாபா மிகச் சிறந்த நடிகர் ஆகும். (இராமர்) மானிடர் போல இயற்கையாகவே நடிப்பவர் பாபா.

மானிடர் சுகமாக பாபாவை அணுகுவதற்காகத்தான் பாபா மானிட வடிவம் தாங்கி வந்தார். எங்கள் தலையில் எல்லாவற்றையும் சுமந்து கொண்டு இருக்காமல் இறைவனிடம் ஒப்படைத்து விட்டு இறைவன் நினைவாக இருக்க அவர் எங்களுக்கு தேவையான எல்லாம் செய்வார் என்று பாபாவின் கீதையில் சொல்லப்படுகிறது. இறைவன் இருக்கிறாரா, இல்லையா என்று பண்டைக்காலந் தொட்டு உள்ள பிரச்சினை ஆகும். பல முனிவர்கள் தவ வலிமையில் கண்டு பிடித்தனர் இறைவன் எங்களில் இருப்பதாக ஆத்மாவில் இதயத்தில் இருப்பதாக கண்டு பிடித்தனர்.

எங்களுடைய உடம்பு இறைவனுடைய ஆலயமாகும். இறைவன் விலை மதிக்க முடியாத வைரம் போன்றவர். அவரை சுகமாக நாங்கள் காண இயலாது. இறைவனுடைய தேர்தான் எங்கள் உடம்பு ஆகும். மனிதப் பிறவி எடுப்பது சுகமான காரியமல்ல. பல பல பிறவிகளை எடுத்து பல தகுதிகளை எடுத்த பின்பே இந்த மனிதப்பிறவி எடுத்தது. அதை வீணாக்காமல் இந்தப் பிறவியை முறையாகப் பயன் படுத்த வேண்டும். நாங்கள் மானிடப் பிறவி எடுத்ததே பெரிய புண்ணியமாகும். இந்தக் கடல் போன்ற மனிதப்பிறவி வாழ்க்கையில் எப்பொழுது இன்ப துன்பம் வருமென்று தெரியாது சொல்லவும் முடியாது. இந்தக் கடல் போன்ற மனிதப்

பிறவியின் பயணத்தை கூடாத குணங்கள் வந்து ஆட்டி வைக்கும். அதை நீக்க இறைவன் நினைவில் இருந்து பகைமை பாராட்டாமல் ஒற்றுமையாக இருந்து வாழ வேண்டும் என்று பாபாவின் கீதையில் சொல்லப்படுகிறது.

கோயில் போய் கும்பிடும் மனிதர்களின் அருள் அத்திவாரத்தில் இருக்கும் கஸ்ரப்படும் ஏழைக்கு உதவி செய்து அன்புடன் காக்கும் மனிதர்களின் பலன் ஆகாயம் வரை இருக்கும். இறைவனை அடையும் வரை துன்பம் நோய்களை அனுபவிக்கத் தான் வேண்டும். இறைவனிடம் நாங்கள் அழியாத ஆனந்தம் தரும் இறைவனின் தெய்வீகக் கோட்பாட்டை தரும்படி கேட்க வேண்டும். எங்களுக்குள் உள்ள இறைவனை பக்தியுடனும் ஆவலுடனும் வழிபடவேண்டும். அதுதான் உண்மையான வழிபாட்டு முறை. சிந்தனையும் சொல்லும் ஒன்றுபடும் போதுதான் வழிபாடு ஆகிறது. சொல்லும் செயலும் சிந்தனையும் சேரும் போது மகாத்மாக்கள் போல மாற முடியும். இந்த மூன்றும் வேறு பக்கம் போனால் தீயவனின் செயலுக்குச் சரியாகும். எங்கள் நினைவுக்கு ஏற்ற பலன்தான் வரும் பொறுமை சத்தியத்திற்குச் சமம் ஆகும்.

நாவில் வரும் சுவையின் தன்மை முதல் சாப்பிட்ட உணவைப் பொறுத்தே வரும். நமக்குத் துன்பம் தருபவருக்குக் கூட நன்மை செய்ய வேண்டும். பொறுமையும் சகிப்புத் தன்மையும் இருந்தால் தான் இறைவனை அடைய முடியும். அன்பின் மூலம் தான் இறைவனை அடைய முடியும். காலப்போக்கில் இறைவனை நேரில் பார்க்க ஆசை, அவரின் தரிசனம் கிடைக்க வேண்டும் என்ற ஆசை வரும். ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலமாவது புனிதமான ஆன்மீகக் கொள்கையை மனதில் எடுக்க வேண்டும். இறைவனுக்கு இசை விருப்பமாகும் அதனால் நாங்கள் பயபக்தி யுடனும் இதய பூர்வமாகவும் பாடுவதன் மூலமும் இறைவனை அடைய முடியும். இறைவனுக்கு ஒரு வடிவம் இல்லை ஆயிரம்

வடிவமாகும் மனம் ஒன்றிய இதய பூர்வமான உணர்வு களைத்தான் இறைவன் விரும்புகிறார்.

நாங்கள் எந்த வடிவத்தை இறைவனில் விரும்புகிறோமோ அந்த வடிவத்தில் பக்தனுக்குக் காட்சியளிப்பான் இறைவன். முலாவது இறைவனைப் பற்றி அறிதல் பின்பு இறைவனைக் கண்டு களித்தல் பின்பு இறைவனை அடைதல். ஒரு சிறுவன் இப்படி அடைந்தான். அவன் விருப்பப்படி நேரில் காட்சி கொடுத்தார் இறைவன். எந்த இறைவனைப் பற்றி எங்களுக்குத் தெரியுமோ அவரை மனதில் பதித்து அவரை எந்த நேரமும் எண்ண வேண்டும். என்ன வேலை செய்தாலும் இறைவனுடன் ஒன்றாக வேண்டும். இறைவனிடம் சேர்ந்து அறிந்து கடைசியில் இறைவனும் நானும் ஒன்றே என்று அறிந்து கொள்வோம்.

இறைவனின் சுயநலமற்ற குணம் அன்பு, பரந்த மனப் பான்மை இவைகளை நாங்கள் பெற்று இறைவனும் நாமும் ஒன்று என்ற நிலை கடைசியில் வரும். தீவிர ஈடுபாடு இறைவன் மேல் இருந்தால் இறைவனை நேருக்கு நேர் காணும் வாய்ப்பும் உரை யாடும் வாய்ப்பும் பணியாற்றும் வாய்ப்பும் கிட்டும். நாங்கள் கடைசியில் இறைவனிடம் போய் சேர்ந்த பின் தான் முழு ஆனந்தமும் சாந்தியும் பெறுகிறோம். வாழ்க்கையில் விடா முயற்சியும் நம்பிக்கையும் மன உறுதியும் இருந்தால் கடைசியில் வெற்றியை அடைய முடியும் இப்படி தான் அர்ச்சுனன் இருந்து புனிதமான வில்லான ஆயுதத்தைப் பெற்றான். பஞ்ச பூதங்கள் கூட தடையாக வந்தது. அப்படியிருந்தும் வென்றான். நாவின் கட்டுப்பாடு இல்லாமல் பக்தி வழியில் செல்லவும், இறைவனடியில் நுழைய வும் இயலாது எனக் கீதை சொல்கிறது. முக்கியத் தலைவாசல் நாக்குக் கட்டுப்பாடு ஆகும். உண்பதும் உரைப்பதும் ஆகும். நாக்கைக் கட்டுப்படுத்தியவரின் இதயம் தூய்மையும் உறுதியும்

விரைவில் பெறும் இறைவனுக்குக் கிட்ட இருப்பதையும் உணரும்.

மௌனவிரதம் இருப்பது நாக்கைக் கட்டுப்படுத்த ஆகும் விரதம் மனநலம் உடல்நலம் தந்து சாந்தியையும் தருகிறது. விதம் விதமாக சாப்பிட்டால் சோம்பல் வந்து விடும் உணவு ருசி பார்த்துக் கூட சாப்பிட்டால் இறைவனை அடைய முடியாது. அது முட்டாள் தன்மையான கொள்கையாம். நாக்கு சாப்பாடு பேச்சு கட்டுப்படுத்தினால் மற்ற புலன்களும் அடங்கிவிடுமாம். வாய்ச் சொல்லை விட அதிக ஆற்றல் உள்ளது வேறு எதுவும் இல்லை. அதனால் நாங்கள் பேசுவதில் அதிக அக்கறை எடுக்க வேண்டும். தீய எண்ணங்கள் தீய நடத்தைகளை விட்டால் தான் நாங்கள் நல்ல எண்ணங்கள் நல்ல நடத்தைகளை பெற முடியும். மௌனம் என்பது சும்மா பேசாமல் இருப்பது அல்ல. எல்லா எண்ணங்களை விட்டுக்கொண்டு பேசாமல் இருப்பது தான் மௌனம். போற்றுதல் தூற்றுதலில் மனதைப் பாதிக்க விடாமல் சமமாக இருக்க வேண்டும். நல்ல சாத்வீக உணவு தான் நல்ல மன நிலையைத் தரும்.

தீய வழியில் பெறப்பட்ட பொருளில் சமைத்தால் தீய எண்ணங்கள் தீய வழிநடத்தல்கள் வரும். இறைவனுக்கு நாங்கள் உணவை உண்ணும் முன் உணவை அர்ப்பணித்து வழிபட்டு விட்டு உண்டால் உணவு தூய்மையும் சிறப்பும் பெற்றுவிடும். இறைவனின் நன்மையை விட எமது நன்மைக்குத் தான் அப்படி செய்வதாகும். இந்த வழிபாட்டுக்குப் பின் உணவு பிரசாதமாக மாறும் உணவிலுள்ள குறைகளெல்லாம் நீங்கிவிடும். சாத்வீக உணவைக் குறைவாக உட்கொண்டு நாக்கைக் கட்டுப்படுத்துவது பக்தனுக்கு முக்கியம் அடுத்து (பேச்சு) சொல் இது பயங்கரமான ஆற்றல் உடையது. மனதை வெட்டவும் இதயத்தை உடைக்கவும்

எங்களைக் கொல்லவும் முடியும் வாழ்வும் உற்சாகமும் கொடுத்து குறிக்கோளை அடையவும் உதவும்.

அளவுக்கதிகமான பேச்சு நினைவாற்றலைப் பலவீனப் படுத்தி விடும். உடம்பு பலவீனம் அடையும் முதுமை வேகமாக அடைந்து விடுவோம் கெட்ட பெயரும் வந்து சேர்ந்து விடும் என பாபா கூறுகிறார். நன்றாகச் சாப்பிட்டு விட்டு தேகப் பயிற்சி செய்யாமல் இருந்தால் உணர்ச்சிவசப்படுவார்கள். நிம்மதி இல்லாமல் இருப்பார்கள். ஆணவம் சுயநலம் பொறாமை உள்ளவர்களாக இருக்கக்கூடாது. குதிரைக்கு நல்ல சாப்பாடு கொடுத்து கட்டி விட்டால் திமிரடையும். உடற்பயிற்சி, தீய இயல்புகளைக் கூட கட்டுப்படுத்தும். எப்போதும் நல்லதே செய்ய வேுண்டும் என்று உறுதி பூண வேண்டும். எங்களிடம் தன்னம்பிக்கை வலுப் பெற்றிருக்க வேண்டும்.

உணவு, பேச்சு ஆகியவை கட்டுப்பாடு உடையவனே உண்மையான மனிதன் அவன்தான் உண்மையான பாதையை அடைவான். எங்கள் நாக்கை இறைவனின் நாமத்தைச் சொல்லி பாதுகாத்துக் கொள்ளுங்கள். பக்தி என்பது இறைவனிடம் காட்டும் சீரான அன்பு வெள்ளமாகும். கோயிலுக்குப் போவது அபிஷே கங்கள் செய்வது நதிகளில் நீராடுவது ஒருவித பக்தி மார்க்கம் (1 ஆவது பக்தி மார்க்கம்). விசேஷடமானது இரண்டாவது பக்தி மார்க்கம் இது உன்னதமானது. முதலாவது இடைவிடாது இறை வனில் மூழ்கிக் கிடப்பது, குறை கூற முடியாத நன்னடத்தை யுடன் இருப்பது. இதை பராபக்தி என்பர். இது ஆழ்ந்த பக்தியாகும். பராபக்தியே விஷேடமானது அதை நாங்கள் கையாள வேண்டும். இதைத்தான் தியானம் என்கின்றனர். தியானமும் பக்தியும் இறைவனைக் காணும் செயன்முறையாகும். ஆணவ மிருக்கும் வரை உன்னதமான ஆன்மீக அறிவைப் பெறமுடி யாது. இருளும் ஒளியும் ஒருநாளும் ஒன்றாக இருக்காது. ஆண

வமும் இறைபக்தியும் ஒன்றாக இருக்காது. நான் இறைவன் என்று நினைத்தால் என்னை ஒன்றும் தொந்தரவு செய்யாது.

தாய் ஒரு உன்னதமான படைப்பு. தாய்க்குக் கடைசி காலத்தில் பிள்ளைகள் கொடுக்கும் பரிசு கண்ணீர் ஆகும். பிள்ளை வீடு கட்டி வீட்டுக்குப் பேர் வைப்பது அன்னை இல்லம் என்று. ஆனால் தாய் இருப்பது முதியோர் இல்லம். அப்படி இல்லாமல் தாய் தந்தையரை மனம் நோகாமல் பார்த்தால் பிள்ளைகள் வாழ்க்கை நன்றாகவிருக்கும். தியானப்பயிற்சியின் முறை என்றால் மெதுவாக, உறுதியாக ஆசைகள் அனைத்தையும் கட்டுப்படுத்துதல் ஐம்புலன்களை அடக்குதல் ஆகும். இப்படித் தியானமிருப்பதால் எங்கள் வினாவுக்குரிய மறுமொழியை எங்களது நடவடிக்கை மூலம் அறிய முடியும். சாந்தி என்பதன் பொருள் அன்பு இறைவனுக்கு அருகில் செல்ல அன்பை வளர்க்க வேண்டும். இறைவனை அடைய நாங்கள் கண், காது கால் என்று அங்கங்களால் செய்வதை விட அவரை எங்கள் இதயத்தில் அமர்த்தினால் போதும் அதுவே உயர்ந்த நிலையாகும். இறைவனை எங்கள் இதயத்தில் அமர்த்தினால் எங்கள் மனம் புலன்கள் எல்லாம் அடங்கிவிடும். இறைவனை எந்த நேரமும் நினைத்தால் எங்களுக்குத் தேவையான அனைத்தையும் தந்து விடுவார் எனக் கண்ணன் கீதையிலுள்ளது.

இறைவனை எங்கள் அகத்தில் நாங்கள் நினைக்க வேண்டும். அப்போது எங்களுக்கு மனநிறைவு கிடைக்கிறது. மனதை அமைதிப்படுத்துவது பக்தர்களுக்கு மிகவும் முக்கிய மானது. உணவு உண்பதற்கு முன் இறைவனுக்கு படைத்து விட்டு உண்ண வேண்டும். படைத்தால் உணவு தூய்மையாக்கப்படு கிறது. நாம் இறைவனை விட்டுப்பிரிந்தால் அளவுகடந்த துன்பத்தை அனுபவிப்போம்.

எங்களது ஆசைகளைக் கட்டுப்படுத்தினால் ஆத்மீகத்தை அடையமுடியும். கோபம் வரும் போது கட்டுப்படுத்தினால் உடலை வலிமையாக்கும் உள்ளத்தைத் தூய்மையாக்கும். ஆசைகளை கட்டுப்படுத்துபவரையும், கோபத்தை அடக்குபவனையும், விருப்பு வெறுப்பு இல்லாதவனையும், அன்பானவனையும் தனக்கு என்று இறைவன் சொல்கிறார். அதாவது தனக்கு விருப்பம் என்கிறார்.

பிறருக்கு சேவை செய்ய பயன்படாத உடல் இறந்த உடலாகும். கட்டுப்பாடு இல்லாத காளை குதிரை. தடுப்பு இல்லாத கார், புலனடக்கம் இல்லாத வாழ்க்கை அனைத்தும் ஆபத்தானவை குறிப்பிட்ட எல்லையை மீறும் மகிழ்ச்சி கூட துன்பமாக மாறும். எங்கள் மனம் மிக்க உறுதியும் மிக்க சலனமும் உடையது.

அர்ச்சுனன் கண்ணனிடம் தனக்கு மனதைக் கட்டுப் படுத்த உதவி செய்யும்படி கேட்டார். அதற்கு கண்ணன் உலகத்தில் பற்று இல்லாமல் வாழும்படி சொன்னார். அரசமரத்திற்கு எங்கள் மனதை ஒப்பிடலாம் ஏனென்றால் காற்று இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி இலை ஆடிக்கொண்டுதான் இருக்கும். அதேபோல் மனம் சலனமுள்ளதாகவும் உறுதியற்றுப் பிடி வாதமுள்ளதாகவும் இருக்கும். தீவிர வைராக்கியம் ஆன்மீகக் கொள்கைகளில் முன்னேற இன்றியமையாதது.

அரசனிற்கு கனவிலும் கிடைக்காத என்ன பொருள் பண்டம் இருந்தாலும் மன திருப்தி வராது. கானகம் சென்றால்தான் மனம் சாந்தி, நிறைவு கிடைக்கும். புத்தர் அரச குடும்பத்தைச் சேர்ந் தவர் அவர் நிலையற்ற வாழ்க்கை, நிலையற்ற பொருள், உடல் எல்லாவற்றையும் வெறுத்துக் காட்டுக்குச் சென்றார். அரிச்சந்திரன் என்ற அரசன் தீவிர பலனாலும் சந்தர்ப்ப சூழலினாலும் மயானத் தைக் காவல் காத்தான்.

நாங்கள் செய்கின்ற ஒழுக்கத்தினைக் கடைப்பிடிப்பதே கர்மயோகம் எனப்படும் . கையைக் கூப்பி நமஸ்கரிப்பதன் பலன் ஓ இறைவனே எல்லாம் உன்னுடையதே என்று கூறி சரணடைவது ஆகும். அமைதியே கடவுளென்று கூறப்படுகிறது. துறவு என்பது உண்மையாக இறைவன் பால் நிரந்தரமாக மனதைத் திருப்பு வதேயாகும். நாங்கள் உண்மையே பேச வேண்டும். இக்கட்டான கட்டத்திலும் பொய் சொல்லாமல் வாயை மூடியிருப்பது நல்லது. சொல் செயல் எண்ணம் எல்லாம் தூய்மையாக இருக்க வேண்டும். முழுமையாக இளமைப்பருவத்தில் நாம் இறைவனை நினைப்பது சிறந்தது. வாழ்க்கையில் பிற்பகுதியை இன்பமாக கழிக்க விரும்பினால் சிறுவயதில் இறை பக்தியை வளர்க்க வேண்டும்.

இறைவனை மறவாதிருப்பது முதலாவது, உலகத்தை மறவாதிருப்பது இரண்டாவது, இறப்புக்கு அஞ்சாமல் இருப்பது மூன்றாவது இவை மானிடர்க்கு உரிய பெரிய தத்துவங்கள் ஆகும். உண்மையான ஆன்மீக அறிவே ஞானமாகும்.

## கர்ம யோகம்.

கடமையை செய்ய பலனை எதிர்பார்க்கக் கூடாது. கர்மயோகம் என்பது எங்களின் ஒழுக்கமே ஆகும். குசேலர் கிருஸ்ணருக்கு அவலைக் கொண்டு போய் கொடுக்க அவர் அன்புடன் வாங்கி உண்டார். குசேலர் திரும்பி குடிசை வீட்டிற்கு வர பெரிய மாளிகையாக இருந்தது. மனைவி பிள்ளைகள் செல்வ செழிப்புடன் இருந்தனர். மனதில் ஏற்படும் போரை தடுக்க ஆன்மீக கொள்கையை கையாள வேண்டும். நோய் வந்தபின் கவனம் எடுப்பதை விட முதலே வர விடாமல் கவனம் எடுப்பது எல்லாவற்றிலும் சிறந்தது. தினை அளவு கவனம் எடுப்பது பனை அளவு கவனம் குணமாவதற்கு சரியாகும்.

ஆணவமும், பற்றும், இருக்கும் வரை நாங்கள் துன்பத்தில் இருந்து மீள முடியாது. கர்மம் என்பது செயல், எங்கள் கர்மப்படி வளர்ந்து கர்மப்படி இறக்கும். எல்லாவற்றுக்கும் காரணம் இந்த கர்மாவே ஆகும். அதனால் பொறுப்பு இல்லாமல் கர்மாவை செய்ய முடியாது. நாங்கள் 60 நல்ல காரியங்களை செய்தால் தான் ஒரு நல்ல உணர்வு உருவாகும். நாங்கள் நல்ல செயலை செய்தால் தான் நல்லதை அனுபவிக்க முடியும். இந்த உடலை ஆண்டவன் படைத்தது நல்ல காரியங்களை செய்யவே ஆகும். பரந்த மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று பாபா கூறுகிறார். துன்பத்தை அனுபவித்தவர்களுக்குத் தான் மற்றவர்களின் துன்பம் தெரியும். பாபாவை நமது சுவாமி நமது சுவாமி என்று உரிமையுடன் கூப்பிடலாம்.

சுவாமியின் கட்டளையை பின்பற்றினால் பேர் ஆனந்தத் தினை அனுபவிக்கலாம். இறைவனே மிகச் சிறந்த புகைப்படக் கலைஞர் ஆவார். எந்த நேரமும் நாங்கள் செய்வதை கவனிப்பார். பஜனை என்றால் இறைவனை குறித்த சிந்தனை என்ற பொருள் ஆகும். அதோடு அமைதியையும், ஆனந்தத்தையும் தருகிறது. காலத்தை நாங்கள் காப்பாற்றினால் காலம் எங்களை காப்பாற்றும். பொன்னான நேரம் என்பது இளவயது ஆகும். என்னவென்றாலும் மனதில் நிற்கும். அலாம் மணிக்கூடு கட்டிலில் பக்கத்தில் வைக்க கூடாது. எழும்பி நடந்து போகக் கூடிய இடத்தில் வைப்பது நல்லது. உதவியை எதிர்பாராமல் உதவி செய்வதே கர்மயோகம் எனப்படும்.

நல்ல உணவு சாப்பிட்டால் நல்ல உணர்வுகள் குணங்கள் வரும். நல்ல குணங்கள் இருந்தால் தான் நல்ல செயல்கள் வரும். நல்லதை நாங்கள் செய்தால் எங்களுக்கு நல்லதே நடக்கும். நல்ல பிறவியும் கிடைக்கும். நாங்கள் நல்லதை செய்ய வேண்டும்.

பலனை எதிர் பார்க்கக் கூடாது. ஆனால் தானாக வரும் நேரம் வரும். நாங்கள் கவனத்தை செயலில் மட்டும் செலுத்த வேண்டும். நாங்கள் முதலில் தீய செயல்கள் செய்து துயரப்பட்டால், இப் பொழுது நல்ல செயல்களை செய்தால் அதில் இருந்து தப்ப முடியும். நல்ல செயல்கள் மூலம் தீய செயல்களை மாற்றி அமைக்க முடியும். முற் பிறவியில் செய்த கருமாக்கு தான் இந்த உடல் வந்துள்ளது. மனதின் தந்திர குணம் தான் கனவு ஆகும். இப்படி அபார சக்தி உள்ள மனதை இறைவனுக்கு அர்ப்பணித்து விட்டால் எங்கள் செயல்கள் யாவும் புனிதமாகி விடும்.

நாங்கள் சுவாமிக்கு ஏற்றும் விளக்கின் ஒளி உலகம் எல்லாம் பிரகாசம் அளிக்கும். என்று ஒரு பெரிய முனிவர் கூறினார். நாங்கள் செய்யும் புண்ணியம் முடியும் வரை சொர்க்கத்தில் இருக்கும். புண்ணியம் முடிய மண்ணுலகம் திரும்ப வேண்டும்.அதனால் கண்ணன் அர்ச்சுனனுக்கு சொல்கிறார் தற்கால பலனுக்கு பாடு படாதே. உன்னதமான, நிரந்தரமான பிறவிக்கு பாடு படு. அவரை அடைந்தால் திரும்பி வர தேவையில்லை. நிரந்தரமாக இறைவனிடம் இருக்கச் சொல்கிறார். நான் செய்தேன் என்று ஒன்று செய்து விட்டு சொன்னால் அது துன்பத்தில் தான் முடியும். அப்படியாக நினைத்தால் ஆத்ம இன்பத்தை குறைக்கும். சுயநலம் இல்லாமல் செய்யும் எந்த காரியமும் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படும்.

என்ன வேலை செய்தாலும் இறைவனுக்கு ஒப்படைத்து விட்டு அதன் மகிழ்ச்சியையும் இறைவனுக்கு விட்டு விட வேண்டும். இது தான் கர்ம யோகம் எனப்படும். நாங்கள் எதையும் பயிற்சி இல்லாமல் பெற முடியாது. அதனால் ஆத்மீக பயிற்சியை பெற்று வாழ வேணடும். நாங்கள் விலங்கு, மிருக நிலைக்கு கீழ் இறங்க கூடாது. மனிதர் இருந்து தெய்வ நிலைக்கு மாற வேண்டும். பாபா மாதிரி அவதாரங்கள் வருவது மனிதர்களின் உணர்வு

நிலையை மாற்றி தெய்வீக நிலைக்கு மாற்றுவதற்கே ஆகும். பாபாவின் படிப்பினையே நாங்கள் பின்பற்றினால் நாங்களும் தெய்வமாக மாறலாம். இடைவிடாத பயிற்சி எங்கள் குறிக் கோளை அடைய முடியும். எங்கள் சகவாசம் போல தான் நாங்களும் இருப்போம். தெய்வ சிந்தனையுடன் இருந்தால் துயரம் தெரிவது இல்லை. இந்த உலகத்தில் வாழ உலகாயக் கல்வியும் அவ் உலகுக்கு ஆன்மீக கல்வியும் அவசியம் ஆகும்.

பொறுமை, வைராக்கியம், உடல் தூய்மை, உளத்தூய்மை, சுயநலம் அற்ற அன்பு, மனக்கட்டுப்பாடு, உடல் கட்டுப்பாடு ஆசைகளை துறந்து தூய உணர்வு சலனம் இல்லாத மன ஒருமைப்பாடு உள்ளதை வைத்து உள்ளம் நிறைவடைதல் ஆகியவை ஆன்மீக ஞானம் உள்ளவர்களிடம் இருக்க வேண்டியவை. வாழ்க்கை போரில் மனிதருக்கு மிக முக்கிய மானவை கேடயமும், கவசமும், பொறுமையுமே ஆகும். எத்தனையோ மன்னர்கள் பொறுமை இல்லாமல் அழிந்து உள்ளனர்.

ஆத்ம ஞானம் பெற்ற மகான்கள் பொறுமை ஆனவர்களே ஆகும். சுயநலமற்ற புனிதமான செயல்களை செய்வதே மானிடவர்க்கத்தின் இரகசியம். அதை செயல் புரியவே மானிட வாழ்வு இருக்கிறது. மாயையின் இயல்பு மயக்குவதும் குழப்புவதும் ஆகும். நிரந்தரமானவரை (இறைவனை) பற்றிக் கொண்டால் தான் நிரந்தர இன்பத்தை அனுபவிக்க முடியும். பக்தியை வளர்த்த பிறகே ஞான மார்க்கத்துக்கு அடி எடுத்து வைத்து இறைவனை உணர முடியும். நாங்கள் உன்னதமான ஆத்ம ஞானத்தில் ஈடுபட்டாலும் சரி துன்பம் என்னும் படு பாதாளத்தில் தள்ளப்பட்டாலும் சரி அதற்குரிய அடிப்படை எங்கள் பழைய கர்மாதான். ஞான ஒளி சுடர்விடும் பொழுது எங்களுக்கு மாயை மறைகிறது. கண்ணன் அர்ச்சுனனுக்கு

ஞானக்கதை போதித்த பின்பே அர்ச்சுனன் மாயையில் இருந்து விடுவிக்கவும், ஆன்ம ஒளியை பெறவும் முடிந்தது.

உலகில் உள்ள நிரந்தரமற்ற பொருளில் பற்று வைக்காமல் நிரந்தர பொருள் இறைவனில் பற்றுவைத்து நிரந்தர ஆனந்தம் பெற வேண்டும். அர்ச்சுனனிடம் கண்ணன் கடைசியில் அவரின் இதயத்தை ஆத்மாவை கூட தன்னிடம் தர சொல்லிக் கேட்டார். கர்மயோகத்தை விட சிறந்தது மனிதவாழ்க்கைக்கு ராய பேட்டை வேறு இல்லை. எங்களுக்கு வரும் கஸ்டம் எல்லாம் பழைய கர்மாக்கள் தான். இறைவனிடம் ஒன்று சேருவதற்கு நாங்கள் ஆசை அற்றவர்களாகவும், சுயநலம் இல்லாமலும் இருக்க வேண்டும். எங்கள் முதியோர் செய்த வினைப் பயனும் எங்களுக்கு வரக் கூடும். மற்றவர்களுக்காக செய்வதே உன்னத மான செயல். என்ன செயலையும் இறைவனுக்காக என்று அர்ப்பணித்து விட வேண்டும். இது தான் எல்லாவற்றையும் விட சிறந்தது.

என்ன செயலையும் இறைவனுக்கு அர்ப்பணித்து செய்வதால் நல்ல அனுசக்தி யோகம் ஆகிவிடும். இதய பூர்வமான முயற்சியுடன் (மனம் வைத்து) இறைநம்பிக்கையுடனும், முடியாத காரியத்தையும் முடித்து வைக்க முடியும். இறைவனில் நம்பிக்கை இருக்கிறவர்களுக்கு பெரிய கஸ்டங்கள் வராது. இடையில் சிறு கஸ்டங்கள், தடைகள் வரும். இறுதியில் அவர் உறுதியாக வெற்றி பெறுவர். ஒருவர் மற்றவருடைய வெளி தோற்றத்தையே பார்க்கிறோம். இறைவன் அகத் தோற்றத்தையே பார்க்கிறார். இதயத்தையும், அவருடைய சாந்தியையும் பார்க்கிறார்.

ஒருவர் எங்களை அவமதிததால் நாங்கள் சாந்தியுடன் இருக்க வேண்டும். அவையின் கோபம் எல்லாம் வெளி வந்து விடும். ஒருவர் கோபம் வந்து எதுவும் சொன்னால் அவர்

சொல்லை விட்டு விட வேண்டும். அப்பொழுது மனதில் உள்ள நச்சுப் பொருள் எல்லாம் மறைந்து விடும். நாங்கள் அமைதியுடன் இருக்க வேண்டும். அப்பொழுது சொர்க்கம் போல் இருக்கும். பொறுமையும், சகிப்புத் தன்மையும் மனிதரின் உயர்வான குணங்கள் ஆகும். அக தூய்மை தான் மிக மிக முக்கியமானது. இறைவன் அகம், புறம் இரண்டு இடத்திலும் இருப்பதால் நாங்கள் தூய்மையாக இருக்க வேண்டும்.

சுவாமி சொல்கிறார் ஆத்மீக ஞானத்தில் நிலையாக இருக்கும் லட்சியம் என்னவென்பது:

1. மன அமைதி
2. புலன் கட்டுப்பாடு
3. ஆசைகளை துறத்தல்
4. எந்த சூழலிலும் மனம் அசையாமல், சலனப்படாமல் உறு-தியுடன் இருத்தல்.
5. பெரிய மகான்களின் (பாபா போல) வழிகாட்டுதலில் நம்பிக்கை வைத்தல்.
6. எந்த சூழலிலும் மனநிறைவுடன் இருத்தல்.

அகமும் புறமும் தூய்மையாக இருக்கும் பொழுது சாந்தி பிறக்கும். மனதில் பொறுமையும் இருக்கும். இந்த அரிய போதனைகளை நாங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது சுவாமியின் ஆசை ஆகும். முற்பிறவியில் செய்த கர்மாவின் பலன் தான் எங்கள் உடல் அமைவது கூட ஆகும். நாங்கள் இந்த பந்த வழியில் மாறி,மாறி பிறவி எடுக்காமல் இருப்பதற்கு கர்ம வழியில் செல்வது தான் நல்லது என்று பகவத் கீதை சொல்கிறது.

நல்லதோ, கூடாததோ எல்லாமே இறைவனால் எங்களுக்கு அளிக்கப்பட்டது. அதனால் ஒரு யோகி சொல் கிறார். நல்லது கூடாது என்று கவலைப்படாமல் எல்லாம் இறைவன்

சங்கல்ப்படி நடக்கிறது என்று நினைக்கச் சொல்கிறார். இறைவனால் தான் எங்களுக்கு தர்ம காரியங்கள் செய்வதற்கு கூட சிறப்பு உரிமை கிடைக்கிறது. பகவத் கீதையை வாசிப்பவர்கள் கேட்பவர்கள் இன்னல்கள் கஷ்டங்களில் இருந்து விடுபடுவர். எங்கள் செயல்கள் இறைவனுக்கு அர்ப்பணமாகிற பொழுது அது யோகம் ஆகிறது. அர்ச்சுனன் மாபெரும் போருக்கு போரிடும் பொழுது கண்ணனையே நினைத்தபடி செய்தான். அர்ச்சுனனிடம் கண்ணன் தன்னை நினைக்கும் படியும் சொன்னார். நாங்கள் ஒரு குறிக்கோளை அடையின் இறைவனின் அன்பை பெற வேண்டும். நாங்கள் இறைவனை நினைத்தால் அவர் சந்தோஷமாக இருப்பார். ஒவ்வொரு செயலையும் அர்ப்பணிக்கும் பொழுதே ஆகும். இறைவனை மகிழ்விப்பதே பக்தனின் குறிக்கோள் ஆகும். அர்ச்சுனன் இறைவனின் (கண்ணனின்) சொல்லை கேட்டு நல்ல நினைவுடன் நடந்ததால் போர் யாகம் ஆனது. துக்சன் என்பவன் இறைவனின் சொல் கேட்காமல் கூடாத நினைவுடன் யாகம் செய்தான். அது போராக மாறி விட்டது. இறைவனுக்கு எல்லாவற்றையும் அர்ப்பணித்து செய்யும் செயல்களே யாகம் ஆகிறது. நிலையான அருட் பெரும் சோதியாம் எங்கள் ஆத்மா ஆகும். இன்ப துன்பத்தை சமமாக பாவிக்க வேண்டும். கண்ணன் அர்ச்சுனனுக்கு நிலையான நிலையற்றதுக்கு உள்ள வேற்றுமையை கற்பித்தார்.

கண்ணன் எவ்வளவோ காலத்துக்கு முன்பு சூரிய பகவானுக்கு பகவத் கீதையை போதித்தார். கண்ணன் பல செயல்களை செய்வதற்கு மனித உடம்பு எடுத்து பல தடவை வந்து உள்ளார். அர்ச்சுனன் கேட்க கண்ணன் சொன்னார். காலத்தை கடந்து நிற்பது தெய்வம் என்று உணர்ந்தான். தனி மனிதன் அப்பால் பட்டதிற்கு முன்னேற வேண்டும். தனிமனிதனும், நாமும் உருவத்துடன் தொடர்புடையவன். ஆத்ம ஞானத்தை குறிக்

கோளாக கொண்டு அடைய வேண்டும். சமுதாயத்திற்கு சேவை செய்ய வேண்டும். பரந்த இதயத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். நல்ல இறைவன் தன்மை இருக்கும் பொழுது படைப்பு முழுவதும் பகவானாகக் காட்சியளிக்கும். எங்கள் கடமையை மதிக்க வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார். மனிதனின் உடல் ஒரு முடிவுக்கு வர வேண்டும். அது இயல்பு அதற்கு ஏன் கவலைப்பட வேண்டும். அது தான் மரணம்.

பற்றில் இருந்து விடுபடு ஆனால் இறைவனை மறக்காதே. அவரது கட்டளை அனைத்துக்கும் பணிவாயாக. மனதுக்கு சாந்தி என்பது கடையில் வாங்கும் பொருளல்ல. அதை எங்கள் அகத்தில் தான் தேட முடியும். நாரதருக்கு ஆரம்ப காலத்தில் சோதனைகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்தன. அவர் 64 கலையையும் கற்றார். அப்படி இருந்தும் கவலைகள் மாறவில்லை. நாரதர் இறைவ னிடம் கேட்டார் தனக்கு எல்லா கலையும் கற்றும் கவலை தன்னை விட்டு போகவில்லை என்றார். இறைவன் கேட்டார் ஆத்ம கலையை கற்றதா? என்றார். ஆத்ம கலையை கற்றால் தான் மனம் சாந்தி அடையும். அந்த ஒன்றை புரிந்து கொண்டால் மற்ற அனைத்தையும் புரிந்து கொள்வது இலகு என்றார். தன்னை அறிகிற கலை தான் ஆத்ம வித்தை. ஆன்மீக கொள்கை ஆகும்.

என்னதான் படித்து இருந்தாலும் ஆன்மீக கொள்கை இல்லாவிடில் அதில் வேலை இல்லை. முதல் ஆன்மீக கொள்கை தான் அவசியம். எங்களால் ஒன்றும் செய்ய இயலாது. இறைவனால் தான் செய்ய இயலும் என்பதை நாங்கள் உணர வேண்டும். எவ்வளவு படித்து இருந்தாலும் மனதை பற்றி அறி யாதவன் முட்டாள் ஆகும். சாவே இல்லாத ஒன்றை அறிய வைக்கும் அறிவு ஆத்மா அறிவு. கண்ணன் அர்ச்சுனனிடம் சொன்னான் உயர்ந்த கல்வி கற்று இருக்கிறாய். புலன் கட்டுப்பாடு உள்ளது. பல திறமைகளை பெற்று இருக்கிறாய்.

பெரிய சாகசங்களை பெற்று இருக்கிறாய். ஆனால் பல வகையான இடையூறுகளை அனுபவித்து இருக்கிறாய். இதற்கு காரணம் தெய்வீகத்தை அறியவில்லை என்பதே ஆகும். தெய்வீகத்தை புரிந்து கொள்ளும் வரை துன்பத்தில் இருந்து விடுபட இயலாது. போன பிறவியில் கர்மாவால் தான் உடல் கிடைத்தது.

நாங்கள் செய்யும் கடமையை இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். தர்மத்தை பின்பற்று நம்பிக்கையில் உறுதியாக இரு. இறைவன் கட்டளைக்கு அடிபணிந்தால் இறைவன் எங்களை காப்பாற்றும் பொறுப்பு தன்னுடையது என்கிறார். எங்கள் ஜீவன் (உயிர் அல்லது ஆத்மா) வும், சிவனும், இரண்டு பேரும் தனி தனியாக எங்கள் உடலில் இருக்கிறார்கள். எங்கள் இதயம், விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம், இவற்றில் இருந்து விடுபட்டு போற்றுதல், தூற்றுதல் பாதிக்கப்படாமல் நடந்து கொள் என்று கண்ணன் கூறினார்.

**பகவத் கீதையின் பகுதி:01 முடிவுற்றது.**

நாங்கள் செய்த பாவத்திற்கு தண்டனையை அனுபவித்து தீர வேண்டும் என்று பாபா கூறுகிறார். நல்ல செயல்கள் செய்தால் தான் மனம் நன்றாக இருக்கும். மனம் நன்றாக இருந்தால் தான் இறைவன் சிந்தனை வளரும். குரு சொல்வதை இஞ்சியளவும் பிசகாமல் நடப்பவனே உண்மையான மாணவன். பாபா சொல்கிறார் நாங்கள் ஓரு நல்ல விடயத்தை போதிப் பதை விட மற்றவைக்கு நாங்கள் நடைமுறைப்படுத்தினால் கூட அவைக்கு புரியும். உண்மையான கல்வியின் நோக்கம் கற்ற கல்வியை நடைமுறைப் படுத்தி தன்னை நல்ல முறையில் மாற்றிக் கொள்வதே ஆகும். கடவுள் பெயரை இடைவிடாமல் சொன்னால் அன்பை பெருக்கிக் கொள்ள முடியும் என்று பாபா கூறுகிறார்.

ஆரோக்கியமான வாழ்க்கை வாழ விரும்புகிறவர்கள் சமூகத்துக்கு சேவை செய்தால் போதும். இவர்கள் உயிர் வாழ உணவை பற்றி கூட கவலைப்படத் தேவையில்லை. அன்பை கற்று கொண்டு அதை பிறரிடம் பரவச் செய்து விதையுங்கள். பாபா எங்களுக்கு ஆசிரியராக உறவினராக நண்பராக இருந்து எங்களை வழி நடத்துகிறார். நாங்கள் தனிமையில் இல்லை என்று பாபா கூறுகிறார். எங்களை முழுமையாக இறைவனிடம் ஐக்கியப்படுத்தினால் அவரே எங்களுக்கு வழித்துணையாக இருந்து பாதுகாப்பார். அன்பு இருக்கும் இடத்தில் அமைதி இருக்கும். ஆணவம் இருக்கும் இடத்தில் பொறாமை இருக்கும். வெறுப்பு, பயம் இருக்கும் இடத்தில் கூச்சல் (சத்தம்) இருக்கும்.

**சுகி சிவம் என்றவர் SUN T.V இல் சொன்னது.**

துன்பத்துக்கு காரணம் நாங்கள் தான் ஆனால் மற்றவர்களை சாட்டுகிறார்கள். மனம் எண்ணங்களால் துன்பப் படுகிறது. எண்ணத்தில் இருந்து விடுபட்டால் துன்பத்தில் இருந்தும் விடுபடலாம். எது கூடாதோ அது மனதில் இருக்கும். எது தேவை இல்லையோ அது அழகாக தெரியும். எண்ணத்தில் இருந்து விடுதலை செய். சகல உயிர்களிடத்திலும் அன்பு காட்ட வேண்டும். பந்தத்தில் இருந்து விடுபட்டால் கஷ்டத்தில் இருந்து விடுபடலாம். எது கூடாதோ அது மனதில் கூடு கட்டி விடும். மனதை விட்டு விலக வேண்டும். ஆசைகள் எண்ணங்களில் இருந்து விடுபட வேண்டும். எதில் சந்தோஷமோ அதில் துன்பமும் இருக்கும்.

**சுகி சிவத்தின் சொற்பொழிவு**

முத்தி பெற மனிதர்க்கு விருப்பம் இல்லை. தாங்கள் இருந்து கஷ்டப்பட வேண்டும என்பது. எண்ணங்களை பெரிதாக நினைக்க

வேண்டும். அப்பொழுது வாழ்க்கை பெரிதாக அடையலாம். கவலை வரும் பொழுது சிரிக்க வேண்டும். எந்த நேரமும் சிரிக்க வேண்டும். சிரிப்பதால் ரென்சன் குறையும் பிரச்சினை வரும் பொழுது சிரிக்க வேண்டும். நம்பிக்கையும் முயற்சியும் வெற்றியை தரும். பணம் கால் செருப்பு போல அளவாக இருக்க வேண்டும். கூடினாலும் தொல்லை. குறைந்தாலும் தொல்லை ஆகும். முயற்சி பெருமையை தரும். முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம். முயற்சி செய்தால் விதியையும் மாற்றலாம். பணம் சேர்ப்பதை விட தான தருமம் தான் முக்கியம் ஆகும். என்ன செயலையும் விருப்பத்துடன் செய்ய வேண்டும். நன்மையை எதிர் பார்த்து உதவி செய்யாதே.

ஒன்றை அடைய வேண்டும் என்றால் உறுதியுடன் இருக்க வேண்டும். மனம் தளம்பக் கூடாது. இடம் பார்த்து உதவி செய்ய வேண்டும். எந்த வேலையும் முடியும் என்று நினைத்து செய்ய வேண்டும் வெற்றி நிச்சயம். பிறக்கும் பொழுது கழுத்தை சுத்தியிருக்கும் மாலை எங்களுக்கு நாங்கள் செய்த கர்ம கணக்கு (பாவ புண்ணியம்) த்துக்கு உள்ள மாலை ஆகும். அதை நாங்கள் அனுபவித்து தான் தீர வேண்டும். நான் பிரம்மா என்று நினைக்க வேண்டும். அரக்கன், மனிதன் இல்லை நான். தேவையற்ற பேச்சு செயற்பாடுகளை குறைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் சீதாதேவியைப் போல வாழ வேண்டும். மனிதன் மனிதனாக வாழ கற்றுக் கொள்ள வேண்டும் இதுவே சாயின் உபதேசம் ஆகும். மனிதனின் தனிப்பட்ட பண்புகள் தூய்மையை கடைப்பிடித்தல் கூட்டுறவு கொள்ள ஆவலுற்றல். எல்லோருக்கும் ஒரு உறவு. என்ற மனப்பான்மையை பேணி வளர்க்க வேண்டும். கடவுள் அருள் கிடைப்பதற்கு வைராக் கியம் பிரதானமாகும். எங்கள் வாழ்க்கையானது போர்க்

களத்தில் இருப்பதற்கு சரி என்று பாபா சொல்கிறார். எங்கள் வாழ்க்கையில் சோகம், துக்கம், மகிழ்ச்சி, ஏற்றம், இறக்கம், எல்லாவற்றிலும் தான் கலந்து கொள்வதாக அடிக்கடி சொல்வார்.

பாபாவை மனத்தால் சேர்ந்து இருப்பவரை பாபா ஒரு நாளும் விட மாட்டார். கடவுளை நினைத்தவருக்கு கடவுள் நிச்சயம் துணைநிற்பார். மகிழ்ச்சிக்கு முதல் துன்பம் வரத் தான் செய்யும். துன்பம் தான் நண்பன். சுயநலம் அற்று வாழ்ந்தால் இறைவனை அடையலாம் என்றார் சுவாமி. கடவுளை சீக்கிரம் அடைய வழி எல்லோரிடமும் அன்பு காட்ட வேண்டும். எல்லோருக்கும் சேவை செய்ய வேண்டும். தெய்வ பலம் என்பது பல யானைகளின் பலத்துக்கு ஒப்பானது. அதனால் நல்ல தெய்வீக அன்பாக இருக்க வேண்டும். மனித தெய்வங்களின் கால் கட்டை விரலிலிருந்து அவர்களின் உயிர் அலைகள் வெளிப்படும். அதனால் தான் பாபாவின் பாதம் சக்தி வாய்ந்தது என்று வணங்கச் சொல்கிறார்.

ஒரு மனிதனின் கண்ணை பார்த்து கதைப்பவன் தெய்வ நிலையை அடைவான். கடவுளிடம் முழுமையாக எங்களை அர்ப்பணித்தால் கவலை இல்லை. அரை குறையாக அர்ப் பணித்தால் துன்பம் தான் மிஞ்சும். இறைவன் நினைவாக நாங்கள் இறந்தால் இறைவனிடமே போய் சேருவோம். வாழ் நாள் முழுக்க இறைநாமம் சொல்வது சிந்திப்பது முக்திக்கான முன் பதிவுத் திட்டம். மகாத்மா காந்தி கடைசி நேரத்திலும் ராம், ராம் என்ற படியே போனார். முக்திக்கான முன்பதிவு ராம ஜபம் முயற்சி எல்லோரும் செய்யலாம். பற்றற்றவனை அவாந்தி என்றும் சொல்வது ஆகும். தன்னைத்தானே புகழ்ந்து கொள்வது தற்கொலைக்கு சரியாகும். மனம் போற வேகத்தை விட வேகமாக போகிறது எதுவும் இல்லை. ஆனால் ஒன்று

வாழ்க்கையில் வரும் இன்ப, துன்பங்களுக்கு இறைவனை பற்றிக் கொண்டால் தப்பிக்கலாம்.

நல்லது செய்பவன் கஸ்டப்படுவதும் தீமைகள் செய்பவன் நன்றாக இருப்பதும் தலைவிதியாகும். அதை யாராலும் மாற்ற முடியாது. ஆனால் நல்லது செய்தவன் அடுத்த பிறவியில் நன்றாக இருப்பான். தீமைகள் செய்தவன் அடுத்த பிறவியில் கஸ்டப் படுவான். தலைவிதி என்பது தோல்விகளின் வெளிப்பாடு. (மனஆறுதல்) நம்பிக்கை என்பது ஆழமான தியானத்தின் வெளிப்பாடு. பிள்ளையார் தான் எங்களுக்கு எஜமான் அதனால் அவரை மறக்கக் கூடாது என்று பாபா சொல்கிறார். நன்றி சொல்வது ஒரு மனிதனின் முதுகெலும்பு போல முக்கிய மானது. என்ன செய்ய முதலும் பிள்ளையாரை வணங்கி விட்டு தான் செய்ய வேண்டும். இறைவனை வணங்க நாள், நேரம், இல்லை. எந்த சூழலிலும் எந்த நேரத்திலும் எந்த காலத்திலும் வணங்க முடியும். இறைவன் பக்தனுக்கு அருள்வதே தவிர பதிலுக்கு எதனையும் பெற்றுக் கொள்வது இல்லை.

எங்கள் ஆத்மாவின் உள் உறைபவர் இறைவன் என்று பாபா சொல்கிறார். இறைவனை எந்த வடிவில் தியானம் செய்கிறோமோ அந்த வடிவில் எங்களுக்கு அவர் தோன்றுவார். முனிவரிடம் திருடன் பெரிய தங்கம் திருடினான். பின் முனிவரிடம் இருக்க முனிவர் கேட்டார் ராம் இனி என்ன வேண்டும். என்னிடம் இருந்தது தந்து விட்டேன். அப்பொழுது திருடன் சொன்னான் விலைமதிக்க முடியாத ஒன்று உங்களிடம் இருக்கு என்றான். என்ன என்று கேட்க முனிவரின் பற்றற்ற நிலை என்றான். ஆன்மீக கொள்கைக்கு இருக்க வேண்டிய குணம். அது இருந்தால் தான் அவைக்கு அதை கை கொள்ள முடியும்.


1. உற்சாகமான மனம்.
2. மனபக்குவம்
3. சோர்வு இல்லாமை. உதவி செய்யும் மனம்.
4. பெரியவர்கள் சொல்வதை கேட்டு நடக்க கூடியதை நடக்க முடியும்.
5. பற்றற்ற நிலை.

கோபம் செருக்கு எல்லையற்ற ஆசை இவைகள் அனைத்தும் எங்களை திசை தெரியாது இழுத்து செல்லும். உணவே இறைவன் அதை வீணடிக்கக் கூடாது. மற்றவர்களுக்கு உதவ வேண்டும். வருத்தக் கூடாது. மற்றவர்களை வருத்தாமல் எங்களையும் வருத்தாமல் இருந்தால் இறைவனால் ஆசீர்வதிக்கப் படுவோம். தீய உணர்வை அகற்ற வேண்டும். நல்ல உணர்வை மனதில் வளர விட வேண்டும். பிள்ளை தாயை சந்தோஷமாக வைத்து இருந்தால் பிள்ளைகள் சந்தோஷமாக இருப்பார்கள்.

அன்பு மட்டும் தான் நிரந்தரமானது. அதை விட மேலானது ஒன்றுமில்லை. நாங்கள் எங்கு இருந்தாலும் இறைவனே எமது சரணாலயம். இறைவன் எங்களை பாதுகாப்பார் என்ற நம்பிக்கையில் இருக்க வேண்டும். இறைவனை விட மேலானது ஏதும் இல்லை. என்று நினைப்பதே மிகச் சிறந்த பக்தி ஆகும். பொறாமை கான்சர் போன்ற வியாதி என பாபா சொல்கிறார். பாபா சொல்கிறார் ராமா, கிருஸ்ணா, கோவிந்தா, நாராயணா, என்று கவலை கஷ்டம் வரும் நேரம் சத்தமாக கூப்பிட்டால் எல்லா கஷ்டமும் நீங்கும். எவ்வளவு கல்வி கற்றாலும் ஆன்மீக கல்வி முக்கியம். உலகியல் கல்வி ஆறு போன்றது. ஆன்மீக கல்வி கடலை போன்றது.

பொது அறிவு இருந்தால் உத்தம குணம் பெற்றவர்களாக இருப்பார்கள். நித்திரை முளித்தால் நினைவு ஆற்றல் குறையும். நோய் எதிர்ப்பு சக்தி குறையும். புற்று நோய் கூட வரும். நல்ல எண்ணம் இராது. தாய் அன்பு செலுத்துவது போல பிள்ளையும் அன்பை தாயிடம் செலுத்த வேண்டும். மாம்பழம் சூடு மாங்காய் நல்லது. மாங்காய் குளிர்மையானது. அதில் நல்ல கொலஸ்ரோல் உள்ளது. ஆரோக்கியம் இல்லாத மனிதன் அரை மனிதன் ஆவான். அறம் (தருமம்) செய்வது தான் எங்களுக்கு பாது காப்பு அதை செய்ய வேண்டும். வெளியில் போகும் பொழுது கால் தடக்கினால் அந்த நிலத்தை தொட்டு கும்பிட்டு அந்த மண்ணை எடுத்து நெற்றியில் பூசவும்.

**முற்றும்.**



எனது கணவர்
அமரர் செல்லையா சற்குணநாதன்
ஆன்மீக வாழ்க்கையில்
பெருவிருப்புக் கொண்டவர். தன்னால்
முடிந்தவரை ஆன்மீக வாழ்க்கையை
வாழ முயற்சித்தவர். எதையும் நேரம்
தவறாமல் செய்வது அவரது
முக்கிய பண்பு.
அதிகாலையிலேயே துயிலெழுந்து தமது
வீட்டிற்கு அருகிலுள்ள வரதராஜா விந-
ாயகரை வழிபடச் சென்று விடுவார். சாய்
நிலையத்துடனும் நெருங்கிய
தொடர்பைக் கொண்டிருந்தவர். அவரது
நினைவாக இந்நூலை வெளியிடுவதில்
நான் மகிழ்ச்சியடைகிறேன்.